உதயன்




www.onlineuthayan.com

26 பக்கங்கள் சுடர் 28 கதிர் 042 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 23 திங்கட்கிழமை (07/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

## பிரதம நீதியரசர் விவகாரத்தில் நீதிமன்றத்தின்

# தீர்ப்பை மதிக்காவிடில் வெடிக்கும் போராட்டம்

### எச்சரிக்கிறது பொது எதிரணி

கொழும்பு, ஜனவரி 7

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அரசு தலை வணங்க வேண்டும். நீதிமன்றத்தைவிட நாடாளுமன்றமே உயர்வானது என்ற எண்ணத்துடன் இந்தத் தீர்ப்பை அரசு மதிக்காவிட்டால் நாடளாவிய ரீதியில் மக்கள் போராட்டங்கள் வெடிக்கும். இதனை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. இவ்வாறு அரசுக்குப் பொது எதிரணிக் கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க் கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பொது எதிரணிக் கட்சிகள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

இதன்போது ஐ.தே.கவின் மேல்மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்ததாவது:-

போர் முடிவுற்ற பின்னர் அரசு போரில் வென்றதைச் சொல்லிச் சொல்லியே தனக்குச் சாதகமான பலவிடயங்களைச் சாதித்தது. ஆனால் இப்போது அதே நிலைப்பில் நீதித்துறையுடன் முட்டிமோதி, சிக்கலில் மாட்டியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்

பார்க்க பக்கம் 4

## யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகள் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். போதனா வைத்தியசாலையில் இதுவரையும் 11 ஆம் இலக்க விடுதியில் இயங்கிய குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியின் நான்காவது மாடிக்கு நேற்றுமுதல் இடமாற்றப்பட்டுள்ளது.

இதேவேளை 22 ஆம் இலக்க விடுதியில் இயங்கிய பிரசவ விடுதி, குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு முன்னர் இயங்கிய 11 ஆம் இலக்க விடுதிக்கு மாற்றப்பட்டு வருகின்றது

- இந்தத் தகவலை யாழ். போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளரும் மருத்துவருமான எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறு

பார்க்க பக்கம் 4

## ஆளுநரின் செயலாளர் பதவிநீக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 7

வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் பிரத்தியேக செயலாளராக இருந்த சுமித் ஜெயக்கொடி பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் சகோதரரும் வர்த்தகருமான துவாரகேஸ்வரன் மீது அசிட் வீச்சு நடத்தியமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சுமித் ஜெயக்கொடி மீது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்தநிலையிலேயே அவரை வடமாகாண ஆளுநர் உடனடியாக பதவிநீக்கம் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## பலாலி விமான நிலைய பாதை புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

பலாலி விமான நிலையத்துக்கான போக்குவரத்துப் பாதையைப் புனரமைக்கும் பணி கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்புக்கென வடமாகாண நிதியிலிருந்து 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தினைப் பயன்படுத்தும் பயணிகளது நன்மை கருதியே குறித்த பாதை புனரமைக் கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீள்நிர்மாண வேலைகள், உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் மீள்நிர்மாண அமைச்சின் செயலாளர் எந்திரி எஸ்.ராஜேந்திராவால் இந்தப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் எந்திரி ரி.சிவராஜலிங்கம், பொறுப்பாளர்கள், விமானப்படை உயர் அதிகாரிகள் ஆகியோர் பாதைப் புனரமைப்பின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டனர். (ந-4)

## தாயும், 5 வயதுக் குழந்தையும் குழியிலிருந்து சடலமாக மீட்பு



கிளிநொச்சி, ஜன.7

கிளிநொச்சியில் வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டிருப்போரால் வெட்டப்பட்ட துரவு போன்ற குழி ஒன்றுக்குள் இருந்து இளம் தாயினதும், அவரது ஐந்து வயது ஆண் குழந்தையினதும் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

கிளிநொச்சி, பெரியபரந்தன் பகுதியில் வயல் ஒன்றில் உள்ள குழியிலேயே இந்த

பார்க்க பக்கம் 4

## நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஆதரவாக இன்று பேரணி

### கொழும்பில் அணி திரளுமாறு அழைப்பு

கொழும்பு, ஜன.7

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்றுச் செயற்படுமாறு அரசை வலியுறுத்தி தலைநகர் கொழும்பில் இன்று திங்கட்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் பிற்பகல் 2 மணிக்கு பொரளை ஹெம்பல் மைதானத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஹைட்பார்க் மைதானத்தை சென்றடையும்.

அதேவேளை, கட்சி பேதமின்றி அனைத்துத் தரப்பினரையும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்குப் போராடுமாறு ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்

பார்க்க பக்கம் 4

## அரசியல் தீர்வுக்கான தெரிவுக்குழுவில் தமிழ்க் கட்சிகள் பங்கேற்பது எப்படி?

### குற்றப் பிரேரணை விவகாரத்தை சுட்டிக்காட்டி ஐ.ம.மு. கேள்வி

கொழும்பு, ஜன.7

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்து ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கியுள்ளது தெரிவுக்குழு. இந்த நிலையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்க் கட்சிகள் எப்படிப் பங்கேற்க முடியும்? அந்தத் தெரிவுக்குழுவும் கேலிக்கூத்தான குழுவாகவே அமையும் என்பதை இப்போதைய தெரிவுக்குழு நிரூபித்துள்ளது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காகத் தமிழ்த் தலைவர்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றத் தேவையில்லை என்பதையே பிரதம நீதியரசருக்கு எதி

பார்க்க பக்கம் 4

## மீனவரைக் காணோம்

வடமராட்சி, ஜன. 7

வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்று அதிகாலை கட்டுமரத்தில் கடற்றொழிலுக்கு சென்ற, வடமராட்சி கிழக்கு ஆழியவளையைச் சேர்ந்த மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையான மயில்வாகனம் துரைசிங்கம் (வயது-57) என்ற மீனவரே இவ்வாறு

பார்க்க பக்கம் 4

## கைதான பல்கலை. மாணவர்கள் பொங்கலுக்கு முன் விடுதலை?

### உயர்கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன.7

தைப்பொங்கல் தினத்தன்று யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படாவிட்டால் அதனை மூடுவதற்கு தீர்மானித்துள்ளோம். இதேவேளை கைதாகியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் விடுவிக்கப்படக் கூடும் என நம்புகிறேன்- இவ்வாறு உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸா

பார்க்க பக்கம் 4

## கோத்தபாய விசாரித்த பின்னரே இனிமேல் இரட்டைக் குடியுரிமை

கொழும்பு. ஜன. 7

இலங்கையில் இரட்டைக் குடியுரிமை பெற விரும்புவோர், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவின் விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த இரட்டைக்குடியுரிமை வழங்கும் பணிகளை இலங்கை அரசு இந்த மாதம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

எனினும் இந்த விடயத்தில் கடும் இறுக்கத்தைப் பேணுவதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இனிமேல் இரட்டைக் குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிப்போர், கடுமையாக ஆய்வு செய்யப்படவுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக விண்ணப்பதாரிகள், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவினருக்கு முன்பாக

பார்க்க பக்கம் 4

EXPOAIR
your friend in the skies
வண்ணமயமான
கொழும்பு நகரத்திற்கான
சுற்றுலாவில் மகிழுங்கள்...




இனியும் தாமதிப்பது ஏன்?? உங்களது பதிவுகளுக்கு இப்பொழுதே முந்துங்கள்.
EXPO AVIATION (PVT) LTD.
No 141 F, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel: +94 21 2223891 / 2223790
Fax : +94 21 2226297 - Mobile : 0773
Email : jaffna@expoavi.com - Website: www.expoavi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் நீதியரசரை நியமிக்க முடியாது

## சட்டச் சிக்கல் என்கிறார் ஜனாதிபதி

பதில் நீதியரசரை நியமிப்பதில் சட்டச் சிக்கல் உள்ளது என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க குற்றப் பிரேரணையை எதிர்நோக்கியுள்ளதால், பதில் நீதியரசர் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தேசிய சுதந்திர முன்னணி, தேசிய அமைப்புகளின் ஒன்றியம் ஆகியவை கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அவ்வாறான நடவடிக்கையை முன்னெடுப்பதில் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகரவுக்குமிடையில் தொலைபேசி ஊடாக குற்றப் பிரேரணை விவகாரம் தொடர்பில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு பதில் பிரதம நீதியரசரொருவரை நியமிக்குமாறு குணதாச அமரசேகர ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, அவ்வாறு செய்வதில் சிக்கல் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரதம நீதியரசரொருவர் விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்தாலோ, நோய்வாய்ப் பட்டிருந்தாலோ அல்லது அந்தப் பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கு உடல் ரீதியான பாதிப்புகள் இருந்தாலோ பதில் நீதியரச ரொருவரை நியமிக்கமுடியும்.

இந்த விடயங்கள் அரசமைப்பின் 109 ஆவது பிரிவில் மிகவும் தெளிவான முறையில் கூறப்பட்டுள்ளன என சட்டவல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், நீதியரசருக்கு எதிராக விசாரணைகள் நடைபெறும் நிலையில், பதில் நீதியரசரொருவரை நியமிக்க முடியாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கிடையில், புதிய பிரதம நீதியரசராக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸை நியமிப்பது குறித்து அரச மட்டத்தில் மந்திராலோசனை நடத்தப்படுகின்றது என்றும், அதற்கு கடும்போக்குடைய அமைச்சர்களும், சிங்கள பேரினவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும் அரசிடம் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர் என்றும் அறிய முடிகின்றது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 78 ( ஏ) பிரிவுக்கமைய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு, பிரதம நீதியரசர் ஒருவரைக் குற்றவாளியென அறிவித்து தண்டிக்கும் அதிகாரம் இல்லை என்றும், எனவே, குற்றப் பிரேரணை விசாரணை அறிக்கை வலுவற்றது என்றும் உயர் நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானத்துக்கு அமைய மேன்முறையீட்டு நீதிமன்றமும் தீர்ப்பளித்துள்ளது.

இதனால், பிரதம நீதியரசருக்கு எதிரான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என மக்கள் மத்தியில் தற்போது கேள்வி எழுந்துள்ளது. குறிப்பாக தெரிவுக்குழு சட்டவலுவற்றது என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ள போதிலும், தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கையை விவாதத்துக்கு உட்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றில் நடைபெறும் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின் போது சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இது விடயம் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் விவாதத் திகதியை அறிவிப்பார்என்றும் தெரியவருகின்றது. (சி)

# ஈழத்தமிழர்கள் 11 பேரின் உண்ணாவிரதம் வாபஸ்

## ஏனைய 12 பேர் தொடர்கின்றனர்

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உண்ணாவிரதம் மேற்கொண்ட 23 ஈழ அகதிகளில் 11 பேர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

9 பேர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தற்போது, 36 பேர் உள்ளனர்.

இதில் 23 பேர் தங்களை திறந்தவெளி முகாமுக்கு அனுப்பக்கோரி, உண்ணாவிரதம் இருந்தனர். உடல் நிலை பாதிக்கப்பட்ட 20 பேர் செங்கல்பட்டு அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

முகாமில், மூன்று பேர் உண்ணாவிரதம் இருந்தனர். கடந்த வெள்ளிக்கிழமை அவர்களிடம் ஆட்சியாளர் சித்ரசேனன் பேச்சு நடத்தினார்.

நேற்று முன்தினம் பொலிஸ் அதிகாரிகள், வருவாய்த் துறை அதிகாரிகள் பேச்சு நடத்தினர்.

அதைத் தொடர்ந்து, மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களில் 8 பேர், முகாமில் உண்ணாவிரதம் இருந்த 3 பேர், தங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றனர். ஏனையோர் போராட்டத்தைத் தொடர்கின்றனர். (வ)

# முடிவுக்கு வந்தது நாகை மீனவர்களின் போராட்டம்

நாகப்பட்டினம் மீனவர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

நாகை மீனவர்கள் கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாமல் போராட்டம் நடத்தி வந்தனர்.

சுனாமிக்குப் பின்னர் கடல் பகுதியில் மீன்வளம் குறைந்துவிட்டது. இதனால் ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிக்கச் செல்ல நேரிடுகிறது. அந்தச் சமயங்களில் எல்லை தாண்டுவதாகக் கூறி இலங்கைக் கடற்படையினர் கைது செய்கின்றனர்.

இதனைத் தடுக்க அந்த நாட்டு அரசுடன் பேசி ஒப்பந்தம் செய்ய வேண்டும். இதனால் கைது நடவடிக்கையில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத் திருந்தனர்.

மீனவர்களின் பிரச்சினை குறித்து மத்திய அரசுடன் பேசி தீர்வு காண்பதாக தமிழக மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் நாகை, டாடா நகரில் நாகை மாவட்ட அனைத்துக் கிராம மீனவர்கள் சார்பில் மாவட்ட மீனவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் எல்லை தாண்டிச் செல்லும் விசைப்படகு மீனவர்களுக்கு 2 மாத காலத்துக்கு மீன்பிடிக்கத் தடையும், 2 லட்ச ரூபா அபராதமும் விதிக்கப்படும். பைபர் படகு மீனவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாஅபராத மும் ஒரு மாத மீன்பிடிக்கத் தடையும் விதிக்கப்படும்.

மீன்வளத்துறையில் உத்தரவாதத்தைத் தொடர்ந்து, மீனவர்கள் தங்களது போராட்டத்தை விலக்கிக் கொண்டு, மீன்பிடிக்கச் செல்லலாம்என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.(வ)

# வடக்கு மாகாணத்தில் 2011 இல் மட்டும் 38 ஆயிரம் மாணவர்கள் இடைவிலகினர்

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் போர் முடிவடைந்த பின்னர் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டில் மாத்திரம் நாடளாவிய ரீதியில் ஒரு லட்சத்து 26 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளனர். இவர்களில் வடமாகணத்தைச் சேர்ந்த மாணவர்களே அதிகம். 2011 ஆம் ஆண்டில் 38 ஆயிரத்து 321 மாணவர்கள் வடமாகாணப் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளனர். இடைவிலகலில் வடக்கு அடுத்தபடியாக கிழக்கு மாகாணம் விளங்குகின்றது. இந்த மாகாணத்தைச் சேர்ந்த 24 ஆயிரத்து 614 மாணவர்கள் 2011 ஆம் ஆண்டு இடை விலகியுள்ளனர் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இலவசக் கல்வி நடைமுறையில் இருக்கின்ற போதிலும், பாடசாலைகளில் இடை நிலை வகுப்புகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகிச் செல்வது கவலைக்குரியது என்று சிறுவர் பாதுகாப்பு நிறுவன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வறுமை காரணமாகவே மாணவர்கள் இவ்வாறு பாடசாலைகளில் இருந்து இடைவிலகிச் செல்வதாக ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டிருக்கின்றது.

வறுமையில் வாடும் குடும்பங்களில் சிறுவர்களே வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இதைவிட பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாதிருத்தல், ஏனைய அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலிருத்தல் போன்ற காரணங்களினாலும் மாணவர்கள் இடையில் தமது கல்வியைக் கைவிட்டுச் செல்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனிடையே பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவதைத் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதனையடுத்து 2012 ஆம் ஆண்டில் மாணவர்களின் இடைவிலகல் வீதம் குறையத் தொடங்கியிருப்பதாகவும் கல்வி அமைச்சு கூறியிருக்கின்றது. (ங)

# இன்னும் கடன் வேண்டும் சீனாவிடம் கெஞ்சும் அரசு

கொழும்பு. ஜன. 7

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விமான நிலையப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு சீனாவிடம் மேலும் 72 மில்லியன் டொலர்களை (9.1 பில்லியன் இலங்கை ரூபா) கடனுதவியைக் கோர இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கை அரசு குறித்த விமான நிலையப் பணிகளுக்காக ஏற்கனவே, 209 மில்லியன் டொலரை (26.6 பில்லியன் இலங்கை ரூபா) செலவிட்டுள்ளது.

இதில் 190 மில்லியன் டொலர் (24.2 பில்லியன் இலங்கை ரூபா) சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியிடம் இருந்து கடனாகப் பெறப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இலங்கையின் குடியியல் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கார ஜெயரத்ன, அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ள பத்திரம் ஒன்றில் மேலும் இரண்டு தேவைகளுக்காக மேலதிக நிதி தேவைப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக வேலைகளுக்கான செலவுக்கு 45.5 மில்லியன் டொலரும் (5.7 பில்லியன் இலங்கை ரூபா), விலை அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள செலவுகளை ஈடுசெய்ய 26.5 டொலரும் (3.3 பில்லியன் இலங்கை ரூபா) தேவைப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக நிதித் தேவைகளை ஈடுசெய்வதற்கு சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியிடம்இருந்து கடனுதவி கோரவும், மேலதிக வேலைகளுக்கான வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு சீனாவின் துறைமுக பொறியியல் நிறுவனத்துடன் உடன்பாடு செய்வதற்கும் அமைச்சரவையிடம் பிரியங்கார ஜெயரத்ன அனுமதி கோரியுள்ளார்.

சிறிலங்கன் எயர் லைன்ஸ் விமானங்களுக்கான தரிப்பிடம் மற்றும் அதற்கான பாதை, வெளிப்புற வீதி, சரக்கு முனையம் மற்றும் அதற்கான பாதை ஆகியவை இந்த மேலதிக வேலைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.(ங-சி)

# இலங்கையின் நிலைமைகளை ஆராய்கின்றோம் பொதுநலவாய மாநாடு பங்களிப்பும் பரிசீலனை

## கனேடிய அமைச்சர் சுமந்திரனிடம் தெரிவிப்பு



இலங்கையின் நிலைமை குறித்து கனடா முழுமையாக அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு , ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுதல் மனித உரிமைகளை மேம்படுத்தல் ஆகிய விடயங்களில் இலங்கை இவ்வருட நடுப்பகுதிக்குள் ஆக்கபூர்வமாக செயற்படாதபட்சத்தில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பான விடயத்தை கனடா தீவிரமான மறுபரிசீலனைக்குட்படுத்தும் என்று கனேடிய குடிவரவுத்துறை அமைச்சர் ஜேசன்கென்னே திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள கனேடிய அமைச்சர் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள கனேடியத் தூதுவரின் வாசஸ்தலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை சந்தித்தார். இதன் போதே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழர் பிரச்சினைத் தீர்வில் அரசின் இழுத்தடிப்புச் செயற்பாடுகள், வடக்கு கிழக்கின் தற்போதைய நிலைமை, மனித உரிமைகள் தொடர்பில் அரசின் கவனயீனம் உட்பட பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது சுமந்திரன், கனேடிய அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது தமிழ் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள், வடக்கு கிழக்கில் படைகளின் பிரசன்னம் போன்ற விடயங்களையும் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவற்றுக்கெதிராக குரல் கொடுக்கும் போது அச்சுறுத்தலுக்குள்ளாகும் நிலை இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள கனேடிய குடிவரவுத்துறை அமைச்சர், இலங்கையின் நிலைமை குறித்து கனடா முழுமையாக அவதானித்துக்கொண்டிருப்பதாகவும் தமிழர் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இலங்கை அரசுக்கே அவ்வப்போது அழுத்தங்களை வழங்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு, மனித உரிமைகள் மேம்பாடு ஜனநாயகத்தை நிலைநாட்டும் செயற்பாடுகள் பொறுப்புக்கூறும் கடப்பாட்டு ஆகியவற்றை இந்த வருட நடுப்பகுதிக்குள் இலங்கை அரசு வெளிப்படுத்தத் தவறினால் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பான யோசனையை அரசு மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிவருமென்றும் கனேடிய அமைச்சர் இதன்போது மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு நோயாளர் இரண்டு பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜன.7
டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு நேற்று முன்தினம் 2 பேர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த 5 நாள்களில் மாத்திரம் 13 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரி மற்றும் வேலணையைச் சேர்ந்தவர்களே நேற்றுச் சேர்க்கப்பட்டவர்களாவர். (ம-4)

## யாழ். நகர் விடுதியில் நகைகள், பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 7
யாழ். நாவலர் வீதியில் உள்ள விடுதி ஒன்றிலிருந்து நகைகள் உட்பட சுமார் 3 லட்சம் ரூபா பணம் மற்றும் பெறுமதிமிக்க 8 கமராக்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

தென்பகுதியிலிருந்து சுற்றுலா மேற்கொண்டு வடபகுதிக்கு வந்து விடுதியில் தங்கியிருந்தவர்களிடமிருந்தே இந்தப் பணம் மற்றும் உடைமைகள் திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது.

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. அதுதொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

## அகற்றப்பட்டது பழைமை வாய்ந்த அரச மரம்!

யாழ்ப்பாணம், ஜன.7
யாழ்.மனோகரா சந்திக்கு அருகில் கே.கே.எஸ். வீதியில் நின்ற பழைமை வாய்ந்த அரச மரம் வெட்டிச் சாய்க்கப்பட்டது.


வீதி அகலிப்புப் பணிகளுக்கு இடையூறு விளைவித்தமையால் இந்தப் பெரிய விருட்சம் அகற்றப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த அரச மரத்தின் கீழ் இருந்த விநாயகர் விக்கிரகம் மற்றும் வைரவர் சூலம் என்பன மனோகரா சந்தியில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பலாலி வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அருகில் இருந்த பழைமை வாய்ந்த மலை வேம்பும் வீதி அகலிப்புக்கு இடையூறாக இருந்த நிலையில் வெட்டி அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

கலந்துரையாடல்
யாழ்.மாநகரச சபையின் மன்ற கீதத்தை கருத்தாளமிக்க வகையில் மீள் பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாநகர சபையின் முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)



செம்மணி வீதியில் உள்ள மதகின் புனரமைப்புப் பணிகள் தற்போது மிகவும் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன. இந்த மதகு எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்பாக கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## கொலையாளியைக் கைது செய்யுமாறு படையினருக்கு மனு சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7
மண்டைதீவில் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட நான்கு வயதுச் சிறுமி சுதர்சினி குணசேகரத்தின் கொலையாளியை உடன் கைது செய்யுங்கள்.

அதிகரித்து வரும் கொலைச் சம்பவங்களுக்கு முடிவு கட்டுங்கள். இவ்வாறு மண்டைதீவு றோஜா வனம் சிறுவர் விளையாட்டுக்கழகம் வழங்கியுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலைக் குற்றவாளிகளுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுங்கள் எனும் தலைப்பில் முப்படைகளின் அதிகாரிகள் உட்பட 9 பேருக்கு மனுக்கள் வழங்கப்பட்டன.

அதில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மண்டைதீவில் வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்டவர் நான்கு வயது பாலகியான செல்வி சுதர்சினி குணசேகரம்.

இந்த கொலைச் சம்பவம் எம்மிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரம் பொது மக்களிடமும் குழந்தைகளிடமும் அச்ச உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயத்தில் குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

எனவே பாதுகாப்புப் படையினர் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து கொலையாளியைக் கைது செய்ய வேண்டும் என்று தயவுடன் கேட்டுக் கொள்கிறோம் -என்றுள்ளது. (ம-50)

# இந்திய மீனவர்கள் அத்துமீறலுக்கு இதுவரை முடிவு எட்டப்படவில்லை

## 15 ஆம் திகதி மீண்டும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன.7
*இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் இதுவரையில் முடிவுகள் எதுவும் எட்டப்படாத காரணத்தால் எதிர்வரும் 15 ஆம் திகதி போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.*

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை இலங்கை மற்றும் இந்திய அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினோம்.

இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்துகின்றமையால் கடல்வளம் அழிந்து வருகிறது.

தடைசெய்யப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்துகின்றமை, ட்றோலர் படகு, வெளி இயந்திரம் பொருத்தப் பட்ட நாட்டுப்படகு, தங்கூசி வலைகள் ஆகியவற்றை பயன்படுத்துகின்றமை போன்ற காரணங்களால் கடல்வளம் பெரியளவில் அழிந்து கொண்டு போகிறது.

இந்த நடைமுறையால் எம்முடைய மீனவர்களின் படகுகள், வலைகள் என்பனவும் நாசம் செய்யப்படுகின்றன.

அழித்த வலைகள், பாதிக்கப்பட்ட படகுகள் ஆகியவற்றுக்கு இலங்கை அரசு நட்டஈடு வழங்குவதில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில் கடலில் மீன்களின் இனப்பெருக்கக் காலத்தில் கடலில் செல்ல அனுமதி இல்லை. ஆனால் அவற்றுக்குரிய மீனவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படுகிறது. அத்துடன் இயற்கை இடர்களால் சேதமடையும் படகுகள், வலைகள் ஆகியவற்றை திருத்துவதற்காகவும் நட்டஈடு வழங்கப்படுகிறது.

இலங்கை மீனவர்களைப் பொறுத்தவரையில் அரசால் சலுகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

இவற்றை வலியுறுத்திக் கடந்த நவம்பர் மாதம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதேபோன்று வடமாகாணத்திலுள்ள மீனவர்கள் மாவட்ட ரீதியாகவும் போராட்டங்களை நடத்தி அரச அதிபர்கள், இந்திய துணைத் தூதுவர், கடற்படை தளபதி ஆகியோருக்கு மனுவும் கையளிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் மீனவர்களுக்குப் பயன் ஏதும் கிட்டவில்லை.

யாழ்.மாவட்டத்தில் மட்டும் 25 ஆயிரம் குடும்பங்கள் கடற்றொழிலையே வாழ்வாதாரமாக நம்பியுள்ளன. இந்த நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி மீண்டும் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளோம் எனவும் மேலும் தெரிவித்தார். (ம-13)

## நயினாதீவில் மின் தடையால் மக்கள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.7
நயினாதீவுப் பிரதேசத்துக்கான பகல் நேரம் மின் விநியோகம் தடை செய்யப்பட்டு வருவதால் பிரதேச மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் மின் மார்க்கங்களில் திருத்த வேலைகள் இடம்பெறுவதாலேயே மின்சாரம் தடைப்படுகிறது என்று கூறப்பட்டது.

மரத்திலான மின் கம்பங்கள் அகற்றப்பட்டு சிமெந்திலான தூண்கள் நடப்பட்டு வருகின்றன. மின் விநியோக மார்க்கத் திருத்தப் பணிகள் முடிவுற்றதும் மின் விநியோகம் சீராக இடம்பெறும் என்று கூறப்பட்டது. (ம-17)

## மீசாலையில் பொங்கலன்று உழவர் தின விழா

தென்மராட்சி, ஜன.7
மீசாலை வடக்கு வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞானக் கோட்டத்தின் உழவர் தின வழிபாடு எதிர்வரும் 14 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறும்.

அதிகாலை 4 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை மகா மந்திர நிறைவு, அகவல் பாராயணம், வழிபாடு ஆகியவை இடம்பெறும்.

மாலை 6.30 மணிக்கு ஜீவகாருண்யமும் உழவுத் தொழிலும் பற்றிய சிறப்புக் கருத்தரங்கு இடம்பெறும்.

ஐ.இராமானுஜம் (இந்தியா), செ.சுப்பிரமணியம் க.ராஜன், மருத்துவர் து.குமரநாதன், கே.தயானந்தன், க.கேதீஸ்வரன் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர். (ம-9)

## வெள்ளம் தேங்காதவாறு திருநெல்வேலி சந்தை திருத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.7
திருநெல்வேலி பொதுச் சந்தையின் கீழ் மாடிக்கட்டடத்தில் வெள்ளம் தேங்காதவாறு புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அண்மையில் பெய்த மழை காரணமாகச் சந்தையின் கீழ் தளத்தில் வெள்ளம் தேங்கிக் காணப்பட்டது. இந்த வெள்ளத்தால் சேறும் சகதியுமாக இந்தப் பகுதி காணப்பட்டமையால் வியாபாரிகளும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.இந்த நிலையில் உடனடியாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## நாகவிகாரை இறங்குதுறை நவீன முறையில் புனரமைப்பு

### திறந்து வைப்பார் ஜனாதிபதி

நயினாதீவு நாகவிகாரைக்குச் செல்லும் இறங்குதுறை நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டரைக் கோடி ரூபா செலவில் இந்த இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த இறங்குதுறையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி நயினாதீவுக்கும் செல்லவுள்ளார். அதன்போது இந்த இறங்குதுறையையும் திறந்து வைக்கவுள்ளார் என்றும் கூறப்பட்டது. (ம-17)

## சாவகச்சேரி வணிகர் மன்ற தலைவருக்கு அஞ்சலி நிகழ்வு



தென்மராட்சி, ஜன.7
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் தலைவராக பணியாற்றிய வேளையில் சாவடைந்த அமரர் ச.நமசிவாயத்தின் 19 ஆவது நினைவு நாள் அஞ்சலி நிகழ்வு நேற்று கைத்தொழில் வணிக மன்ற நினைவு மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர் விருந்தினராகக் கலந்துகொள்ள பெருமளவு வணிகர்கள் நிகழ்வில் பங்குபற்றி அமரர் ச.நமசிவாயத்தின் உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி உரையை மன்றத் தலைவர் சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் கோ.சேதுகாவலர் உட்படப் பலர் நிகழ்த்தினர். (ம-9)

## வர்த்தக நிலையங்கள் பொங்கலுக்காகத் திறப்பு

தென்மராட்சி,ஜன.7
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வணிக நிலையங்கள் தைப்பொங்கலை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வியாபாரங்களுக்காக திறந்திருக்கும் என வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன சிறுவரை கண்டறிய ஜப்பான் நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜன. 7

காணாமல் போன சிறுவர்களை தேடிக்கண்டு பிடித்தல், அவர்களுடைய பெற்றோரையும் சொந்தக்காரர்களையும் ஆதரித்தல், அவர்களுக்கு உதவுதல், தேவைப்படும் ஆவணங்களை பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றுக்காக ஜப்பான் அரசு யுனிசெப் அமைப்பினூடாக 4 லட்சத்து 45 ஆயிரம் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இதன்மூலம் காணாமல்போன சிறுவர்களைத் தேடிக் கண்டறியும் முயற்சிகள் முனைப்படைவதுடன் அவர்களது குடும்பத்தாரது உளநலனும் பேணப்பட வேண்டும் என்பதே ஜப்பானிய அரசின் நோக்காகும். இதனை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டத்துக்காகவே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த செயற்திட்டத்தின் ஆரம்ப வைபவம் கொழும்பலுள்ள ஜப்பானியத் தூதரகத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் ஜப்பானிய தூதுவர் நொபகிட்டோ கோபோ, யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி ஜனாபட றேசா கொசெல்னி,மற்றும் வடமாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டனர். (ங)



கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு அண்மித்த பகுதியில் வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த உழவு இயந்திரம் ஒன்றின் மீது அதிவேகத்தில் வந்த ஓட்டோ ஒன்று மோதியது. இதில் குறித்த ஓட்டோ பலத்த சேதத்துக்குள்ளாகியது.

## நீதிமன்றத்தின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

றில் தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்' மனுக்கள் தொடர்பில் அரசமைப்பின் பொருட்கோடலை உயர் நீதிமன்றத்திடம் மேன்முறையீட்டு நீதிமன்றம் கோரியிருந்தது.

இதன்பிரகாரம், உயர் நீதிமன்றத்தால் அரசமைப்புத் தொடர்பில் அனுப்பிவைக்கப்பட்டிருந்த பொருட்கோடலில், ''நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் சட்டம் அல்ல. எனவே, நிலையியற் கட்டளையின் 78(ஏ) பிரிவுக்கமைய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சட்டவலுவற்றது என்பதால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையும் வலுவற்றது'' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரதம நீதியரசர் தாக்கல் செய்திருந்த 'ரிட்' மனு கடந்த மூன்றாம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உயர் நீதிமன்றத்தின் மேற்படி சட்ட வியாக்கியானத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

இதனையடுத்து, உயர் நீதிமன்றத்தின் பொருட்கோட்லை ஏற்கப்போவதில்லை என்று அரசு அறிவித்தது. இந்நிலையிலேயே மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று அதன் பிரகாரம் செயற்படுமாறு அரசை வலியுறுத்தி ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கத்தால் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படவுள்ளது. (ங)

## அரசியல்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிரூபணமாக்கியுள்ளது.

குற்றப் பிரேரணை தொடர்பான தெரிவுக்குழு நடவடிக்கைகளை நாட்டு மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், சர்வதேசத்துக்கும் நியாயப்படுத்தி, அவர்கள் அதில் திருப்திப்படக்கூடியவகையில் நடைமுறைகளை மேற்கொள்ளாத அரசை நம்பி, வரலாற்று ரீதியான அரசியல் தீர்வுக்காக எவ்விதம் தெரிவுக்குழுவில் தமிழ்த் தலைமைகள் பங்குகொள்வது?

இனவாதிகளைக் கொண்டுள்ள இந்த அரசிடமிருந்து திருப்திகரமான ஒரு நிரந்தரத் தீர்வை எதிர்பார்க்க முடியுமா?

இராணுவத்தால் பலவந்தமாக இணைத்துக்கொள்ளப்பட்ட தமிழ்ப் பெண்களில் ஒருவர் அங்கிருந்து வெளியேற விரும்புகிறார் என்பதைக் கூறி குறித்த பெண்ணை விடுதலை செய்வதற்காகத் தமிழ் அரச வைத்திய அதிகாரியான சிவசங்கர் குறித்த இராணுவ முகாமுக்குச் சென்றுள்ளார்.

அங்கு சென்ற அவரை விடுதலைப்புலி எனக் கூறி கைதுசெய்த இராணுவத்தினர் பயங்கரவாதத் தடைச்சட் டத்தின்கீழ் தடுத்துவைத்துள்ளனர். இது எந்தவிதத்தில் நியாயமானது? எனவே, குறித்த வைத்தியரை விடுதலை செய்வதற்குப் பாது காப்பு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தர விட வேண்டும் - என்றார். (ங-சி)

## மீனவரை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

காணாமல் போயுள்ளார்.

நேற்று இரவுவரை இவரைத் தேடும்பணி கடலில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. எனினும் அவர் மீட்கப்படவில்லை.

தனது கட்டுமரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இவர் சுழியில் அகப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. (ங-16-8)

## கோத்தபாய...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நேரில் தோன்றி விசாரணை ஒன்றை எதிர்கொள்ள வேண்டும்.

இந்தக் குழுவில் இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம, பொதுநிர்வாக அமைச்சின் செயலர் பி.பி.அபயகோன் ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவினர் விண்ணப்பதாரியின் தொழிற்தகைமை, முதலீட்டு திறன், இரட்டைக் குடியுரிமைக்கான தேவை குறித்து விசாரணை நடத்தி, திருப்தி அடையும் பட்சத்திலேயே விண்ணப்பதாரிக்கு இரட்டைக் குடியுரிமையை இலங்கை அரசு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-சி)

## தாயும்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இரு சடலங்களும் நேற்று பகல் 1.10 மணியளில் மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சுகுமார் நிசாந்தினி (வயது-30), சுகுமார் கிருத்திகன் (வயது-5) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

கணவருடன் வசித்து வந்த குறித்த பெண் தனது குழந்தையுடன் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளில் வீட்டில் இருந்து வயல் பக்கமாகச் சென்றுள்ளார். நீண்டநேரமாகியும் மனைவியையும், பிள்ளையையும் காணாததால் கணவரும், உறவினர்களும் தேடி அலைந்தனர். இந்தத் தேடுதலின் போது நேற்றுக்காலை 8 மணியளவில் நீர் நிறைந்த குறித்த குழியை அவர்கள் பார்த்தனர். அப்போதே குழந்தையும், தாயும் சடலங்களாக அந்தக் குழியில் மிதப்பது தெரிய வந்தது. இதன்பின்னர் பொலிஸாருக்கு, கிராம அலுவலருக்கும் இது குறித்துத் தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸாரும், கிராம அலுவலரும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்பின்னர் அங்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் குழியில் இருந்த இரு சடலங்களையும் பார்வையிட்டார். விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை மருத்துவ பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இதேவேளை,

''குறித்த பெண்ணின் குடும்பத்தில் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டுள்ளன. அதனால் அவர் மன நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் பெண்ணினதும் குழந்தையினதும் இறப்பில் எமக்குச் சந்தேகம் இருக்கின்றது'' என்று உறவினர்களும் பெண்ணின் சகோதரர்களும் நீதிவானிடம் தெரிவித்தனர். இதனையடுத்து உயிரிழந்த பெண்ணின் கணவர் மற்றும் அவரது உறவினர்கள் ஆகியோரின் வாக்குமூலங்களைப் பெற்று, அவர்களை எதிர்வரும் 21ஆம் திகதி மன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ங-6-9)

## கைதான...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நாயக்க தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. தமிழோசைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழகக் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்தவாரம் உயர் கல்வி அமைச்சுக்கும் பல்கலை நிர்வாகத்தினருக்கும் இடையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க பி.பி.சிக்கு மேலும் தெரிவித்ததாவது:

தைப்பொங்கல் தினமான எதிர்வரும் திங்கட்கிழமை பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் உயர் கல்வி அமைச்சின் பெருமளவு நிதி விரயமாக்கப்படும். இதனைக் கருத்தில் கொண்டு, குறித்த தினத்தில் யாழ். பல்கலைக்கழகம் செயற்படாவிட்டால் அதனை மூடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுக்கவேண்டி ஏற்படும்.

யாழ். பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் எவ்வித தங்கு தடங்கலுமின்றி நடைபெற்றன. சித்த மருத்துவத் துறை, நுண் கலைத்துறை போன்ற துறைகளின் கல்விப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. எனினும் கலை, வர்த்தக, முகாமைத்துவ மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணித்த காரணத்தினாலேயே கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்டன.

பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. விசாரணைகளில் முன்னேற்றம் குறித்து வாராவாரம் ஆராயப்பட்டு வருகின்றன. அதன்போது அந்த மாணவர்கள் சட்டத்துக்குப் புறம்பாகப் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரியவரின் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவார்கள்

எனினும் அவர்கள் நால்வரும் தைப்பொங்கலுக்கு முன்னராக விடுவிக்கப்படுவார்கள் என நம்புகின்றேன்- என்றார். (ங-16)

## யாழ்....

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கையில் :-

பிரசவ விடுதி அமைந்துள்ள கட்டடத்தை இடித்துப் புதிதாக நிர்மாணிக்க வேண்டியுள்ளது. அதற்கான முன்னேற்பாடாகவே பிரசவ விடுதியிலுள்ளவர்கள், முன்னர் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு இயங்கிய 11 ஆம் இலக்க விடுதிக்கு மாற்றப்பட்டு வருகின்றனர் - என்றார். (ங-4)

## தீர்ப்பை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கிய வியாக்கியானத்துக்கமைய மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அற்கு மாறாக நீதித்துறையின் சுயாதீனத்தைப் பலவந்தமாகக் கட்டுப்படுத்த அரசு எண்ணினால் நாட்டில் பெரும் மக்கள் கிளர்ச்சி நாட்டில் ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு வசதிவாய்ப்புகளை வழங்கி, தன்பக்கம் அவர்களை இழுத்து, குறுக்குவழியினூடாகவே அரசு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றது.

இத்தகைய குறுக்குவழிப் பெரும்பான்மையால் ஏற்பட்ட மமதை காரணமாக நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்காமல் அரசு செயற்படுமாயின் நாட்டில் பெரும் மக்கள் போராட்டம் வெடிக்கும் - என்றார்.

இதன்போது நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விவகாரத்தில் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது. அதாவது, குற்றவியல் பிரேரணை விசாரணை நடவடிக்கைகளில் நீதிமன்ற செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதன்படி நீதிமன்ற செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தால் குற்றவியல் பிரேரணை விவகாரத்தை முன்கொண்டு செல்லலாம்.

குற்றவியல் பிரேரணை விவகாரம் தொடர்பில் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, ராஜித சேனாரத்தின ஆகியோர் தெரிவிக்கும் கருத்துகள் பந்து இல்லாமல் பாதையில் கிரிக்கெட் விளையாடுவது போன்றதாகும் - என்றார்.

இதன்போது மௌபிம மக்கள் கட்சியின் பிரதிநிதி ஹமீன் கருத்துத் தெரிவிக்கையில்,

நீதித்துறை, நிறைவேற்றுத் துறை, சட்டவாக்கத்துறை ஆகிய மூன்றும் ஒரு அடுப்பின் மூன்று கற்கள் போன்றவை. இவற்றின் மேல்தான் ஜனநாயகம் என்ற பாத்திரம் இருக்கிறது. எப்போதுமே இந்த மூன்றும் சரிசமமாக இருக்க வேண்டும். இதில் ஒன்று மேலுயருமானால் கூட ஜனநாயகம் என்ற பாத்திரம் நெருப்பில் விழுந்து விடும்.

இந்த மூன்று துறைகளிலும், நீதித்துறை மட்டுமே பக்கச்சார்பற்றதாகச் செயற்படும்.

குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டபின்னர் பிரதம நீதியரசர் பதவிவிலகாமல் தனது கொள்கையில் உறுதியாக இருக்கிறார். ஒருவேளை அவர் பதவி விலகியிருந்தால் இந்த அரசு, தமக்கேற்ற ஒருவரை பிரதம நீதியரசராக நியமித்து, நீதித் துறையின் சகல கட்டமைப்புக்களையும் பக்கச்சார்பானதாக மாற்றியிருக்கும் - என்றார்.

இதேவேளை,

அரசமைப்புக்கு எதிராகச் செயற்பட்டால் மக்கள் போராட்டம் ஒன்றை நடத் தத் திட்டமிட்டுள்ளோம் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சபாநாயகர், அரசு, எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோர் அரசமைப்புக்கு எதிராகச் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் உரிமை நாட்டின் பொதுமக்களுக்குக் காணப்படுகிறது.

உழைக்கும் வர்க்கத்தினர், புத்திஜீவிகள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள் ளோம். சட்ட விளக்கம் அளிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்குக் காணப்படுகிறது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நீதிமன்றம் ஏற்கனவே சட்ட விளக்கத்தை அளித்துள்ளது.

இந்த சட்ட விளக்கத்தை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் சட்ட விளக்கத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று சபாநாயகர், அரசு மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளனர். அது அரசமைப்புக்கு விரோதமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றுக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிடும் தரப்பினருக்கு தண்டனை விதிக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை விமர்சனம் செய்த குற்றத்துக்காக தற்போதைய உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு நீதிமன்றம் தண்டனை விதித்திருந்தது. அதே நடைமுறை ஏனையவர்கள் விடயத்திலும் பின்பற்றப்பட வேண்டும்.- என் றார். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நினைத்ததைச் செய்து முடிக்கும் முன்னோட்டம் அரங்கேறுகிறதா?

நவம்பர் 6ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய திவிநெகும (வாழ்வெழுச்சித் திட்டம்) சட்டமூலம் நாளை செவ்வாய்க்கிழமை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்களிப்பு நடத்தப்படவுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றவியல் விசாரணைக்கு வாழ்வெழுச்சித் திட்ட சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பே பிரதான காரணம் என்ற கருத்து நிலவுவதால் இந்தச் சட்டமூலம் உள்நாட்டின் கவனத்தை மட்டுமல்லாது வெளிநாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அரசமைப்பின் 154ஜி(3) இன் பிரகாரம் மாகாணசபைகளுக்கான பட்டியலில் இடம்பெற்றுள்ள விடயங்களைக் கொண்ட சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு, சகல மாகாண சபைகளும் அங்கீகாரம் வழங்கினால் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும்.

மொத்தம் உள்ள 9 மாகாணசபைகளில் ஒரு மாகாணசபை அங்கீகாரம் அளிக்காவிட்டாலும் சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற முடியாது. அதனை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படும்.

வடமாகாணசபை இயங்காததால் வடமாகாண ஆளுநர் வழங்கிய ஒப்புதல் மாகாணசபை வழங்கிய ஒப்புதலாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இச்சட்டமூலத்தில் அரசமைப்புக்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டிய இருவிடயங்கள் உட்பட 10 விடயங்களில் திருத்தம் செய்துவிட்டு, அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது; பாடாய்படுகிறது.

மாகாணசபை முறைமையை இனப்பிரச்சினைக்கான தீர்வாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை அடிப்படையாக வைத்து அதிகாரப் பகிர்வுக்கான பேச்சுகளை ஆரம்பிக்கவே அது விரும்புகிறது. அதாவது அரசமைப்பின் பிரகாரம் மாகாணசபைகளுக்குள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்புக் கோருகிறது. அதன் அதிகாரங்கள் பறிக்கப்படுவதைக் கடுமையாக எதிர்க்கிறது.

அபிவிருத்திக்காக மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பரந்துபட்ட அதிகாரங்களை வாழ்வெழுச்சி சட்டமூலம் மத்திய அரசுக்கு வழங்க வகைசெய்கிறது. அதன்மூலம் நாட்டின் முழு அபிவிருத்தி சார்ந்த அதிகாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் ஆளுகைக்குள் வந்துவிடும்.

இத்தகைய பின்புலத்தில், அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மையினக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக முன்னணி ஆகியவற்றுக்கு சட்டமூலத்தை ஆதரிக்க வேண்டாம் என்று கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை இன மக்களின் கட்சிகள் வாழ்வெழுச்சித் திட்டம் சட்டமூலத்தை எதிர்த்தால், அரசினால் அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்ற முடியாது போய்விடும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசு அதனை நிறைவேற்றத் தவறுமானால் தற்போது இடம்பெற்றுவரும் நீதித்துறை, சட்டவாக்கம் மோதலில் நீதித்துறைக்கு ஒரு 'பிளஸ் பொயின்ட்' ஆகிவிடலாம்.

அதனாலேயே வாழ்வெழுச்சித் திட்ட சட்டமூலத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அடம்பிடித்து வருகிறார். அதற்கு ஆதரவளிக்காதோர் நாட்டுப் பற்றற்றோர் என்று அவர் தெரிவித்திருப்பது, அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மையினக் கட்சிகளை மனதில் கொண்டே என்பதனை எவரும் புரிந்துகொள்ளக்கூடியதே.

அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாணசபையில் வாழ்வெழுச்சித் திட்டம் சட்டமூலம் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டபோது ஆதரவாக வாக்களித்தது. அதனால் கட்சிக்குள் பிரச்சினையும் ஏற்பட்டது.

நாளை நாடாளுமன்றத்தில் இச்சட்டமூலம் விவாதிக்கப்பட்டு வாக்களிப்புக்கு விடப்படும்போது முஸ்லிம் காங்கிரஸ் சட்டமூலத்தை ஆதரிக்குமா? எதிர்க்குமா? இன்னும் முடிவு இல்லை என்று கட்சி கூறுகிறது. வீறாப்புப் பேசுவதும் சரணாகதி அடைவதும் அரசியல் தலைவர்களின் வழமையான தந்திரோபாயங்கள் என்பதனைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

வடமாகாணசபை இயங்காத நிலையில், அதன் ஒப்புதல் பெறப்படாத நிலையில், இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படுவது வடமாகாண மக்கள் மீது திணிக்கப்படும் ஒன்றாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை; அது விவாதத்துக்கு உரியதுமல்ல என்றாக்கப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற பெயரில் வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகள் குழி தோண்டிப் புதைக்கப்படுகின்றன.

போர் வெற்றியின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்துடன் இப்பகுதி வாழ் மக்களின் அரசியல் உரிமைகளாயினும் சரி, அடிப்படை உரிமைகளாயினும் சரி, மனித உரிமைகளாயினும் சரி அவற்றைத் தறித்து வீழ்த்துவதற்கு அரசு தயங்காது என்பதற்கான குறியீடே, முன்னுதாரணமே வாழ்வெழுச்சித் திட்டம்.

இலங்கையின் இன்றைய அரசின் மூன்றில் இரண்டு பலத்தின் மூலம் ஆற்றப்படும், செயலாக்கப்படும் எதனையும், எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதற்கான அரசின் முன்னோட்டம் இது. அதனை எந்தக் கொம்பனாலும் தடுக்க இயலாது என்றாகிவிட்டது...?

# வன்முறைகளால் பாதித்த பெண்களுக்கு இலவசமாக உளவள ஆலோசனைகள்

### வழங்கத் 'தேவை நாடும் மகளிர்' அமைப்பு முன்வந்தது

யாழ்ப்பாணம், ஜன. 7

வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தேவையான உளவளத் துணை ஆலோசனைகளை இலவசமாக வழங்கத் தேவை நாடும் மகளிர் அமைப்பு முன்வந்துள்ளது.

இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் சகல விதமான வன்முறைகளுக்கும் எதிராகக் குரல் கொடுத்துச் செயற்படும் அமைப்பாகும். இது சமூக சேவைத் திணைக்களத்தின் கீழ் 1987 ஆம் ஆண்டு அரச சார்பற்ற அமைப்பாக பதியப்பட்டு வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக வீட்டு வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு இன, மத, மொழி பேதமின்றி உளவளத்துணை, சட்ட உதவி, சட்ட ஆலோசனை ஆகியவற்றை வழங்கி அவர்களின் உள ஆற்றுப்படுத்தலுக்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

வடமாகாணத்தில் குறிப்பாக தமிழர்களின் மொழி உரையாடலுக்கு அமைவாக வார நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை தொடர்பாடல் ரீதியாக உளவள ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

யாழ். மாவட்டத்தில் காரைநகர், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் நேரடியாக பெண்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி அதற்கான ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது இந்த அமைப்பு.

குறிப்பாக பெண்களின் உரிமைகள் என்ன? அவற்றை சமூகத்தில் எவ்வாறு தக்க வைப்பது, குடும்ப வன்முறை ஏற்பட்டால் அதற்கான மாற்று நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ள முடியும் போன்ற ஆலோசனைகளையும், சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக்கான உளவள ஆலோசனை நிலையம் சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

## உயிர்வாழ் சான்றிதழ்களை உடன் வழங்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 7

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்கள் தமக்கான உயிர்வாழ் சான்றிதழ்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக தமது பகுதி கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தி ஒப்படைக்க வேண்டும்.

தவறின் பெப்ரவரி மாதத்தில் இருந்து ஓய்வூதியம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என்று நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கூறியுள்ளார். (ம-7)

## 'திவிநெகும'வை நிறைவேற்றுவோம்

### அமைச்சர் பஸில் அதிரடி

'திவிநெகும' சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற அரசால் முடியும். உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருந்த திருத்தங்களையும் இதன்போது அரசு கவனத்தில் கொள்ளும். 'திவிநெகும' சட்டமூலம் நிறைவேற ஆதரவளிக்காதோர் நாட்டுப் பற்றற்றோர் என்றே கருதவேண்டிவரும்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார். நாளை செவ்வாய்க்கிழமை 'திவிநெகும' சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் விடயம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'திவிநெகுமவை' நிறைவேற்றுவதில் எங்களுக்கு எந்தச் சவாலும் இல்லை. நாங்கள் இதன்போது உயர்நீதிமன்றத்தின் சிபாரிசுகளையும் கருத்தில்கொண்டிருக்கிறோம். மாகாண சபைகளின் அங்கீகாரத்துக்காக அனுப்பினோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்பதையும் கவனத்தில்கொண்டுள்ளோம். சிபாரிசு செய்யப்பட்ட சிலதிருத்தங்களுடன், நாங்கள் இதனை நிறைவேற்றுவோம். -என்று மேலும் கூறினார். (ம)

## வேலணையில் 'ரெட்லேடி' இம்முறை நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம், ஜன. 7

வேலணை தெற்கில் விவசாயி ஒருவரால் மேற்கொள்ளப்பட்டு வரும் உயர் இனத்தைக் கொண்ட 'ரெட்லேடி' என்ற பப்பாசி இனம் நல்ல விளைச்சலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த விவசாயி சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 'ரெட்லேடி' உயர் இன பப்பாசிப் பயிரை மேற்கொண்டு வருகின்றார்.

குறித்த விவசாயி தனது விவசாய நிலத்தில் பயிரிடப்பட்ட இந்த பப்பாசியை தீவகம் முழுவதும் விநியோகிப்பதற்கு போதுமானதாக இருப்பதாக கூறினார். இதே வேளை, குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் நல்ல இனத்தைச் சேர்ந்த பப்பாசிப் பயிர்ச் செய்கையிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது இந்தப் பப்பாசிப் பழங்கள் சந்தைக்கு வந்துள்ள அதேசமயம் அவற்றின் விலை சற்று வீழ்ச்சியடைந்தும் காணப்படுகின்றது. (ம-17)

## நாவற்குழியில் விகாரை அமைக்க ஏற்பாடு

### மக்கள் விசனம்

நாவற்குழி, ஜன. 7

நாவற்குழி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் புத்த விகாரை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் தென்னிலங்கையைச் சேர்ந்த குடும்பங்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியமர்ந்து வசித்து வருகின்றனர்.

இந்தப் பகுதியில் பௌத்த மதகுருவின் வாசஸ்தலம் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு தற்போது பௌத்த விகாரை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக அதிகார சபைக்கு அந்தப் பகுதி மக்கள் பல தடவைகள் அறிவித்தும் எந்தவொரு தடுப்பு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை, நாவற்குழி ரயில் நிலையத்துக்கு சொந்தமான காணியில் தமிழ் மக்கள் தற்காலிகமாக போடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் ரயில்வே திணைக்களத்தினரால் அப்புறப்படுத்தப்பட்டன. அத்துடன் அங்கு தற்போது நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு வர்த்தக நிலையம் நடத்தப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (ம)

## வடமராட்சி கிழக்குச் சங்கத்துக்கு விரைவில் கிளைக் குழுத் தேர்தல்

### முன்னேற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம், ஜன. 7

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு விரைவில் கிளைக்குழுத் தேர்தலை நடத்தி புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான முன்னேற்பாடுகளை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே சங்கத்தின் கிளைகளில் வாக்காளர் இடாப்புகள் கடந்த காலப் போர் இடர்களால் காணாமல் போயுள்ளன.

வாக்காளர் இடாப்புகள் காணாமல் போயுள்ளதை அடுத்து கிளைகளில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்த பின்னர் அந்தக் கிளைக் குழுத் தேர்தல் நடத்தப்பட்டு கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான புதிய உறுப்பினர்கள் விரைவில் பதிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## உள்ளூராட்சி தேசிய மாநாடு அலரிமாளிகையில் நாளை

யாழ்ப்பாணம், ஜன. 7

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி தேசிய மாநாடும் சுவர்ணபுரவர விருதுகள் வழங்கல் நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கொழும்பு அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா பிரதி, அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க ஆகியோரின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிகழ்வுக்குத் தலைமை வகிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள், அனைத்து உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், துணைத்தலைவர்கள் உள்ளிட்டோர் விசேட விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.ஏ. கே.ரணவக்க கூறியுள்ளார். உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன. (ம-8-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தவித வசதிகளுமின்றி கிளிநொச்சி பஸ் நிலையம்

அக்கராயன், ஜன. 7

கிளிநொச்சி நகரத்தில் பஸ் நிலையம் சீராக அமைக்கப்படாமையினால் மக்கள் மழை, வெய்யில் காலங்களில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் கிளிநொச்சி நகருக்கு வந்து செல்கின்றனர். இவர்கள் தத்தமது இடங்களுக்கு செல்வதற்கு நீண்ட நேரம் காத்திருக்கவேண்டியுள்ளது. இதன்போது மழை, வெய்யிலுக்கு ஒதுங்குவதற்குக் கூட சீரான கொட்டகைகள் எதுவும் இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. முதியவர்கள், பெண்கள், சிறுவர்கள் தினமும் அவதியுறுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அத்துடன் பஸ் நிலையத்துக்குரிய மலசலகூடங்களும் சீராக இல்லாததால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

(ஜ-18)



கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் புதிதாக விஷ்ணு ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய தூண்களுடன் துரித கதியில் உருப்பெற்று வரும் ஆலயத்தின் தோற்றம். (ந-18)

## முத்துஜயன்கட்டு குள வாய்க்கால்களை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 7

முத்துஐயன்கட்டுக் குளத்தில் நீர் நிரம்பியிருந்தாலும் அதன்கீழ் உள்ள வாய்க்கால்கள் புனரமைக்கப்படாமையால் எதிர்காலத்தில் பயிர் செய்கையின் போது நெருக்கடி ஏற்படும் என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழுள்ள வாய்க்கால்கள் அனைத்தும் இடித்து தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றைப் புனரமைத்துத் தருமாறு பலதடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எதுவும் நடக்கவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த ஆண்டிலாவது வாய்க்கால்களை புனரமைத்து விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எமது காணிகளுக்கான வாய்க்கால் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டுள்ளனர்.

(ஜ-500)

## வவுனியாவில் டெங்கு தீவிரம் நேற்று முன்தினம் சிறுமி சாவு

**டெங்கால் பாதிக்கப்பட்ட நிலையில் வவுனியா தேக்காவத்தை ஆலடிப் பகுதியைச் சேர்ந்த செரீன் ஏஞ்சலின் டெக்ஸ்ரத் நைல்ட் (வயது 3) என்ற சிறுமி உயிரிழந்துள்ளார்.**

வவுனியா,ஜன.7

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் கடந்த சில நாள்களாக தீவிரம் பெற்றுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் அபாய அறிவிப்பு விடுத்துள்ளது.

இவ்வாறு டெங்கு நோயின் தீவிரம் காரணமாக உயிரிழப்புகளும் ஏற்படத் தொடங்கியுள்ளது. நேற்று முன்தினம் டெங்கால் பாதிக்கப்பட்ட நிலையில் வவுனியா தேக்காவத்தை ஆலடிப் பகுதியைச் சேர்ந்த செரீன் ஏஞ்சலின் டெக்ஸ்ரத்நைல்ட் (வயது 3) என்ற சிறுமி உயிரிழந்துள்ளார்.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட நிலையால் வவுனியா வைத்தியசாலையில் சில தினங்களுக்கு முன்னர் குறித்த சிறுமி அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆயினும் அவரது உடல் நிலை மோசமடைந்ததை யடுத்து உடனடியாக மேலதிகச் சிகிச்சைக்காக அவர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிறுமிக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். ஆயினும் சிகிச்சை பயனின்றி அந்த 3 வயதுச் சிறுமி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அண்மைக் காலமாக பெய்து வந்த மழையை அடுத்து ஏராளமான பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது. இவற்றில் இருந்து உற்பத்தியாகும் டெங்கு நுளம்புகளின் அதிகரிப்பே இவ்வாறு டெங்கு நோய் தீவிரமடைவதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கு வவுனியா நகரசபையினரும், வவுனியா சுகாதாரத் திணைக்களத்தினரும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு சாதகமான சூழ்நிலை காணப்படும் இடங்களை இனங்கண்டு அவற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். எனினும் இந்த முயற்சியில் பொது மக்களும் ஒத்துழைத்தால் மாத்திரமே பூரண அடைவை எய்த முடியும் என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ந-402)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கலாசார உத்தியோகத்தர் இல்லை

### வெற்றிடங்களே நிலவுகின்றன

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு நகரப்பகுதியான கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலகங்களிலேயே கலாசார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இந்தப் பிரதேச செயலகங்களால் கலாசார விழாக்களையோ மாவட்ட மட்ட கலாசார விழாக்களையோ நடத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை வடமாகாணத்திலுள்ள பல பிரதேச செயலகங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பலர் கலாசார உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர். அரசியல் தலையீடு காரணமாகவே இத்தகைய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

எனவே தமது சொத்துக்கள் உடமைகள் கலை கலாசார விழுமியங்களை தொலைத்து நிற்கும் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் கலாசார விழுமியங்களை பாதுகாத்து மேம்படுத்தும் வகையில் உடனடியாக இந்தப் பிரதேச செயலாளருக்கு கலாசார உத்தியோகத்தர்களை நியமித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம-410)

## மின்சார வசதி கிடைக்காது முல்லையில் பல இடங்கள்

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்று மூன்று வருடங்களாகியும் மின்சார வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை என மக்களால் கவலைவெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சில இடங்களுக்கு மின்சார வசதி கிடைத்தபோதிலும் ஏனைய இடங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில், ஒட்டுசுட்டானில் சில இடங்களுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

முத்துஐயன்கட்டு, கற்சிலைமடு, பண்டாரவன்னியன், வித்தியாபுரம், மன்னாங்கண்டல், கனகரத்தினபுரம், கணேசபுரம், பேராறு கிராமங்களிலும் புளியங்குளம், கருவேலன்கண்டல், கூழாமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் மின்சாரம் பெறுவதற்கான ஏற்பாடுகளை மக்கள் மேற்கொண்டிருந்த போதிலும் இதுவரையில் அதற்கான எந்த வேலையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால், தாம் மூன்று வருடங்களாகியும் இருளிலேயே இருப்பதாகவும் இதனால் பல்வேறு நெருக் கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த மக்கள் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பாக மாணவர்கள், தொழிற்சாலைகளை நடத்துவோர், தோட்டச் செய்கையாளர்கள் எனப் பலரும் மின்சார வசதி இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீள்குடியேறிய மக்கள், 'மின்சாரம் வரும் வரும் என எதிர்பார்த்து 3 வருடங்கள் கழிந்துவிட்டன' என்று அங்கலாய்க்கின்றனர்.

(ஜ-500)

### ஸ்கந்தபுரத்தில் மதகு திருத்தப்பட்டது

அக்கராயன், ஜன. 7

கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்திலுள்ள 2 ஆம் வாய்க்கால் மதகு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்கந்தபுரம் மேற்குக் கிராம அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த மதகை நீர்ப்பாசனத் திணைக்களம் புனரமைத்துக் கொடுத்துள்ளது. இதன் மூலம் விவசாயிகள் நன்மை அடைந்துள்ளனர்.

(ஜ-18)

### கல்விளானுக்கு போக்குவரத்து வசதி விரைவில்

அக்கராயன், ஜன. 7

துணுக்காய், கல்விளான் கிராம மக்கள் நீண்ட நாள் எதிர்கொண்ட போக்குவரத்துப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பஸ் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ள இந்தக் கிராமத்துக்கு போக்குவரத்து சேவையை விரைவில் நடத்துவதென துணுக்காய் பிரதேச செயலகத்தினூடாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காயில் பல கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் இல்லாததால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

(ஜ-18)



அக்கராயன் பகுதியில் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் கலந்து கொண்டு தமது பிரதேச அபிவிருத்தி தொடர்பான கருத்துகளை முன்வைக்கும் அக்கராயன் கிழக்கு, மத்திய பகுதிகளைச் சேர்ந்த மக்கள். (ந-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் வாடகைக்கு

மாத, நாள் வாடகைக்கு சாரதியுடன் Or
இல்லாமல் பெற்றுக் கொள்ளலாம்.
One Month 39500/=
தொடர்பு: 0779361427


## முல்லைத்தீவில் ஆசிரியர் பற்றாக்குறை மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பு

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட 52 பாடசாலைகளில் 185 க்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையினால் 16,750 இக்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ம.ராஜ்குமார் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் நடைபெற்ற இறுதிப் போரின் போது பல பாடசாலையின் கட்டடங்கள் அழிக்கப்பட்டன. அத்துடன் அதன் பௌதீக வளங்களும் அழிவடைந்துள்ளன.

மக்கள் இடம்பெயர்ந்து அதன் பின்னர் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள 56 பாடசாலைகளில் 52 பாடசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

ஆனால் இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் நிலை பற்றாக்குறையாகவே உள்ளது.

இதில் ஆரம்பக்கல்விக்கு 73 ஆசிரியர்களும், இடைநிலை கல்வியில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு 59 ஆசிரியர்களும், ஆங்கில பாடத்துக்கு 29 ஆசிரியர்களும், உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு 15 ஆசிரியர்களும், கலைப்பிரிவு மற்றும் வர்த்தகம் பிரிவுக்கு 10 ஆசிரியர்களுமாக பற்றாக்குறை நிலவுகிறது.

இதனை விட வருடாந்த இடமாற்றம் பெறும் ஆசிரியர்களும், 2 வருட ஒப்பந்த அடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் தமது சேவையை நிறைவு செய்து இடமாற்றம் செல்ல இருக்கும் ஆசிரியர்களால் மேலும் ஆசிரியர் பற்றாக்குறை நிகழவுள்ளது.

இது தொடர்பாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைபெற இருக்கும் இடமாற்றத்தில் இந்தப் பற்றாக்குறையை நிறைவு செய்து தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் கூறினார். (ம-422)

## கூழாமுறிப்பு வீதியை திருத்துமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 7

புதுக்குடியிருப்பு வீதியிலிருந்து கெருடமடு ஊடாக கூழாமுறிப்பைச் சென்றடையும் வீதியைப் புனரமைத்துத் தரவேண்டும் என மன்னாங்கண்டல் கெருடமடு, வசந்தபுரம், பேராறு மக்கள் கேட்டுள்ளனர்.

இந்த வீதி முல்லைத்தீவுக்குச் செல்வதற்கும் வைத்தியசாலை செல்வதற்கும் சுருக்கமான ஏற்புடையதான வீதியாகும்.

தற்போது இந்த வீதி பாவனையில் உள்ள போதும், குறுக்கே பாயும் பேராறுக்கான பாலம் கட்டப்படாமையால் அங்குள்ள மக்கள் 15 - 20 கிலோ மீற்றர் தூரம் சுற்றி முல்லைத்தீவுக்குச் சென்றடைய வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட வீதியால் பயணம் செய்வதாயின் 10 - 12 கிலோ மீற்றர் தூரமாக இருக்கும். இந்த மக்களுக்கு இந்த வீதியானது புனரமைக்கப்படுமானால் சுமார் 500 குடும்பங்களுக்கு மேல் நன்மையடைவர். அந்தப் பகுதி அபிவிருத்தியும் மேம்படும்.

இதுபற்றி அரச அதிபர் கவனத்துக்கு பொது அமைப்புக்கள் கொண்டு செல்லவுள்ளன என்றும் கூறப்பட்டது. (ம-500)


The Royal College of Jaffna
கலைமான முறையில் ஆங்கிலத்தில்
கதைக்கவும் மற்றும் இலக்கணத்தில்
By:- ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி.
426(302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக் வீதி, சங்கானை.
Tel- 077 6751649


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை M.திரேசா யூலியற்
அவர்களின் பாசமிகு தந்தை


### கிறிஸ்ரியன் மரியதாசன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்
யா/புனித. பத்திரிசியார் கல்லூரி.

## மரண அறிவித்தல்

### இராஜரட்ணம் பிறேமச் சந்திரன்



அளவெட்டி மேற்கு, டச்சுறோட், பட்சந்தையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் பிறேமச் சந்திரன் 31.12.2012 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் புதல்வனும், சிவராஜசிங்கம் காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியரின் மருமகனும், சிவதர்சினியின் அன்புக் கணவரும், லக்ஷனா, நிதர்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரலிங்கம் (கனடா), சந்திரவதனி (லண்டன்), சிறீதரன் (கனடா), பிரபாகரன் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்), முரளீதரன் (லண்டன்), சசிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவனையா, காலஞ்சென்ற அம்சமாலினமூர்த்தி மற்றும் கணேசமூர்த்தி ஆகியோரின் மருமகனும், சிவஞானபதி, சிவறஞ்சிதம், மனோறஞ்சிதம், சிரோன்மணி ஆகியோரின் பெறாமகனும், மாலினி (கனடா), ராஜ்குமார் (லண்டன்), மாலதி (கனடா), உமாதேவி (லண்டன்), ஈஸ்வரி (லண்டன்), சுமதி (லண்டன்), சுபாஜினி (லண்டன்), பாக்கியறஜனி (ஆசிரியை, யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம்), சாந்தினி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவகுமார் (பாபு) மற்றும் அருட்குமார் (கோபு - டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும், பத்மநாதன் (அதிபர், யா/சுட்டுவன் புலம் மகாவித்தியாலயம்), துஷ்யந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகலனும், ரஜனி (பிரான்ஸ்), சறோ (டென்மார்க்) ஆகியோரின் சகோதரனும், ரேகே, வினோத் ஆகியோரின் சித்தப்பாவும், யூடி, தனுசியா, அபிரா, அர்த்தனா, ஆதவன், பிரவீன், கோபீன் ஆகியோரின் மாமனும், தீபிகா, ஜானுகா, நிவேக்கா, தர்ஷிகா, நிஷாந்திகா, கேசிக்கா, அருஷன், அர்ச்சனா, அக்ஷயன், ஆனந்தினி, அருந்திகா, தருண், தருணிக்கா, சிவாங்கா, தரங்கினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை கனடா நேரப்படி பி.ப 12.30 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
ஏழாலை வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### அரியக்குட்டி செல்வரத்தினம்

காரைநகர், இலகடியைப் பிறப்பிடமாகவும், 55/11 இந்துக் கல்லூரி ஒழுங்கை,நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட அரியகுட்டி செல்வரத்தினம் நேற்று (06 /01/2013) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அரியகுட்டி வள்ளியாச்சியின் மகனும், மகேஸ்வரி செல்லாச்சியின் சகோதரனும் ஞானக்கிளியின் கணவரும் யோகராணி, யோகராசா, ஸ்ரீஸ்கந்தராசா, தியகராசா, சிவரானி ஆகியோரின் தகப்பனாரும் றாஜ்குமார், சுபாசினி, சிவனேஸ்வரி, அனுசுயா ஆகியோரின் மாமனாரும் ஜனார்த்தன், துஸாரா, கௌசல்யா, ஹரிஸ்ராம், அஸ்வின், சந்தோக்ஷ், நிக்ஷா, பிரசன்னா, பிரியங்கா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

குறிப்பு: இறுதிக்கிரிகைகள் காரைநகர் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலகடி,
காரைநகர்.

- தகவல்:
யோகராசா(மகன்)
ஸ்ரீராம் எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம் T.P0776048646

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 12 * 12 * 1936



விண்ணில் 09 * 12 * 2012

### அமரர் சின்னத்தம்பி தம்பிமுத்து

கடந்த 09.12.2012 அன்று அமரத்துவமடைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (08.01.2013) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும், அத்தருனம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அவரது ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தவறாது சமூகம் தரவும்.

"அந்தாய்" அல்வாய் கிழக்கு.

குடும்பத்தினர்.

## வைரவிழா (ஷஷ்டியப்த பூர்த்தி விழா)



திரு. திருமதி தர்மலிங்கம் செல்லம்மா

தம்பதியினர் தமது இல்லற வாழ்வின் இனிதே 60வது வருட பூர்த்தியை அல்லைப்பிட்டி 1ஆம் வட்டாரம் கிழக்கில் உள்ள தமது இல்லத்தில் (வேல்பவனம்) பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் வாழ்த்த வெகு விமர்சையாக இன்று (07.01.2013) திங்கட்கிழமை கொண்டாடுகின்றனர். இந்த மகிழ்ச்சியான நன்நாளில் தம்பதியினரை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நேரில் வந்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு.தர்மலிங்கம் (குடும்பத்தினர்)
0212206154, 0778150401

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2012 இல் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

திரு.திருமதி சிவகுமார் கமலவதனி
ஆகியோரின் அருமைப்புதல்வி

### செல்வி சி.சிவன்ஜா



அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
சுந்தரலிங்கம் குடும்பம்
அம்மப்பா, அம்மம்மா, மாமாமார்
தாவடி.

(29029)(6.7.11)


## பணிநிலை வேண்டுகை

1 வரவேற்பாளர் (Receptionist)
(ஆங்கில / சிங்கள மொழிகள் சரளமாகப் பேசக்கூடியவர்கள்)

2 நேரச்சு இயக்குநர்
(Offset Machine Minder -KOR A/D/S)

3 கணினி வடிவமைப்பாளர்
(Computer Graphic Designer)
(Adobe Photoshop, Indesign)

4 கணினி தட்டெழுத்தாளர்
(Computer Typist - Tamil /English / Sinhala)

பணிநிலை 2, 3, 4 விடயங்களுக்கு அச்சக அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

09-10 .01.2013 (புதன், வியாழக் கிழமைகளில்) காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நேரில் வரவும்

HARIKANAN (Pvt.) Ltd.
Printers of the North
1st Floor, 681, K.K.S. Road, Jaffna.
* நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட நேரம் கவனத்திற் கொள்ளப்படும்.


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தேவை

யாழ்ப்பாணம், நெல்லியடிப் பிரதேசத்தில் இயங்கும் கல்வி நிறுவனத்துக்கு அலுவலக உதவியாளர் தேவை.
தொடர்பு
0779789456


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## கந்தர் தங்கவேலு

புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த கந்தர் தங்கவேலு (05.01.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - பொன்னு தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பொன்னு மற்றும் நாகம்மா தம்பதியரின் மருமகனும், பாக்கியத்தின் பாசமிகு கணவரும் மதன், நிரோசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சபாபதி மற்றும் பாக்கியம், ரவி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மதன்(மகன் - வெஸ்ரன் சலூன்)
நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (28026)(6.7.11)

## தம்பிப்பிள்ளை சீதாலட்சுமி



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை - சீதாலட்சுமி நேற்று (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமர் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கோகிலன் - வெள்ளையம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராமர் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சந்திரகுமார், உதயகுமார் (பிரான்ஸ்), ரஜனி ஆகியோரின் தாயும், விக்னேஸ்வரி, றொசிற்றா (ஜேர்மன்), ரதீஸ்குமார் (வலயக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்) ஆகியோரின் மாமியும், பிரான்ஸ் சீயோன் சுவிஷேஷ சபை தலைமைப் போதகர் ஆபேல் கணேஷ், சண்முகம், வடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாஸ்கலின் (பிரான்ஸ்), றங்கநாயகி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், மேனகா, சம்துஜா, அகீபன், மதுஷா, கஜீபன், யதுஷா, சாயினி, சலோமி, சஞ்சய் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக கோப்பாய் இராஜவீதி, காளான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்மார்:
சந்திரகுமார், உதயகுமார்,
மகள் - ரஜனி.

முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
T.P. 0775386225, 0774553500,
0779004336, 00492084673888 (28032)(2.6.7)

# பாரம்பரிய பொருள்களின் கண்காட்சி

மட்டக்களப்பு,ஜன.7

பாரம்பரிய பொருள்களின் கண்காட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து இந்தப் பாரம்பரிய பொருள்களின் கண்காட்சியை நடத்தியுள்ளன.

இந்தக் கண்காட்சியை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் ஆரம்பித்து வைத்தார்.

இந்தக் கண்காட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாரம்பரிய பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனால் உள்ளூர் கைத்தொழிலாளர்களின் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பை இந்தக் கண்காட்சி பெற்றுக்கொடுத்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



## வேலாயுதம் பொன்னம்மா

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 126/2, பிக்கறிங்ஸ்வீதி, கொழும்பு- 13ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் பொன்னம்மா 05.01.2013 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமசாமி - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருணாசலம் - இலட்சுமிபிள்ளை தம்பதியரின் மருமகளும் றஜனி (கொழும்பு), சந்திரிக்கா (ஜேர்மனி), சுரேஸ்குமார் (ஜேர்மனி), கிருபாகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதி, மங்கையர்க்கரசி, சோமசுந்தரம் (பரிஸ் ரெக்ஸ்), பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மதியாபரணம், ரவிக்குமார் (ஜேர்மனி) மற்றும் நந்தினி (ஜேர்மனி), வதனி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, இராசலிங்கம் மற்றும் தர்மபூபதி, சகுந்தலாதேவி, இராசம்மா, பரமானந்தம், சிவபாக்கியம், மங்கையர்க்கரசி ஆகியோரின் மைத்துனியும் சதீஸ், விதுசா, வினுசன், மதுசன், அவர்சியா ஆகியோரின் பேர்த்தியும் உதயகுமார் (சுவிஸ்), சசிகலா (லண்டன்) ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ண மலர்சாலையில் நாளை (08.01.2013) செவ்வாய்க்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 10 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொ.பே: 0777302343,
0112320194 (c/5331)(6.7.11)

தகவல்:
சோமசுந்தரம் (பரிஸ் ரெக்ஸ் ரைல்)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா கணேசன்

(சாரதி Jaffna Trades (J.T))



37/5, இராமநாதன் றோட், நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சின்னையா கணேசன் நேற்று (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - லீலாவதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற செல்லத்துரையின் (Doctor) வளர்ப்பு மகனும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், திருச்செல்வியின் (வனஜா) கணவரும், மல்லிகாவின் சகோதரரும், மகேந்திரராஜா, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் கலா, விசஜா, லலிதா, உதயன், ஜனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

37/5,இராமநாதன் றோட், நாச்சிமார் கோயிலடி. (2.6.7)

## கந்தையா பத்மநாதன் (பத்மஸ்ரீ)

(பத்மஸ்ரீ சவுண்ட்ஸ் சேவிஸ் உரிமையாளர்)



கோண்டாவில் கிழக்கு, நாராயணன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா - பத்மநாதன் 04.01.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும், நகுலஸ்ரீ, மதிமாலா, சுசிமாலா, சசிமாலா, நிதிமாலா, கேமஸ்ரீ, வசந்தமாலா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன், ரமேஸ்காந், தயாளன், கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், பானுஜா, கனுஜா, ஷன்ஜா, கஜாந், ஹஷ்னா, அக்ஷா, கனிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (28030)(2.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேசத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு

காரைநகர்,ஜன. 7
காரைநகர் பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை இரவு காரைநகரில் வர்த்தக நிலையம் ஒன்றின் ஓடு பிரித்து உள் இறங்கிய திருடர்கள் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த வாரம் காரைநகர் நடுத்தெருப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த 12 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். வெளியே சென்று வீடு திரும்பியவர்கள் தமது வீட்டில் நகைகள் திருடப்பட்டதை அறிந்து அதிர்ச்சி அடைந்ததுடன் பொலிஸாரிடமும் முறையிட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை நண்பகல் வேளை காரைநகர் சத்திரந்தை பகுதியில் வீட்டில் தனித்திருந்த வயோதிப மாதுவை தாக்கிவிட்டு அங்கிருந்து பொருள்களை திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

திருடர்கள் தாக்கியதில் முகப் பகுதியில் படுகாயமடைந்த வயோதிப மாது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில நாள்களில் காரைநகர்ப் பகுதியில் சைக்கிள்கள் திருடப்படும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன என்று கூறப்பட்டது. (ம-250)

# தீவுப் பகுதிப் பயணப் படகுகளை பரிசோதனை செய்ய கோரிக்கை

**இந்தப் படகுகளை உடன் சோதனைக்கு உட்படுத்தி சான்றிதழ் பெற்ற பின்னரே சேவையில் ஈடுபட வேலணை பிரதேச சபை அனுமதிக்க வேண்டும்.**

யாழ்ப்பாணம்,ஜன. 7
குறிகாட்டுவான் - நயினாதீவு, குறிகாட்டுவான் - நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களுக்கு இடையே இடம்பெறும் தனியார் படகுகள் கடலில் பயணிப்பதற்கு பொருத்தமானவையா என்பது பரிசோதிக்கப்பட வேண்டும் என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பெருந்தொகை பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகள் எவையும் முறையான கடற்பொறியியலாளரின் சான்றிதழ் இன்றியே சேவையில் ஈடுபடுகின்றன.

இந்தப் படகுகளை உடன் சோதனைக்கு உட்படுத்தி சான்றிதழ் பெற்ற பின்னரே சேவையில் ஈடுபட வேலணை பிரதேச சபை அனுமதிக்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக அரச ஊழியர்கள் மேலும் கூறியதாவது:-

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கும் - நயினாதீவுக்கும் பயணிகள் படகு சேவைகள் இடம்பெறுகின்றன.


இந்தப் படகுகளில் பெரும்பாலான படகுகள் சேவைக்கு தகுதியற்றவை என படகுச் சேவையாளர்களே ஒத்துக் கொள்கின்றனர்.

எனவே, பெரும் எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகள் கடலில் செல்வதற்குப் பொருத்தமானவை என்ற சேவைச் சான்றிதழை உரியவரிடம் பெற வேண்டும்.

இந்தப் படகுகள் சேவையில் ஈடுபடுவதற்கான கடற்பொறியியலாளரின் சான்றிதழ்களை வேலணை பிரதேச சபை வழங்க முன்வரவேண்டும்.

இந்தச் சேவைச் சான்றிதழ் இல்லாத அனைத்து படகுகளின் சேவைகளும் இடை நிறுத்தப்பட வேண்டும்.

இதற்கு ஏற்ற பொது ஒழுங்குகளை விரைவில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் முன்வந்து எடுக்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-50)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நன்னீர் பொதுக் கிணறுக்கு அருகில் யாழ்.மாநகர சபையால் தண்ணீர் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதன் ஊடாக இந்தப் பகுதி மக்களுக்கு நிலத்தடி குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது. (ம-17)

## எதிரணி ஆதரவின்றி பரு.பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்

வடமராட்சி,ஜன. 7
பருத்தித்துறை பிரதேச சபையின் வருடாந்த வரவு - செலவுத் திட்டம் எதிர்க்கட்சியின் ஆதரவின்றி நிறைவேறியது.

சபைத் தலைவர் கு.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் போது எதிர்க்கட்சி அதனை ஆதரிக்கவில்லை. அதற்கான காரணத்தை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தெளிவுபடுத்தி நீண்டதொரு உரையை ஆற்றினார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் தவிர தலைவர் உட்பட ஏனைய ஆளும் தரப்பு உறுப்பினர்கள் 7 பேரின் ஆதரவுடன் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியது. (ம-8)

## வடமராட்சி கிழக்கில் கரையோரக் கிராம இணைப்பு வீதி சேதம்

வடமராட்சி,ஜன. 7
வடமராட்சி கிழக்கில் உள்ள மணல்காடு, குடத்தனை ஆகிய கரையோரக் கிராமங்களை இணைக்கும் கடற்கரை வீதி, நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் சேதமடைந்த நிலையிலேயே உள்ளது.

சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி திருத்தப்படாமையால் இரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதிக்குச் சென்று அந்த வீதியூடாக நீண்ட தூரம் பயணித்தே இரு கிராமங்களைச் சேர்ந்தோர் பயணிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சென்று வருவதால் வீண் அலைச்சல்களை இரு கிராம மக்களும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

# விதை உற்பத்திக்கான பயிர்கள் நல்ல நிலையில்

**12 பயனாளிகளுக்கு வேதாள வெங்காய விதையும் 20 பயனாளிகளுக்கு மிளகாய் விதையும் விநியோகிக்கப் பட்டிருந்தன.**

யாழ்ப்பாணம்,ஜன. 7
அனலைதீவில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் மிளகாய் மற்றும் வேதாள வெங்காயம் விதை உற்பத்திக்கான பயிர்கள் தற்போது நல்ல நிலையில் இருப்பதாக விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

விவசாயத் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட 32 விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் மிளகாய் மற்றும் வேதாள வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் 12 பயனாளிகளுக்கு வேதாள வெங்காய விதையும் 20 பயனாளிகளுக்கு மிளகாய் விதையும் விநியோகிக்கப்பட்டிருந்தன.

விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு இந்தப் பயனாளிகளுக்கும் இவை வழங்கப்பட்டன.

இதேவேளை, இந்தப் பயனாளிகளுக்கு விவசாயத் திணைக்களத்தால் தெளிகருவிகள் மிளகாயை உலர வைப்பதற்கான தறப்பாள் மற்றும் கிருமிநாசினிகள் என்பனவும் கடந்த வியாழக்கிழமை விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விவசாய போதனாசிரியர் எஸ்.இராமநாதன், பாடவிதான உத்தியோகத்தர் ஆர்.சௌந்தரராஜன், விதை அத்தாட்சிப் படுத்தும் உத்தியோகத்தர் ரமணிதரன், திட்ட இணைப்பாளர் திருமதி கிருசாந்தி ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-17)

## இலைச்சுருட்டி நோயால் விவசாயிகள் பாதிப்பு

வடமராட்சி,ஜன. 7
வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைப் பயிர், இலைச்சுருட்டி நோயால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். பயிர்ச் செய்கை ஆரம்பத்திலேயே இலைச்சுருட்டி நோய் ஏற்பட்டுள்ளதால் பலரும் நோய்க்குள்ளான புகையிலைப் பயிரை அழித்து விட்டு மீண்டும் புதிதாக புகையிலைப் பயிரை அல்லது வெங்காயத்தை பயிரிடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்வதால் பெருந்தொகைப் பணத்தை செலவிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி உள்ளனர் என்று கவலை தெரிவித்துள்ளனர். (ம-8)

# போதிய ஆசிரியர்கள் இன்மையால் விடுகைப் பத்திரம் பெறும் மாணவர்

## தென்மராட்சி வலயப் பாடசாலை ஒன்றின் நிலைமை

தென்மராட்சி,ஜன. 7
பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை. வலயம் நியமிக்க கைவிரிப்பு. மாணவர்கள் விடுகைப் பத்திரம் பெற்று வேறு பாடசாலைகளில் இணைந்து கொள்கின்றனர்.

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஒன்றில் இவ்வாறு நடந்து வருகிறது.

பாடசாலை க.பொ.த. சாதாரண தரம் வரையிலான வகுப்புகள் உள்ளன. எனினும் பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லாததனால் தமது பிள்ளைகளின் கல்வி நிலை பின்தங்குகிறது. இது குறித்துப் பெற்றோர் கல்வி வலயம் மற்றும் கோட்டம் ஆகியவற்றில் ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரியுள்ளனர்.

இடமாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களை பாடசாலைக்கு நியமிப்பதாகவும் அதுவரை பொறுத்திருக்குமாறும் உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எனினும் பெற்றோர் ஒரே நாளில் 32 பிள்ளைகளின் விடுகைச் சான்றிதழ்களைப் பெற்று சாவகச்சேரியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இணைத்துள்ளனர்.

தற்போது பாடசாலையில் 9 மாணவர்கள் கற்று வருகின்றனர். அவர்களின் விடுகைச் சான்றிதழும் அடுத்த வாரம் பெறப்பட்டு வேறு பாடசாலையில் இணைக்கப்படலாம் என பெற்றோர் தரப்பில் கூறப்பட்டது.

இந்த மாணவர்களும் விடுகைப் பத்திரம் பெற்றால் பாடசாலையில் மாணவர்கள் இன்றி முடங்கும் நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக பாடசாலை அதிபர் திருமதி ச.தர்மகுலசிங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:-

''அரைவாசிக்கு மேற்பட்ட மாணவர்கள் இன்னும் பாடசாலைக்கு முழுமையாக வந்து சேரவில்லை.

தமிழ் பாடத்துக்கு ஆசிரியர்கள் இன்மையாலேயே இவர்கள் விடுகைப் பத்திரம் பெறுகின்றனர்.

ஓர் அதிபர் என்ற வகையில் சுயாதீனமாக நான் முடிவு எதுவும் எடுக்க முடியாது.

வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியுடனேயே நான் விடுகைப் பத்திரங்களை வழங்கி வருகிறேன். இதுவரை 4 மாணவர்கள் இடை விலகி உள்ளனர். இவர்கள் மிகவும் கற்றலில் ஆர்வமுடைய மாணவர்கள்'' என்று கூறினார்.

இது குறித்துக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

''32 மாணவர்கள் பாடசாலையில் இருந்து விலகியுள்ளனர் என்பது குறித்த தகவல் எவையும் கிடைக்கவில்லை.

ஆசிரியர்கள் போதியளவு உள்ளனர். ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது இல்லை. 4 மாணவர்களின் பெற்றோரே விடுகைப் பத்திரம் கேட்பதாக கூறப்பட்டது. பெற்றோர் கேட்டால் வழங்குமாறு கூறியிருந்தோம்.

இந்த பாடசாலையில் 50 இற்கும் உட்பட்ட மாணவர்களே கற்கின்றனர்.

இந்த நிலையில் தரம் - 10,11 வகுப்புகளில் ஓரிரு மாணவர்கள் உள்ளனர். அவர்களே விடுகைப் பத்திரம் கேட்டிருந்தனர். இதே வேளை, குறித்த ஊரில் குழப்ப நிலைமை ஒன்று உள்ளது. அதுவும் இந்த மாணவர் விலகக் காரணம்'' என்றார்.

இந்த விடயம் தொடர்பாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

இந்த விடயம் தொடர்பாக எந்தவிதமான தகவல்களும் எனக்குக் கிடைக்கவில்லை. இரண்டு பிள்ளைகளது பெற்றோரே விடுகைப் பத்திரம் கேட்கின்றனர் என்று கூறப்பட்டிருந்தது'' - என்று கூறினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்புணர்வால் உயிரிழந்த மாணவி

## மரபணுச் சோதனையில் சிக்கினர் குற்றவாளிகள்

டில்லி, ஜன.7

வன்புணர்வுக் கொடுமையால் உயிரிழந்த மாணவியின் சம்பவம் தொடர்பில் மரபணு பரிசோதனையில் குற்றவாளிகள் மீதான ஆதாரம் உறுதி செய்யப் பட்டுள்ளது. புதுடில்லியில் பஸ்ஸில் வைத்து மருத்துவ மாணவி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மரபணுபரிசோதனை அறிக்கை வெளியா யுள்ளது.

அதன்படி, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆறு பேரினதும் உடைகளில் இருந்த இரத்தக் கசிவும், வன்புணர்வுக்கு உட்பட்டு உயிரிழந்த மாணவியின் இரத்தத்தின் மரபணுக்களும் ஒரே வகை யானவை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய மரபணு பரிசோதனை நிலையம் இதனை உறுதி செய்துள்ளது. இதன்படி குறித்த மரபணு அறிக்கை இந்த வழக்கில் முக்கிய ஆதாரமாக சமர்ப்பிக்கப்படவுள்ளது. அவர்கள் மீதான குற்றச் சாட்டு உறுதி செய்யப்படுமிடத்து, அவர்களுக்கு குறைந்த பட்சம் 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



இந்தியா வந்துள்ள மொரீசியஸ் அதிபர் ராஜ்கேஸ்வர் புர்யாக், டில்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியாவைச் சந்தித்துப் பேசினார்.

## இந்திய பொலிஸ் துறையில் பெண்களுக்கு அதிக ஒதுக்கீடு

டில்லி, ஜன.7

பொலிஸ் துறையில் பணியாற்றும் பெண்களின் எண்ணிக்கையை 33 சதவீ தமாக அதிகரிக்க வேண்டும் என்று மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

புதுடில்லியில் அனைத்து மாநில தலைமைச் செய லாளர்கள், பொலிஸ்துறை தலைவர்கள் ஆகியோ ருக்கான கூட்டம் நடைபெற்றது.

இதில் மத்திய உள்துறை செயலாளர் ஆர்.கே. சிங் கருத்துத் தெரிவித்ததாவது:- பெண்களும், பாதிக்கப் பட்ட அடித்தட்டு மக்களும் எவ்வித பிரச்சினையுமின்றி பொலிஸ் நிலையத்தை அணுகும் சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

தற்போது நாட்டில் உள்ள பொலிஸாரின் எண்ணிக்கையில் மகளிர் 3.98 சத வீதமானோர் மட்டுமே உள்ளனர். பெண் பொலிஸ் அதிகம் இருக்கும்போது பாதிக்கப் படும் பெண்கள் தைரியமாக முறைப்பாடு தெரிவிக்க முன் வருவார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு உணர்வு ஏற்படும், பொலிஸ் நிலை யத்தை அணுகுவதில் பிரச்சினை இருக்காது. எனவே பொலிஸ் அதிகாரி, பிரதிப் பொலிஸ் அதிகாரி போன்ற பதவி களில் 33 சதவீதமானோர் மகளிராக இருக்க வேண்டும் - என்றார். .(வ)

## பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகள் மாவோயிஸ்டுகளுக்கு பயிற்சி

**உளவுத்துறை தகவல்**



டில்லி, ஜன.7

மாவோயிஸ்ட்டுகளுக்கு நவீன ரக துப்பாக்கிகளைக் கையாள பிலிப்பைன்ஸி லிருந்து ஊடுருவிய தீவிர வாதிகள் பயிற்சி அளித்தது விசாரணையில் தெரியவந் துள்ளது.

இதுகுறித்து உளவுத் துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெளியிட்ட தகவலில் மேலும் தெரிய வந்துள்ளதாவது:-

பிலிப்பைன்ஸின் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிப் படை தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பாகும்.

அந்த அமைப்பினர் மாவோயிஸ்ட்டுகளுக்கு வெளிநாடுகளில் தயாரிக் கப்பட்ட நவீன ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களையும் வழங்கியுள்ளனர். அவற்றை கையாள்வதற்கான பயிற் சியையும் அளித்துள்ளனர்.

குறித்த ஆயுதங்கள் எங்கிருந்து வழங்கப்பட்டன என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவோயிஸ்ட்டுகளிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் மேற்படி தகவல் வெளியாகி உள்ளதாகக் கூறப்படுகிறது. (வ)

# விதிமுறைகளை மீறி விமானம், ஹெலி பயணங்களில் ஈடுபட்ட சோனியா, ராகுல்





டில்லி, ஜன.7

இந்திய விமானப்படை விதிமுறைகளை மீறி சோனியா, ராகுல் ஆகியோர் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான விமானம், ஹெலி கொப்டர்களில் பயணித்துள்ளது தெரியவந்துள்ளது.

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானங்கள், ஹெலிகொப்டர்களில் பிரதமர் மட்டுமே பயணிக்க முடியும்.

ஏனையோரில் மத்திய அமைச்சர்களுக்கு மட்டும் தான் அனுமதி. அதுவும் அவர்கள் பிரதமரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். மற்றவர்கள் பயணிக்கத் தகுதியற்றவர்கள் என்று விமானப் படை விதிமுறைகள் உள்ளன.

இந்தநிலையில் காங். தலைவர் சோனியா, ராகுல் ஆகியோர் இந்திய விமானப்படையில் பயணித்த விவரம் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் பதில் அளிக்குமாறு ஹரியானாவைச் சேர்ந்த ரமேஷ் வர்மா, தகவல் கேட்டிருந்தார். அதற்கு விமானப் படையின் உயர் அதிகாரி ஒருவர் பதில் அளித்துள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது:- கடந்த 7 ஆண்டுகளில் சோனியா இதுவரை 49 முறை இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்களில் பயணித்துள்ளார்.

இதில் 23 முறை பிரதமர் மன்மோகன் சிங்குடன் பயணித்துள்ளார். இதில் கட்டணமாக ரூ. 1.17 கோடி மிகுதி வைத்துள்ளார்.

அதேபோன்று காங். அகில இந்தியப் பொதுச் செயலர் ராகுல் கடந்த மூன்று ஆண்டுகளில் 8 முறை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலி கொப் டர்களில் பயணித்துள்ளார். அதில் 3.46 லட்சம் கட்டணம் செலுத்தமால் மிகுதி வைத்துள்ளார். அவர்கள் இருவரும் அதில் பயணிக்கத் தகுதியற்றவர்கள்.

இதன்மூலம் அவர்கள் விமானப்படை விதிமுறைகளை மீறியுள்ளனர் - என்றார். (வ)

## செவ்வாய் கிரகத்துக்கு இந்திய விண்கலம் மூலம் செயற்கைக் கோள்

டில்லி, ஜன.7

இந்தியா எதிர்வரும் ஒக் ரோபர் மாதம் செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் மூலம் செயற்கைக் கோளை அனுப்பி தகவல் சேகரிக்க உள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் கடந்த ஆண்டு சுதந்திர தினத்தின்போது உரையாற்றுகையில் செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் அனுப் பப்படும் என்று தெரிவித் திருந்தார்.

அதற்கான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

செவ்வாயில் மேற்கொள்ளப்பட உள்ள ஐந்து சோத னைகளுக்கான சாதனங்களை மத்திய அரசு, இஸ் ரோவிடம் எதிர்வரும் மார்ச் மாதம் வழங்க உள்ளது. அங்கு மேற்கொள்ள வேண்டிய பரிசோதனைக்கான சாதனங்கள் எங்களுக்கு மார்ச் மாதத்துக்குள் கிடைக் கும். அவற்றை செயற்கைக்கோளில் பொருத்தும் பணியை ஏப்ரலில் ஆரம்பிப்போம் என்று இஸ்ரோ கூறியுள்ளது. (வ)

## குடியரசு தினத்தன்று தற்கொலை செய்ய அனுமதி கோரி ஜனாதிபதியிடம் 165 பேர் மனு

**ஓய்வூதியம் கிடைக்காததால்**

கடந்த 2 வருடங்களாக தங்களுக்கு வர வேண்டிய ஓய்வூதியம் கிடைக்காத முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 165 பேர், குடியரசு தினத்தன்று தற்கொலை செய்து கொள்ள அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் மனு கொடுத்துள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள யவாத்மால் மாவட்டத்தைச் சேர்ந்த 165 முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கடந்த 2 ஆண்டுகளாக அரசிடம் இருந்து வரவேண்டிய ஓய்தியம் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் பசியும், பட்டினியுமாக உள்ளனர். இந்தநிலையில் குறித்த பிரச்சி னைக்கு ஒரு முடிவு காண அவர்கள் அனைவரும் சேர்ந்து ஜனாதிபதிக்கு ஒரு மனு எழுதி அதில் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மனுவில், குடியரசுதினமான எதிர்வரும் 25 ஆம் திக திக்குள் தங்கள் குறைகள் தீர்க்கப்படவில்லை என்றால் அன்றையதினம் தாங்கள் அனைவரும் தற்கொலை செய்து கொள்ள அனுமதி அளிக்குமாறு குறிப்பிட் டுள்ளனர். ஓய்வூதியம் கிடைக் காதவர்கள் கடந்த ஆண்டு பேரணி நடத்தியும் பயனில்லை. மேலும் இது குறித்து தாசில்தார் மற்றும் உயர் அதிகாரிகளிடம் மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப் பட்டவர்கள் தெரிவித்தனர். (வ)

## விநோத முகத்துடன் ஆட்டுக்குட்டி!



மானாமதுரை, ஜன.7

விநோத முக அமைப்புடன் மானாமதுரையில் விவசாயி ஒருவரின் வீட்டில் ஆட்டுக் குட்டி பிறந்துள்ளது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே விளாக்குளத்தைச் சேர்ந்தவர் வேலுச்சாமி. அவர் வீட்டில் வெள்ளாடுகளை வளர்த்து வருகிறார். வளர்த்த ஆடுகளில் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை 2 குட்டிகளை ஈன்றது. இதில் ஒரு குட்டியின் தலை ஆந்தை முகத்தைப்போல விநோதமாக இருந்தது. செந்நிறத்தில் பிறந்த இந்த ஆட்டுக் குட்டியின் கண்கள் இரண்டும் ஒன்றாக உள் பக்கமாக உள்ளது. ஆடுகளுக்கு உரிய வாய் பகுதி மனித வாயைப் போல மேல்நோக்கி உள்ளது. அந்தக் குட்டியால் தாய் ஆட்டிடம் பால் குடிக்க முடியவில்லை. இதனால் வேலுச்சாமி சங்கு மூலம் பால் கொடுத்துவருகிறார். இதுகுறித்து கால்நடைத் துறை ஊழியர் ஒருவர் தெரிவித்ததாவது:-

மரபணு கோளாறால் கால்நடைகள் இவ்வாறு அதிகமாகப் பிறக்கின்றன. பெரும்பாலும் அவற்றுக்கு சுவாசப் பிரச்சினை இருப்பதால் பிழைப்பது அரிதாக இருக்கிறது. அதிகளவில் இரசாயன உரங்களை பயன்படுத்தல், மரபணு மாற்றப்பட்ட தானியங்களை உண்ணல் போன்றவற்றால் இவ்வாறு இடம்பெறுகின்றது - என்றார்.

## உலகின் மிகப்பெரிய சோலார் தொலைநோக்கி இந்தியாவில்


சூரியனைப் பற்றி ஆய்வு செய்வதற்காக ரூ.300 கோடி செலவில் உலகிலேயே மிக பெரிய சூரிய தொலைநோக்கியை லடாக் பகுதியில் அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது. கொல்கத்தாவில் நடைபெறும் 100ஆவது இந்திய அறிவியல் மாநாட்டில் பங்கேற்ற மேற்படி திட்டத்தின் முதன்மை ஆய்வாளர் சிராஜ் ஹசன் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரி வித்ததாவது:-

இந்திய-சீன எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே லடாக் மாவட்டத்தின் பங்காங் ஏரிக்கு அருகே உள்ள ஹன்லே அல்லது மெரக் என்ற இடத் தில் தேசிய சோலார் தொலைநோக்கி அமைய வுள்ளது. இதன் கட்டுமானப் பணி இந்த வருடத்தின் பிற்பகுதியில் ஆரம்பித்து 2017 இல் முடிவடையும். பெங்களூரில் உள்ள ஹான் சோ ஆராய்ச்சி நிலையம் குறித்த திட்டத்தைச் செயற்படுத்தும். மேற்படி தொலைநோக்கி 2 மீட்டர் கொண்டதாக இருக்கும். இதன் மூலம் உலகின் மிகப்பெரிய தொலைநோக்கி என்ற பெயரை இது பெறவுள்ளது. தற்போது அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள தொலைநோக்கிதான் (1.6 ) உலகின் பெரிய தொலைநோக்கியாக உள்ளது - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதத்தை ஒடுக்கி அடக்குவதற்கு ராணுவக் கொள்கையில் மாற்றம் தேவை

## பாகிஸ்தான் பிரதமர் வலியுறுத்து



இஸ்லாமாபாத், ஜன.7

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு நாட்டின் இராணுவக் கொள்கைகளில் மாற்றங்கள் வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பர்வேஸ் அஷ்ரப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தீவிரவாதம் என்பது ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. முகம் தெரிந்த எதிரிகளுடன் போரிடுவதை விட அடையாளம் தெரியாமல் மறைந்திருந்து தாக்கும் எதிரிகளுடன் போரிடுவது கடுமையான சவால்.

அதனால் நம் நாட்டின் பாதுகாப்பு அமைப்புகள், தங்களுடைய புலனாய்வுத் திறனை இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்போடு மேம்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது. கடந்த காலத்தில் நடைபெற்றுள்ள தீவிரவாத செயல்களைக் கருத்தில் கொண்டு மிக எச்சரிக்கையாகவும் புதிய வியூகத்தோடும் நாம் பணியாற்ற வேண்டும்.

அதற்காக நடைமுறையில் உள்ள ராணுவக் கொள்கைகளில் மாற்றம் செய்ய வேண்டும். அதற்கு மக்களின் ஒத்துழைப்பும் நிலையான அரசியல் தலைமையும் தேவை.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்துத் துறைகளும் சட்ட வரம்புக்கு உட்பட்டே செயல்பட வேண்டும்.

தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடும் இராணுவத்துக்கு அரசு எப்போதும் துணையாக இருக்கும் - என்று தெரிவித்தார்.

# மீண்டும் சூடு

## அமெரிக்காவில் 4 பேர் சாவு



நியூயோர்க், ஜன.7

அமெரிக்காவில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் கொலராடோவில் உள்ள அரோரா நகரில் 3 பேரை பணயக் கைதிகளாக வைத்திருந்தவரே அவர்களை சுட்டுக் கொன்றுள்ளார்.

கடந்த வருடம் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் நடந்த ஔராரா திரையரங்குக்கு அருகிலேயே தற்போதைய சம்பவமும் நடந் துள்ளது.

அரோரா நகரில் ஒரு வீட்டில் புகுந்த மர்ம நபர் ஒருவன், வீட்டில் இருந்த 3 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தான்.

பின்னர் அவர்கள் மூன்று பேரையும் சுட்டுக்கொன்றான். இந்த நிலையில் பொலிஸார் வீட்டை சுற்றி வளைத்து அவனைச் சுட்டுக் கொன்றனர்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் இதே நகரில் உள்ள திரையரங்கில் 12 பேரை சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2012 ஜூலை மாதம் ஔராரா திரையரங்கில் பேட்மேன் திரைப்படத்தை பார்க்க வந்த பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் கொல்லப்பட்டதுடன் 58 பேர் காயமடைந்தனர். அதே போன்று கடந்த மாதம் நியூடவுனில் உள்ள தொடக்கப் பள்ளியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 20 பள்ளிக் குழந்தைகள் கொல்லப்பட்டதுடன், ஆறு ஆசிரியர்களும் உயிரிழந்தனர்.

அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து அமெரிக்காவில் தனிநபர்கள் துப்பாக்கி வைத்திருக்கும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஒபாமா தலைமையிலான அமெரிக்க அரசு தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ள நிலையில் அரோரா நகரில் துப்பாக் கிச் சூட்டு தாக்குதல் நடை பெற்றுள்ளது.

### சிறுமி மலாலா வீடு திரும்பினார்

லண்டன், ஜன.7

தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி லண்டனில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி மலாலா மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

எனினும் தொடர்ந்து அவர் புற நோயாளியாக சிகிச்சை பெறவுள்ளார்.

பிரிட்டன், பெர்மிங்ஹாமில் உள்ள ராணி எலிசபெத் மருத்துவமனையில் மலாலாவுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. மலாலா தற்போது பிரிட்டனில் உள்ள வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஜனவரி இறுதி அல்லது பெப்ரவரி முதல் வாரத்தில் தலையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

'மலாலா தொடர்ந்தும் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வார். மருத்துவக் குழுவினரும் அவர் வீட்டுக்குச் சென்று தேவைப்படும் சிகிச்சைகளை தொடர்ந்து மேற்கொள்வர்' என்று பெர்மிங்ஹாம் மருத்துவப் பல்கலைக்கழக அறக்கட்டளை மருத்துவ இயக்குநர் டேவ் ரோஸர் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் நிலநடுக்கம்




வோஷிங்டன், ஜன. 7

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தின் பசிபிக் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இது ரிச்டர் அளவில் 7.7 ஆகப் பதிவாகியுள்ளது.

அலாஸ்கா தலைநகர் ஜூனாவ் பகுதியில் உள்ள வீடுகள் இந்த நிலநடுக்கத்தால் குலுங்கின. பூகம்பத்தின் மையம், கிரெய்க் நகருக்கு மேற்கே 102 கிலோ மீற்றர் தொலைவில் பசிபிக் கடலுக்கு அடியில் சுமார் 9 கிலோ மீற்றர் ஆழத்தில் காணப்பட்டது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த உடனடித் தகவல்கள் எதுவும் வரவில்லை. சிறிய அளவிலான சுனாமி அலைகள் கடற்கரையை தாக்கக்கூடும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. பின்னர் அது விலக்கப்பட்டது.

இந்த பூகம்பம் மையம் கொண்ட இடத்திற்கு தெற்கே, கனடா நாட்டின் குயின் சார்லாட் தீவுப்பகுதியில் கடந்த ஒக்டோபர் மாதம் 7.7 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டது. அப்போது சிறிய அளவிலான சுனாமி அலைகள் அமெரிக்க கடற்கரை பகுதிகளை தாக்கியமை குறிப்பிடத்தக்கது.

# பிரசவத்தை ஒளிபரப்பலாம் தொலைக்காட்சி நடிகை அனுமதி

## 150 கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம்



லொஸ் ஏஞ்சல்ஸ், ஜன. 7

அமெரிக்கத் தொலைக்காட்சி நடிகையான கிம் கர்டாசியன் தனது பிரசவத்தை தொலைக்காட்சியில் ஒளிபரப்பச் சம்மதித்துள்ளார்.

அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சியில் நடித்து புகழ் பெற்றவர் கிம் கர்டாசியன். இவர் தற்போது 3 மாதம் கர்ப்பமாக இருக்கிறார்.

அவர் தனது பிரசவத்தையும், மருத்துவமனையில் பிரசவத்துக்காக பரிசோதனை செய்வதையும் 'ரியாலிட்டி ஷோ' எனும் நிகழ்ச்சியில் நேரடியாக ஒளி பரப்புவதற்குச் சம்மதித்துள்ளார்.

அதற்காக தொலைக்காட்சி நிறுவனத்துடன் ரூ.150 கோடிக்கு ஒப்பந்தம் செய்து உள்ளார். அவர் ஒவ்வொரு மாதமும் மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்வது உட்பட அனைத்து நிகழ்வுகளையும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பலாம் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கு பெரும் வரவேற்பு கிடைக்கும் என்று தொலைக்காட்சி நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர். ஆனால் கிம் கர்டாசியன் முடிவுக்கு அவரது குடும்பத்தினர் எதிர்ப்புத் தெரி வித்துள்ள னர்.

### சிறுமிகள் துஷ்பிரயோகம்: 245 பேர் கைது

நியூயோர்க், ஜன.7

சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்திய 245 பேர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்துவது சமீபகாலமாக அதிகரித்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க சிறப்பு பொலிஸின் விசாரணையில், 123 சிறுமிகள் துன்புறுத்தப்பட்டது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து அமெரிக்க சுங்க அமுலாக்கப்பிரிவு மற்றும் குடியுரிமைப்பிரிவு அதிகாரிகள் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினார்கள். சுமார் 3 வாரம் மேற்கொண்ட இந்தத் தேடுதல் வேட்டையில் 245 பேரை கைது செய்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிரான்ஸ் அரசை மிரட்டும் நடிகை

பாரிஸ், ஜன.7

யானைகளுக்கு ஆதரவு தெரிவித்து பிரான்ஸ் அரசை மிரட்டுகிறார் பிரபல நடிகை பிரிஜிட் பார்டோட்.

பிரான்ஸ், லியோனில் உள்ள மிருககாட்சிச் சாலையில் உள்ள இரண்டு குட்டி யானைகள் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நோய் மற்ற விலங்குகளுக்கும், மிருககாட்சி சாலைகளுக்கு வரும் பார்வையாளர்களுக்கும் பரவ வாய்ப்புள்ளது. எனவே இந்த குட்டி யானைகளை கொன்றுவிட முடிவு செய்துள்ளனர்.

ஆனால் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் பிரபல நடிகை பிரிஜிட் பார்டோட்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

''சமீபகாலமாக பிரான்ஸ் விலங்குகளின் கல்லறையாக மாறிவருகிறது. இதனால் நாட்டை விட்டு வெளியேற விரும்புகிறேன். யானைகளைக் கொலை செய்தால் ரஷ்ய குடியுரிமை பெற்று வெளியேறுவேன்'' என்று தெரிவித்தார்.

# சிறுவர்களுக்கும் வாக்குரிமை வேண்டும் ஜேர்மனிய அமைச்சர் ஒருவர் கருத்து



பெர்லின், ஜன.7

சிறுவர்களும் வாக்களிக்க அனுமதியளிக்க வேண்டும் என்று ஜேர்மனியின் பொருளாதார கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு துறையின் அமைச்சர் டிர்க் நீபெல் தெரிவித்துள்ளார்.

"18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே வாக்குரிமை என்பது தவறான ஒன்று. 18 வயதுக்கு உட்பட்டவர்கள் சுமார் 13 மில்லியன் பேர் நம் நாட்டில் உள்ளனர். அவர்களை ஒதுக்கிவிட்டு அரசியலை தீர்மானிப்பது சரியல்ல என்று அவர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டும். அதை அவர்கள் முறையாக பயன்படுத்துகிறார்களா என்பதை பெற்றோர் மேற்பார்வையிட வேண்டும். தேவைப்பட்டால் தங்களது பிள்ளைகளின் சார்பில் அவர்களும் வாக்களிக்கலாம். இதே போன்று 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வாக்குரிமை கிடையாது என்று சொல்வது முட்டாள்தனமானது என்றும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டயானாவின் அரிய புகைப்படம் ஏலம்

லண்டன், ஜன.7

பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸின் மனைவியான டயானாவின் அரிய புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது.

1997 ஆம் ஆண்டு, பாரிஸ் நகரில் உள்ள சுரங்கப்பாதை ஒன்றில் காரில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட பயங்கர விபத்தில் டயானா உயிரிழந்தார். டயானாவின் மறைவுக்குப் பின்னரும் அவரைப் பற்றிய வதந்திகளும் சர்ச்சைகளும் சர்வதேச ஊடகங்களில் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன.

தற்போது டயானாவின் பிரத்தியேக புகைப்படம் ஒன்று அமெரிக்காவில் ஏலத்திற்கு வருகின்றது. டயானா -சார்ள்ஸ் காதல் அரும்புவதற்கு முன்னர், டயானாவுக்கு 18 வயதான போது, 1979-1980 ஆண்டுகளுக்கிடையே இந்த புகைப்படம் எடுக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது. சார்ள்ஸ் -டயானா நிச்சயதார்த்தத்திற்கு 2 நாள் கழித்து, புகைப்படக் கலைஞர் ஒருவர், இங்கிலாந்தின் பிரபல நாளிதழான 'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு இந்த புகைப்படத்தை அனுப்பியுள்ளார்.

அதனைப் பிரசுரிக்காத டெய்லி மிரர் 80 சதுர அங்குளம் உள்ள அந்த புகைப்படத்தின் பின்னால், 'பதிப்பிக்க வேண்டாம்' என்ற அடிக்குறிப்பும் எழுதி வைக்கப்பட்டிருந்தது. பழைய பேப்பர்களை சேகரிக்கும் நிறுவனம் ஒன்று, சில ஆண்டுகளுக்கு முன்னர் 'டெய்லி மிரர்' பத்திரிகை அலுவலகத்தில் இருந்து பழைய அச்சுப் பிரதிகளையும், புகைப்படங்களையும் விலைக்கு வாங்கியது.இந்த பழங்கால புதையலில்தான் டயானாவின் 'யாருமே பார்த்திராத



புகைப்படம்' அந்த நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது.

அந்த புகைப்படத்தில், அடையாளம் தெரியாத ஒரு ஆண் நண்பருடன் டயானா, கட்டிலில் படுத்திருப்பது போலவும், அருகில் உள்ள ஜன்னலின் மீது 'ஜானி வாக்கர்' விஸ்கி புட்டி உள்ளது போலவும் பதிவாகி உள்ளது.இந்த புகைப் படத்தை அமெரிக்காவின் நியூ ஹேம்ஷைரில் உள்ள ஆர்.ஆர். ஏல நிறுவனம் விரைவில் ஏலம்விடு வதற்குத் தீர்மானித்துள்ளது.

## மணிலாவில் துப்பாக்கிச் சூடு கர்ப்பிணி உட்பட ஐவர் சாவு

**துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகக் கூறப்படும் துப்பாக்கிதாரி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்**

மணிலா, ஜன.7

பிலிப்பைன்ஸில் இனந்தெரியாத ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 7 வயதான பெண் பிள்ளையொருவரும் கர்ப்பிணிப் பெண்ணொருவரும் அடங்குகின்றனர்.

பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவுக்கு அருகிலுள்ள நகரமொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகக் கூறப்படும் துப்பாக்கிதாரி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடியிருப்புப் பகுதி மற்றும் சந்தை வழிப் பகுதியாக துப்பாக்கிதாரி சரமாரியாகத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்

## துருக்கியைப் பாதுகாக்கும் அமெரிக்கப் படைகள்

சிரியாவின் தாக்குதலில் இருந்து அதன் அண்டை நாடான துருக்கியைக் காப்பாற்ற பேட்றியாட் ஏவுகணைகளோடு அமெரிக்க இராணுவம் துருக்கி சென்றுள்ளது.

துருக்கியில் எல்லைப் பகுதிகளில் உள்ள நகரங்களில் ஸ்கட் ஏவுகணைகளை சிரியா கொண்டு வந்ததும் அமெரிக்கா, ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து துருக்கிக்கு பாதுகாப்பு அளிக்க முன்வந்துள்ளன.

அதைத் தொடர்ந்து அமெரிக்கா பேட்றியாட் ஏவுகணைகளைக் கொண்டு



வந்துள்ளது.

சிரியா துருக்கி மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா பதிலடி கொடுக்கும். துருக்கியின் கஸியன்டேல் எனும் இடத்தில் 27 அமெரிக்க படைப் பிரிவுகள் முகாமிட்டுள்ளன. துருக்கி யின் அரசு செய்தி நிறுவ னமான அனடோலு இத்த கவலை வெளியிட்டது.

எனினும் அமெரிக்கா தனது படைகள் துருக்கி சென்றிருப்பது குறித்து எந்த தகவலும் வெளியிடவில்லை. கடந்த மாதம் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் லீயோன் பானெட்டா, இந்தப் பகுதியில் உள்ள நாடுகளை தாம் பாதுகாக் கப் போவதாக தெளிவுபடுத் தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விமான விபத்தில் 5 பேர் சாவு

பாரிஸ், ஜன.7

பிரான்ஸில் இடம்பெற்ற தனியார் விமான விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்கு பகுதியில் உள்ள செயின்ட் பியர்-டி-பிரஸ்ஸியக்ஸ் கிராமத்தில் உள்ள கிரனொபிள் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது.

புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விமானத்தின் இயந்திரங்கள் செயல் இழந்துவிட்டதால் விமானம் விழுந்து நொறுங்கியது. இதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.

விபத்துக்கான காரணம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காப்பகத்தில் தீ 7 சிறுவர்கள் சாவு

சீனாவிலுள்ள சிறுவர் காப்பகமொன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின்வடக்குஹெனன் மாகாணத்திலுள்ள சிறுவர் காப்பகத்திலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீயில் சிக்கி 4 சிறுவர்கள் உயிரிழந்தனர். எரிகாயங்களுக்குள்ளாகிய மேலும் 3 சிறுவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் போது உயிரிழந்தனர்.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. பொலிஸார் இதுகுறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரண அறிவித்தல்



540, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லி கல்லூரி முன்பாக)

## சோமசுந்தரம் சண்முகராசா

யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சண்முகராசா கடந்த (03.01.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - யோகரத்தினம் தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் (தேவி) பாசமிகு கணவரும், டயசிறி, ரகுலேஸ்வரி (ஜேர்மனி), சாந்திமதி, சயந்தன் (கனடா), சந்திரப்பிரியா, சியாமளா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராசு (ராஜன் -வீடியோ), கிருபாகரன் (ஜேர்மனி), கணேஸ்வரன் (வான் -உரிமையாளர்), றாஜிகா (ஆசிரியை - சர்வதேச பாடசாலை, மானிப்பாய்), லோகித மோகன் (சங்கவி களஞ்சியம்), சதீஷன் (இத்தாலி) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற கனகராசா மற்றும் தங்கராசா, தர்மராசா ஜெயராணி, செல்வராணி ஆகியோரின் சகோதரரும், திருநாவுக் கரசு, கனகலிங்கம் (சுவிஸ்), கணேசலிங்கம் (கராட்டி - லண்டன்), காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் அமிர்தலிங்கம் (பிரான்ஸ்), தர்மலோஜினி நடராஜலிங்கம் (லண்டன்), சாந்தலிங்கம் (பிரான்ஸ்), கமல லோசனா (கனடா), சாந்தலோசனா (கனடா), பரமலிங்கம் (உரும் பிராய்) ஆகியோரின் மைத்துனரும், கஜதீபன் (கார்த்திக்), யுகப் பிரியா, மகிழினி, ஜெனனி, ஜெனன், கிருஷாளினி, பவிஷாளினி, ஆருதி, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும், டக்ஷயினி, சுவீற்றி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(78027) (45,6,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழந்தைத்தனம் போதிக்கும் பாடம்

(14)

பொருள்களை ஆராய்வதே குற்றம் என்கிற எண்ணம் அதற்கு எற்பட்டு விடுகிறது.

அதே குழந்தை கொஞ்சம் பெரியவனாகி ஒரு காரியத்தில் கவனக் குறைவாக இருக்கும் பொழுது, பெற்றோர்கள் என்ன சொல்கிறார்கள்? எந்தக் காரியத்திலும் இவனுக்கு அக்கறையே இல்லை, கவனம் போதாது, எதிலும் சிந்தனையைச் செலுத்துவது இல்லை என்றெல்லாம் தீர்ப்புச் சொல்லி விடுகிறார்கள்.

இந்த மனநிலை சிறுவனிடம் ஏற்படுவதற்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்களே இப்போது குற்றத்தையும் அந்தச் சிறுவன் மீது சுமத்தி விடுகிறார்கள். இதை சாதாரண விடயமாகக் கருத வேண்டாம். நம்முடைய வீடுகளில் பெரும்பாலும் இதுதான் நடந்து கொண்டு வருகிறது.

இறைவன் குழந்தைகளை உலகத்துக்கு அனுப்பி வைக்கும் போதே சிந்தனா சக்தி படைத்தவர்களாக சாதனை புரியும் ஆற்றல் கொண்டவர்களாகத் தான் அனுப்பி வைக்கிறான். ஆனால் வாழ்க்கையின் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளான பெரியவர்கள் தங்களுடைய தவறான மனோபாவங்களை பிஞ்சுப் பருவத்திலேயே குழந்தைகளின் மீது சுமத்தி விடுகிறார்கள்..

குழந்தைத்தனம் என்பது நாம் எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பதைப் போல அப்பாவித் தனமல்ல. எதையும் ஆராய்ந்து அறியும் நுணுக்கமான நோக்கு குழந்தைகளிடம் இயற்கையாவே இருக்கிறது. இதை நாம் போற்றி வளர்க்க வேண்டும். தவறான திசையில் செல்லுவதற்கு வாய்ப்பில்லை என்று நான் சொல்லவில்லை. அப்போது மட்டும் குழந்தைகளின் செயலைத் திருத்தி ஒழுங்குபடுத்தினால் போதும்.

உங்களுடைய எண்ணங்களை குழந்தைகள் மீது திணிக்காதீர்கள். வாழ்க்கையில் உங்களுக்குத் தோல்வி ஏற்பட்டு இருக்கிறது என்பதற்காக, தோல்வி மனப்பான்மையை குழந்தைகளிடமும் ஏற்படுத்தாதீர்கள். சாதனை புரியும் ஆசையுடன் தான் குழந்தை வளரத் தொடங்குகிறது. அந்த ஆசையை முளையிலேயே கருக்கி விடாதீர்கள்.

குழந்தைத்தனத்தில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் எத்தனையோ இருக்கின்றன. முயற்சியின் அடையாளம் குழந்தைத்தனம். ஊக்கத்தின் அடையாளம் குழந்தைத்தனம். விழுந்தாலும், மீண்டும் எழுந்து நடக்க முடியும் என்பது குழந்தைத்தனம். எதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் ஆராய்ந்து பார்ப்பது குழந்தைத்தனம்.

சில சந்தர்ப்பங்களில் குழந்தைகள் நம்மைப் பார்த்துக் கேட்கும் கேள்விகள் அசௌகரியமானதாக இருக்கலாம். ஆனால் சிந்தனையில் பிறக்கின்ற கேள்விகள் அவை என்பதை மறந்துவிடாதீர்கள். ஒவ்வொரு குழந்தையும் சாதனையாளனாகவே பிறக்கிறது. அது சாதனை புரியவில்லையானால் அதை வளர்க்கின்றவர்கள்தான் தங்களைப் பரிசோதித்து பார்த்துக் கொள்ள வேண்டும்.

**காலம் கனியும் வரை காத்திருங்கள்**

சாதனையாளர்கள் சிலரை நம் கண் முன்னாலேயே பார்க்கிறோம். பலரைப் பற்றியும் கேள்விப்படுகிறோம். இவ்வளவு மகத்தான சாதனைகளை இவர்களால் எப்படி செய்ய முடிந்தது என்று வியக்கிறோம். அவர்களைப் பற்றிய நம்முடைய ஆர்வம் வியப்புடன் நின்று விடுகின்றது.

பதிமூன்றாயிரம் பாடல்களை சுவை குன்றாமல் எழுதிய கம்பனைப் பற்றி நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு. இந்தக் காலத்தைப் போல அந்தக் காலத்தில் மிருதுவாக எழுதுகின்ற பேனாக்களும் வழவழப்பான காகிதங்களும் இருக்கவில்லை. ஓலைச்சுவடிகளில் எழுத்தாணி கொண்டுதான் எழுத வேண்டும். அது எவ்வளவு கடினமான காரியம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அன்றைக்கு ஒரு கவிஞன் பதிமூன்றாயிரம் பாடல்களை அந்தச் சுவடிகளில் எழுதி முடித்திருக்கிறான். அத்தனை பாடல்களையும் எழுதுவதற்கு அவன் எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டான் அவன் எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டான் என்று நமக்குத் தெரியாது.

ஆயினும், எல்லாப் பாடல்களையும் சுவை குன்றாமல் எழுதியிருக்கிறான். ஒரு சோலையையோ அல்லது நகரத்தையோ வர்ணிப்பதற்குக் கூட நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதியிருக்கிறான். இந்தச் சாதனையை அவன் செய்து முடித்ததற்கு அவனுடைய ஆர்வமும் உழைப்புமே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

கம்பன் அருமையாக எழுதியிருக்கிறான் என்று சொல்லிடுவது சுலபம். அதற்குப் பின்னே உள்ள உழைப்பு நம்முடைய கவனத்திற்கு வருவது இல்லை. பாரிஸ் நகரத்தின் ஈஃபிள் கோபுரத்தை கட்டியவனும் சரி,இயேசுநாதரின் கடைசி போஜனத்தை காலத்தால் அழியாத ஓவியமாகத் தீட்டியவனும் சரி, சூயஸ் கால்வாயை வெட்டியவனும் சரி, மிகக் கடுமையான உழைப்புக்குப் பிறகே அந்தச் சாதனையை செய்து முடித்திருக்க வேண்டும்.

எவ்வளவு பெரிய சாதனைக்குப் பின்னும் கடுமையான உழைப்பு இருந்திருக்க வேண்டும் என்பது பொது விதி.

உழைப்பு மட்டும் போதுமா ? ஜார்ஜ் பெர்னாட் ஷா உலகப் புகழ் பெற்ற எழுத்தாளராக விளங்கினார். ஆனால் எழுத்துத் தறையில் அவர் முயற்சிகளை மேற்கொண்டபோது பல ஆண்டுகள் அவர் எழுதிய கட்டுரைகள் பிரசுரத்துக்கு ஏற்கப்படாமல் அவருக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன. அவருடைய புத்தகங்களை வெளியிடுவதற்கு எந்தப் பதிப்பகமும் முன் வரவில்லை. அந்த நிலையில் தான் உலகப் புகழ்பெற்ற எழுத்தாளராகி, தன்னுடைய எழுத்துக்கு கேட்கின்ற தொகையை மற்றவர்கள் கொடுக்கின்ற நிலையை உருவாக்கி சாதனை புரிந்தார்.

பி.சி.கணேசன் (தொடரும்)

# சிறுவர், பெண்களின் தேவைகளை நிறைவேற்றுவதே பயன்மிக்க செயல்

## தினங்களைக் கொண்டாடுவதில் பயனில்லை மேலதிக அரச அதிபர் ரூபினி சுட்டிக் காட்டுகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.7

சிறுவர், பெண்கள் தினங்களைக் கொண்டாடுவதைவிட அவர்களின் தேவைகள், பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவது பயனுள்ளதாக அமையும்.

குறிப்பாக சமூக சேவைகளைச் செய்வோர் இதனை முன்னெடுக்கலாம்.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு வருடமும் சிறுவர், பெண்கள் தினங்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன.

அத்துடன் சிறுவர், பெண்களின் பிரச்சினைகள் அடிக்கடி ஊடகங்களிலும் வெளிப்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் கல்வியில் சிறுவர்கள் மந்த நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் இந்தப் போக்குக்கு அடிப்படையாக வறுமையை எடுத்துக் கூறலாம்.

எனவே, சிறுவர், பெண்களின் தினங்களைக் கொண்டாடுவதை விட அவர்களின் தேவையை அறிந்து அதற்காக மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சிறுவர், பெண்களின் பிரச்சினைகளை இனங்காணுவதற்காக பிரதேச செயலகங்களில் பட்டதாரிப் பயிலுநர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் உதவித் திட்டங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வர்த்தக சங்கம், பல்வேறு உதவித் திட்டங்களை மக்கள் மத்தியில் வழங்கி வருகிறது.

சிறுவர்களின் தற்போதைய பிரச்சினைகளை இனங்கண்டு இந்த உதவியை வழங்குவது வரவேற்கத்தக்கது. இது போன்று தொடர்ச்சியான சமூக சேவைகளை வர்த்தக சங்கம் வழங்க வேண்டும்.- என்றார். (ம-14)



காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழக வருடாந்த பொதுக் கூட்டமும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் மேம்பாட்டு கழக மண்டபத்தில் இடம்பெற்றன. கழக எல்லைக்குட்பட்ட பகுதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்புப் பெற்றனர். தீவக வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன், கிராம சேவையாளர் எஸ். சுதந்திரன், கழகத் தலைவர் என். கிருஷ்ணபவன் ஆகியோருடன் கௌரவிப்பு பெற்ற மாணவர்கள் உள்ளனர். (ம-250)

# சமூக நன்மை கருதி உதவுவோர் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்

## வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் உரை

வலி.வடக்கு, ஜன.7

ஒரு சமுதாயத்தின் எதிர்கால நன்மை கருதித் தமது உடைமைகளை அன்பளிப்புச் செய்பவர்கள் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் இவ்வாறு தெரிவித்தார்.

மல்லாகம் தேவாலய வீதியைச் சேர்ந்த ஜோன் சாமுவேலின் 15 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய முன்றிலில் லயன் ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

நூல்களை வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான். இன்று நூல்களை கற்பதிலும் வாசிப்பதிலும் ஆர்வம் காட்டும் தன்மை நாளுக்கு நாள் குறைவடைந்து கொண்டே செல்கின்றது.


**இன்று நூல்களை கற்பதிலும் வாசிப்பதிலும் ஆர்வம் காட்டும் தன்மை நாளுக்கு நாள் குறைவடைந்து கொண்டே செல்கின்றது.**

இந்த நிலையில் இருந்து விடுபட வேண்டும். குறிப்பாக இளைய தலைமுறையினர் நல்ல நூல்களை தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும். இது மனிதனை முழு மனிதனாக்க உதவுவதுடன் சமூகத்துக்குச் சேவையாற்றவும் வழி சமைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சனசமூக நிலையங்களும் நூலகங்களும் பிரச்சினைகளை உருவாக்கும் இடங்களாக அமையக்கூடாது. மாறாக அந்தப் பகுதிகளில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் உண்டாக்கும் புனித இடங்களாகக் காணப்பட வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இளைஞர்களும் யுவதிகளும் முன்னோடிகளாக அமைய வேண்டியது அத்தியாவசியமாகும்.-என்றார். (ம-86)

# சர்வதேச கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் யாழ்.இந்து மாணவர்கள் சாதனை



சர்வதேச கனிஷ்ட கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த இரு மாணவர்கள் வெள்ளிப் பதக்கத்தையும் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டி இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் லக்னோ நகரில் கடந்த ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றது. இலங்கையிலிருந்து 18 பேர் இந்தப் போட்டியில் பங்கு கொண்டனர்.

போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து கலந்து கொண்ட அருளானந்தம் அபிநந்தன் வெள்ளிப் பதக்கத்தையும், இளங்கோ இளங்கீதன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். (வ-13)


# நிர்வாகிகள் தெரிவு

நவாலி,ஜன.7

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நவாலி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தலைவராக கி.பவுலின், உபதலைவர் பி.பொன்னுத்துரை, செயலாளர் திருமதி ந.புவனேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் 7 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டியின் 88 ஆவது பிறந்ததினம் இன்றாகும். ''சிவத்தமிழ்ச் செல்வி வாசகம்'' என்ற தலைப்பிலான அவரது நினைவு மலரில் இடம்பெற்றுள்ள இந்தக் கட்டுரை அவரது நினைவாகப் பிரசுரமாகிறது.

# சைவ உலகின் தனிப்பெருந் தலைவி...

### சிவதாற்பரிய தேவகி

''சிவம்'' என்ற இலட்சணம் இவர் செயலில்
சீரகமாகக் குடிகொண்டதனால்,
சிந்தாமல் கொள்ளாமல் அறங்களோ
செயலாகி நூறு பலவாகிற்று,

''அவம்'' என்ற சொல் இவரகராதியில்
அடியோடு அகன்றதனால்-அன்னை
அப்பாக்குட்டி தங்கம்மா
அவதார வித்தகியானார்

''தவம்'' என்ற சொல் இவரது வாழ்வால்
தகுதி பெற்ற தெனனாம்-தான
தருமம் தோற்காத வண்ணம்-தெல்லியூர்
துர்க்கை என்றும் கை கொடுப்பாள்.

**கே.எஸ்.சிவஞானராஜா**

சிவநெறிச் செல்வர்.தி.விசுவலிங்கம்
தலைவர்,கனடா சைவசித்தாந்த மன்றம்
நிர்வாக ஆசிரியர், அன்புநெறி.

சைவ உலகின் தனிப்பெருந் தலைவி அன்னை துர்க்கா துரந்தரி, இலக்கிய கலாநிதி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது எண்பத்து மூன்றாவது அகவையில் அமரரானார். அந்தச் செய்தி அறிந்து, அவர் இறைவன் திருவடியில் பேரின்பம் துய்க்க, சிவபெருமான் திருவருளை வேண்டி வணங்கி வருகிறோம்.

அன்னை அவர்கள் அன்புநெறியில் நின்று ஆசிரியப் பணியும் சைவசமயப் பணியும், செந்தமிழ்ப் பணியும், ஆலயப் பணியும், சமூகப் பணியும் என அரும் பணிகளைத் திறம்பட ஆற்றியவர், தொண்டின் திருவுருவமாக விளங்கியவர்.

அன்னை அவர்கள் கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் காப்பாளர்களில் ஒருவராகவும் அன்புநெறி சிறப்பு ஆசிரியர்களில் ஒருவராகவும் விளங்கி வந்தவர். மன்றப் பணிகளைப் போற்றிப் பாராட்டி ஊக்கமும் ஆக்கமும் தந்தவர்.

நாவலர் பெருமான்தொடக்கி வைத்த பிரசங்க மரபினை இன்றைய தலைமுறையிலே பேணி வந்தவர் அன்னையார். இனிய சொற்பொழிவாளராகத் திகழ்ந்தவர், செந்தமிழ் பொழிந்தவர். இவர்தம் சொற்பொழிவுகள் கேட்போரை மெய்மறக்கச் செய்தன. திருமுறைகளிலே தோய்ந்த நெஞ்சினராய் விளங்கியவர். செந்தமிழ் வழக்கினை, திருமுறையின் மாண்பினை, சைவத்தின் திறனை இவர் எடுத்துக் கூறும்போது பெருமித்த உணர்வு தோன்றும். அத்திறமை காரணமாக பல விருதுகள் வழங்கப்பட்ட சிறப்புடையவர். ஈழநாட்டில் மட்டுமன்றி இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, லண்டன் போன்ற நாடுகளில் இவர் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயன் பெற்ற மக்கள் பலர் உளர். இவரைக் குருவாகவும் அன்னையாகவும் போற்றும் பெரியவர்கள் (பலர்) உலகெங்கும் பரந்து உள்ளனர்.

சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் எளிய இனிய தமிழ் நடையில் சுவைபட எழுதும் எழுத்தாற்றலும் நன்கு அமையப் பெற்றவர். பல நூல்களை எழுதி வெளியிட்டவர். 1978 இல் இவரின் கந்த புராணச் சொற்பொழிவு நூலுக்கு சாகித்யமண்டலப் பரிசுகிடைத்தது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அறங்காவற் குழுவின் தலைவராய் விளங்கிய அன்னை அவர்கள், குழுவின் ஒத்துழைப்புடன் ஆற்றி வந்த அறப்பணிகள் சைவசமய வரலாற்றிலே புதிய சாதனைகளாக அமையும் சிறப்புடையவை. ஆலயம் என்பது ஒரு வழிபாட்டுத் தலம் மட்டுமன்று, அது மக்களின் வாழ்வின் சகல துறைகளுடனும் தொடர்பு கொண்டு பணியாற்ற வேண்டும் என்பதை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் சான்றாக அமைகின்றது. அது கதியற்றோருக்குப் புகலிடமாகவும், ஏழைகளின் கண்ணீர் துடைக்கும் கருணை இல்லமாகவும் அமைய வேண்டும் என்ற சிந்தனை சிவத்தமிழ்ச் செல்வியின் ஆலய பரிபாலன முறையில் செயற்படுத்தப்பட்டது. ஆலய வருவாயில் பல அறப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமையும், துர்க்காபுரம் மகளிர் இல்லம், சிவத்தமிழ்ச் செல்வி அன்னையார் இல்லம் போன்றவை நிறுவி நடைபெற்று வருவது இதற்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

அன்னையார் அவர்கள் ''ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணலாம்'' என்பதை தாரக மந்திரமாகக் கொண்டும் ''நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில், படமாடும் கோயில் பரமர்க்கங் காமே'' என்ற திருமந்திர வாக்கைச் செயலில் நடைமுறைப்படுத்தியும் வந்தவர். அன்னை அவர்களின் முயற்சியினால் தேவஸ்தானத்தில் சைவ சித்தாந்த மாநாடு போன்ற மாநாடுகளும், சைவ சமயச் சார்பான பல நூல்கள் வெளியீடும் நடைபெற்றுள்ளன.

1990 இல் சிவத்தமிழ்ச் செல்வி பிறந்த நாள் அறநிதியம் ஆரம்பிக்கப் பெற்றதனை அடுத்து, ஒவ்வோர் ஆண்டும் பல அறக்கொடைகள் செய்யப்பெற்றது, அறிஞர்கள் கௌரவிக்கப்படுவதும், வறுமைக் கோட்டின்கீழ் இருக்கும் மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்புகளுக்கான உபகரணங்கள் அளிக்கப்படுவதும், யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கும், தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலைக்கும் அறக்கொடை நிதி அளித்தமை போன்ற பல அறப்பணிகள் எல்லாம் ''மக்கள் பணியே மகேசன் பணி'' என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இந்தச் செயற்பாடு ஏனையோருக்கும் முன் மாதிரியாக அமைகின்றது.

அன்னை அவர்கள் சைவத் தமிழுலகு செய்த புண்ணியப் பயனாய்த் தோன்றிய திருவருட் செல்வி. சைவத்தமிழ் வரலாற்றிலே தொண்டாற்றிய பெண்மணிகள் வரிசையிலே கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவ உலகின் தனிப்பெரும் தலைவியாகப் போற்றப்பட வேண்டிய சிறப்புகள் நிறைந்தவர். அன்னை அவர்கள் ஆற்றிய, பன்முகத் தொண்டுகளை சைவ உலகம் பாராட்டிப் போற்றுகின்றது. அவர் சிறந்த அருளாளராக வாழ்ந்து காட்டிய வழிகளைப் பின்பற்றி சைவசமய, தமிழ்ப்பணிகளையும், மனிதநேய சமுதாயப் பணிகளையும் திரிகரணசுத்தியோடு நடைமுறைப்படுத்துவோமாக. அவர் முன்னின்று நிறுவிய நிறுவனங்களது அறப்பணிகள் முட்டின்றித் தொடர உதவுவோமாக. ★

# இன, மத, மொழி பேதங்களைக் கடந்தும்............

கலைகள் வாழ்வியலின் அன்றாட விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனால் காலத்தின் கண்ணாடியாக அவை விளங்குகின்றன. சாதாரண மக்களின் இன்ப துன்பங்களையும், தலைவன் தலைவிக்கு இடையிலான ஒழுக்கங்களையும், காதலையும், வீரத்தையும் காட்டுவனவாகவே தமிழ்க்கலைகள் எழுந்தன. செழிப்போடு வளர்ந்தன. அவற்றின் மூலம் அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில்நிலைபற்றியும், வாழ்க்கை முறைபற்றியும் இன்றுவரை நாம் அறியக்கூடியதாகவிருக்கின்றது.

அந்த வகையில் நடனக்கலை பற்றி. தில்லையிலே சிவபெருமான் ஆடுவதாகச் சொல்லப்படுவதும் அந்த நாட்டியம்தான் சிலப்பதிகாரத்திலே மாதவி ஆடியதாகச் சித்தரிக்கப்படுவதும் அந்த நாட்டியம் தான்.

நடனக் கலையானது இன்று உலக நாடுகள் முழுவதும் புகழ் சேர்த்து வருகின்றது என்பது ஒரு இனிமையான வெற்றிகரமான மாற்றமாகும்.

ஒவ்வொரு நடன வகையிலும் ஒவ்வொரு அழகான விடயங்கள் இருக்கும். பரதத்தின் அழகு பாவம், ராகம், தாளம் என்பது தெரிந்த விடயமே. இந்தப் பாவங்களையும் பாடல்களையும் நாம் கையாளும் விதத்தில் பரதம் தனக்குரிய இடத்தை பிடித்திருக்கிறது. ஆடல்கலைகளுள் பரதநாட்டியக் கலையானது இன்று உலகெங்கும் குறிப்பாக மேலத்தேய நாடுகளில் காணக்கூடிய ஓர் அரும்பெரும் கலையாக இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டதாகப் பல்லின மக்களாலும் பயிலப்பட்டு வருகின்றது.




பரதமானது மாணவர்களின் கற்பனை வளத்தைப் பெருக்குவதற்கும், இரசனை இரசிகத் தன்மை ஆகியவற்றை விருத்தி செய்து கொள்வதற்கும் தமிழ் கலாசார பாரம்பரியத்தினைத் தெரிந்து கொள்வதற்கும் அனுசரணையாக அமைகிறது. இன்றைய சிறுவர்கள் நாளைய [illegible] என்பதற்கிணங்க இந்த இளம் சமுதாயத்தினர், விழிப்புணர்வோடு செயற்படுவதற்கும், நாட்டின் ஒருமைப்பாடு, அமைதி ஆகியன குலையாது பேணப்படுவதற்கும், கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் இவ் விளஞ்சமுதாயத்தினர்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அவசியம் [illegible] [illegible] புதிய சிந்தனைகள் எண்ணங்கள் கருத்துக்கள் கற்பனைகள் என்பன வெளிப்படுகின்றன. மனிதனிடத்தில் இயல்பாக அமைந்துள்ள மென்மையுணர்வுகளை தட்டி எழுப்புவதற்கும் ஏற்ற கருவியாக நடனக்கலை காணப்படுகிறது.

பகுத்தறிவு எழுச்சியுருவதற்கு அழகியற்கலை ஒரு நிபந்தனையாகும் என்பது கார்ல் மாக்ஸின் கருத்து. மனிதனின் கற்பனைத் திறன், புலன் நுகர் காட்சிகள், சிந்தனை, விருப்பம் ஆகியன எல்லாம் பல்வேறு உளவியல் உள்ளடக்கங்களிலும் பரந்த செயல்களையும் உடையதொன்றாக அமைகிறது என அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு ஆற்றல் [illegible] எல்லையை நாமும் போற்றுவோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார மமதை, நியாயத்தின் தோற்றத்தை மறைத்துவிடும்

■ தமிழில் - வி.எஸ்.ரி.
மூலம்:- மஹிம
உப்புல் ஜோசப் பெர்னாண்டோ





**இடியப்பச் சிக்கலாகிப் போயுள்ள பிரதம நீதியரசர் விவகாரம்.....**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவருக்கு நெருக்கமானவர்கள் முன்னர் 'மஹிந்த அண்ணா' என விழித்தே அழைப்பது வழக்கம். ஆயினும் அவரை 'மஹிந்த தம்பி' என விழித்து உரையாடுவோரும் இல்லாமல் இல்லை. சிரேஷ்ட இடதுசாரித் தலைவர்களான டியூ.குணசேகரா, திஸ்ஸ விதாரண ஆகியோரும் அந்தத் தரத்துள் அடங்குவர். இவ்விரு அண்ணன்மாரும் பிரதம நீதி அரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதை பின் போட்டு பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுமாறு அண்மையில் ஜனாதிபதிக்கு ஆலோசனை தெரிவித்திருந்தனர். அதற்கு ஜனாதிபதி அந்த அண்ணன்மாருக்கு என்ன பதில் கூறியிருப்பார் என்பது தெரியவில்லை. ஆயினும் குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்ளும் நடவடிக்கையை தாம் பின்தள்ளி வைக்கப் போவதில்லை என ஊடகங்களுக்கு ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

1993ஆம் ஆண்டில் தாம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சமயம், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மஹிந்த இதேபோன்றதொரு ஆலோசனையை வழங்கியிருந்தார்.

"நீங்கள் அரசின் உயர்மட்டத் தலைவர்களுக்கு நாட்டினதும், நாட்டின் மக்களினதும் உண்மை நிலையை எடுத்துச் சொல்வதில்லை. அவர்களை எந்த நேரமும் பாதுகாப்புப் படையினர் சூழ்ந்துள்ளனர். ஆதலால் அவர்களுக்கு நாட்டு மக்களது உண்மை நிலை தெரிய வாய்ப்பில்லை. நாட்டின் உயர்மட்டத் தலைவர்கள் வேறொரு லோகத்தில் சஞ்சரிக்கின்றனர். அரச தலைவரின் தவறான முடிவுகளை அவருக்கு எடுத்து விளக்கிக் கூற கீழ்மட்டத்தினர் அஞ்சுகின்றனர். மாறாக அரச தலைவருக்குத் துதிபாடும் போக்கையே கீழ்மட்டத்தினர் கடைக்கொள்கின்றனர். நல்ல விடயங்களை மட்டுமே அரசின் தலைவருக்கு எடுத்துச் சொல்வதையே நீங்கள் வழக்கப்படுத்திக் கொண்டுள்ளீர்கள். ஆதலால் தாம் செய்யும், கூறும் விடயங்கள் யாவும் சரியானவை என்றே அரச உயர் தலைவர்கள் கருதுகின்றனர். ஆனால் நாங்கள் அரச தரப்பில் செயற்பட நேர்ந்தால், நாம் எமது உயர் தலைவர்களுக்கு நாட்டின் சகல நல்ல, கெட்டவை குறித்து எடுத்துக் காட்டத் தவறமாட்டோம்" என அன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வேளை மஹிந்த தெரிவித்திருந்தார்.

தமது அந்த உரையின் மூலம், தாம் அரச தரப்பில் செயற்பட நேரும் வேளை, அரசத் தலைவர் தவறான முடிவை மேற்கொண்டால், அதை அவருக்குச் சுட்டிக்காட்டத் தாம் பின்னிற்கப் போவதில்லை என்று அன்று மஹிந்த தெளிவுபடுத்தியிருந்தார். மஹிந்த மேற்குறித்த கருத்தை வெளியிட்டு தற்போது 20வருட காலம் கடந்துள்ளது. இன்று அவர் நாட்டின் அதியுயர் தலைவர். இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி.

பிரதம நீதி அரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையொன்றை கொண்டு வர வேண்டாம் என டியூ.குணசேகரா, திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளனர். இந்த அரசிலும் நாடாளுமன்றத்திலும் சிரேஷ்ட உறுப்பினரான ரத்ன சிறி விக்கிரமநாயக்கவும் இந்தக் குற்றவியல் பிரேரணை விடயத்தில் ஓரடி பின்னெடுத்து வைத்துச் செயற்பட வேண்டுமெனக் கூறியிருந்தார்.

ஆனால், அன்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க குறித்துத் தாம் விமர்சித்தமை போன்று, இன்று ஜனாதிபதி மஹிந்தவும் வேறொரு லோகத்திலேயே சஞ்சரிக்கின்றார். அன்று அவர் கூறியமை போன்றே இன்று அவரும் பாதுகாப்பு படையினர் மற்றும் புலனாய்வுத் துறையினரின் பாதுகாப்பு வளையத்துள் இருக்க நேரிட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் அனைவரும் அரசின் எதிரிகளே என இன்று ஜனாதிபதி எண்ணுகிறார். அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச தரப்புக்கள் இந்த பிரிவுக்குள் அடங்குவதாக அவர் எண்ணுகிறார். ஆனால் ஜனாதிபதியையும், அரசையும், நாட்டையும் காப்பாற்ற எண்ணும் சகலருமே இந்த குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்டமையை எதிர்த்தாக வேண்டும். ஏனெனில் இந்த குற்றவியல் பிரேரணை ஜனாதிபதியையும் அரசையும் மட்டுமன்றி நாட்டையுமே நாசப்படுத்தவல்லது.

### 1983 ஆகும் 2013 ஆம் ஆண்டு

1983ஆம் ஆண்டைய கறுப்பு ஜூலைக்கும் 2013 ஆம் ஆண்டின் கறுப்பு ஜனவரிக்குமிடையே வேறுபாடு ஏதும் இல்லை. 1983 ஆம் ஆண்டில் வடபகுதியிலிருந்து கண்ணிவெடியில் கொல்லப்பட்ட 13 இராணுவ வீரர்களது சடலங்களைக் கொழும்புக்கு கொண்டு வந்தபோது அதனை ஒருவெட்கக்கேடாக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரும் அவரது ஐக்கிய தேசியக்கட்சி அரசும் கருதின. "நாடாளுமன்றத்தின் ஆறில் ஐந்து மடங்கு பெரும்பான்மை பலம் கொண்டது எமது அரசு, கெட்ட தமிழர்கள் எமக்கு சண்டித்தனம் காட்டுவதா? என்று கூச்சலிட்டு ஜே.ஆரும். அரசும் அன்று சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு கூச்சலிட்டு ஆவேசப்பட்டனர். அவர்களது அத்தகைய இனவாதக் கூச்சலையடுத்தே நாட்டின் சிங்கள மக்கள் தமிழர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களை விரட்டியடித்தனர்.

இன்று போர் முடிவடைந்த போதிலும், தமிழ் மக்களுக்கு அன்று செய்த அநியாயங்களுக்கான சாபம் இன்னமும் நீங்கி விடவில்லை. அந்தச் சாபத்தை ஜே.ஆரும் அவரது அரசும் மட்டுமன்றி நாடே அனுபவிக்க நேர்ந்தது.

தமிழர்கள் என்போர் இந்நாட்டின் சிறுபான்மை இனத்தவர் எனக் கூறி அவர்களில் பலரைப் படுகொலை செய்து, அவர்களது சொத்துகளை தீயிட்டு நாசமாக்கி, அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுவிரட்டியடித்தமை குறித்து இந்தியா உட்பட்ட உலக நாடுகளின் கண்டனங்கள் அந்த வேளையில் ஜே.ஆருக்கோ அரசுக்கோ புரிபடவில்லை. பின்னொரு சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தில் வைத்து மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கருத்து. போன்று, ஜே.ஆரும் அரசும் அந்த வேளையில் இந்த லோகத்தில் இருக்கவில்லை. நாட்டின்நிலையை உணர இயலாத விதத்தில் பாதுகாப்புப் படையினரதும் புலனாய்வுப் பிரிவினரதும் கண்காணிப்பில் அவர்கள் இருக்க நேர்ந்தமையே அதற்கான காரணமாகும்.

குற்றவியல் பிரேரணையூடாக நீதித்துறை மீது தாக்குதல் மேற்கொள்ள முயல்வது, தமிழ் மக்கள் மீது அன்று தாக்குதல் மேற்கொண்டமையை விடப் பயங்கரமானதொன்றாகும். அன்று கறுப்பு ஜூலையூடாக தமிழ் மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கறுப்பு ஜூலையின்போது தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுத்தன் காரணமாக ஜே.ஆரின் அரசு விடுதலைப் புலிகளை ஆயுதம் ஏந்த வைப்பித்தது. நீதித்துறை மீது தாக்குதல் தொடுப்பதன் மூலம் இன்றைய அரசு அநீதிக்கு ஊக்கமளிக்கப் போகிறது.

அன்று 13 இராணுவ வீரர்களைப் படுகொலை செய்தமைக்காக தமிழர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு, படுகொலை செய்து அவர்களது சொத்துக்களைத் தீயிட்டு நாசப்படுத்தி, பயமுறுத்தினால் மீண்டுமொருதடவை வடபகுதியில் அத்தகைய சம்பவங்கள் இடம்பெறாது என ஜே.ஆரின் அரசு தப்புக்கணக்குப் போட்டது. அதே போன்று, பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து அகற்றி விட்டால் நீதிமன்றத்தால் அரசுக்கு எதிரான எந்தவொரு தீர்ப்பும் வழங்கப்பட வாய்ப்பற்றுப் போய் விடுமென இன்று மஹிந்தவின் அரசு நம்புகிறது.

### நீதியை நிலைநாட்டப் போராட்டம்

நாடாளுமன்றத்தில் மூன்றில் இருமடங்கு பெரும்பான்மைப் பலம் கொண்டுள்ள இந்த அரசுக்கு நீதித்துறை சவால் விடுக்க இயலுமா? என ஆக்ரோசத்துடன் சாரத்தைமடித்துக்கட்டிக் கொண்டு அரசு, பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையைக் கொண்டு வந்தது. ஆனால் நீதித்துறை தோல்வியுற்றால், அது, அன்று வடக்கு கிழக்கை விடுதலைப் புலிகளிடம் இழக்க நேர்ந்ததை விடப் பயங்கரமானதொன்று என்பதை இந்த அரசு புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அதனை தற்போதைய பிரதம நீதியரசர் தெரிந்து வைத்துள்ளார்.

பலபுறமிருந்தும் என் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது. நான் எதை இழக்க நேர்ந்தாலும், நாட்டின் பொது மக்கள் மத்தியில் அநியாயத்துக்கு எதிராகப் போராடும் சக்தியை உருவாக்குவதே எனது எதிர்பார்ப்பாகும்" என அண்மையில் பிரதம நீதியரசர் தெரிவித்திருந்தார்.

'திவிநெகும' சட்ட மூலத்துக்கு எதிராக தீர்ப்பு வழங்காதிருக்க ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு வாய்ப்பிருந்தது. அவ்விதம் சட்ட மூலத்துக்கு ஆதரவாக அவர் தீர்ப்பு வழங்கியிருந்தால், உலகிலுள்ள சிறந்த நாட்டுப் பற்றாளரென அவர் அரசினால் போற்றப்பட்டிருப்பார்.

சட்ட மூலத்துக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியதன் பின்னர் கூட அரசுடன் இணங்கிப் போக அவருக்கு வாய்ப்பிருந்தது. தமது பிரதம நீதியரசர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதன் மூலம், தாம் விரும்பும் வெளிநாடொன்றுக்கு இலங்கைக்கான தூதுவர் பதவியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கூட அவருக்கு இருந்தது. ஆனால் அவர் நாட்டுக்காக, நாட்டில் நீதியை நிலைநாட்டுவதற்காக, தனது நிலைப்பாட்டிலிருந்து சற்றேனும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

பிரதம நீதியரசர் மீது பல தரப்பட்ட குற்றம் குறைகள் சுமத்தி அவரைத் திட்டித் தீர்த்து அவரை வீழ்த்த அரசினால் இயலாது போயுள்ளது. இன்று அவர் நீதியைப் பாதுகாக்கும், நீதியை நிலை நிறுத்தப் போராடும் ஒருவராக, சட்டத்தின் காவலனாக ஆகியுள்ளார். தம்மைப் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து அகற்ற அரசுக்கு அவர் இடமளித்து மௌனம் காத்திருப்பாரானால், அதற்குப் பின்னர் நீதித்துறைக்குத் தலைமையேற்போர், அரசுக்கு எதிராகத் தீர்ப்பளித்தால் தாமும் பதவியிழக்க நேரிடுமென்ற அச்சத்துடன் அரசுக்கு ஆதரவாகவே தீர்ப்பளிக்க நேரிடும். அரசின் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு வழக்குகளிலும் கூட அவர்களுக்கு சார்பாகவே தீர்ப்பளிக்க நேரிடும். நீதித்துறையினருக்கு ஏற்படத்தக்க அத்தகைய அச்சத்தைப் போக்குவதே பிரதம நீதியரசரின் தற்போதைய போராட்டத்தின் குறிக்கோள்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

**அன்று கறுப்பு ஜூலையூடாக தமிழ் மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கறுப்பு ஜூலையின்போது தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுத்தன் காரணமாக ஜே.ஆரின் அரசு விடுதலைப் புலிகளை ஆயுதம் ஏந்த வைப்பித்தது. நீதித்துறை மீது தாக்குதல் தொடுப்பதன் மூலம் இன்றைய அரசு அநீதிக்கு ஊக்கமளிக்கப் போகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த இரண்டு காசுகள்

ஜெருசலேத்தில் உள்ள தேவாலயத்தில் உள்ள பலிபீடத்தின் முன்பான ஒரு பெட்டி உண்டு. அது காணிக்கைப் பெட்டி.

ஆலயத்துக்கு வருகின்றவர்கள் பிரார்த்தனை செய்துவிட்டு திரும்பிப் போகின்றபோது அந்தப் பெட்டியிலே காணிக்கை போடுவார்கள். அவர்களாலே எவ்வளவு முடியுமோ அவ்வளவு போடுவார்கள். அவரவரின் வசதிக்குத் தகுந்த மாதிரி போடுவார்கள். வசதி உள்ளவர்களாக இருந்தாலும் சரி... வசதியே இல்லாத வறியவர்களாக இருந்தாலும் சரி.... ஆலயக் காணிக்கைப் பெட்டியிலே பணம் போடுவது அவர்களுக்கு மிகவும் பெருமையான ஒரு செயல்.

ஒரு சமயம் இயேசு தம்முடைய சீடர்களோடு அந்த ஆலயத்துக்கு வந்தார். அங்கு உட்கார்ந்து நீண்ட நேரம் வழிபாடு செய்து கொண்டிருந்தார். சீடர்களும் அந்த ஜெபத்திலே கலந்துகொண்டார்கள். வழிபாடு முடிந்தது.

இயேசு உட்கார்ந்திருக்கிறார். காணிக்கைப் பெட்டியிலே பணம் போடுகின்றவர்களைக் கவனித்தார். சீடர்களும் அதையே கவனித்துக் கொண்டிருந்தனர்.

அதிகமானோர் வரிசையாக வந்தார்கள். அவர்களாலே முடிந்த அளவுக்குப் பணம் போட்டுவிட்டுப் போனார்கள். வசதியானவர்கள் நிறைய பேர் வந்தார். அவற்றுக்கு மத்தியிலே வயதான ஒரு அம்மாவும் வந்து பணம் போட்டு விட்டுப் போனார்.

இப்போது இயேசு தன் சீடர்கள் பக்கம் திரும்பி ஒரு கேள்வி கேட்டார்.

"இப்போது இந்தக் காணிக்கைப் பெட்டியிலே நிறைய பேர் வந்து பணம் போட்டுவிட்டுப் போனதை நீங்கள் கவனித்தீர்களா?

இன்றைக்கு இந்தக் காணிக்கைப் பெட்டியிலே அதிகமாகப் பணம் போட்டது யார்? என்று கேட்டார்.

முதலில் வந்தாரே ஒரு பெரிய மனிதன் அவர்தான் அதிகமாகப் போட்டார் என்றார் ஒருத்தர்.

மூன்றாவதாக வந்தவர்தான் அதிகமாகப் போட்டார் நான் கவனித்தேன் என்றார் ஒருத்தர்.

இப்படி ஆளுக்கு ஒரு விதமாகச் சொன்னார்கள். கடைசியாக இயேசு சொன்னார். இன்றைக்கு அந்தப் பெட்டியிலே அதிகமாகப் பணம் போட்டவர்கள் அந்த வயதான அம்மாதான் என்றார். சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த அம்மா மிகவும் ஏழை. அவர் எப்படி அதிகமாக காணிக்கை செலுத்த முடியும் என்று நினைத்தனர்.

இயேசு விளக்கினார். அதிகமானோர் வந்தார்கள். அதிகமாகப் பணம் போட்டார்கள். அது உண்மைதான். ஆனாலும் அந்த அம்மா என்ன செய்தார் என்று கவனித்தீர்களா? வந்து தன்னுடைய பணப் பையைத் திறந்து அப்படியே கொட்டினார். அதிலே இருந்த இரண்டே இரண்டுநாணயங்கள்தான். அந்த இரண்டு நாணயங்களும் காணிக்கைப் பெட்டியிலே விழுந்துவிட்டன. மற்றவர்கள் எல்லாம் தங்களிடம் இருந்த செல்வத்தில் ஒரு சிறு பகுதியை எடுத்துப் பெட்டியிலே போட்டார்கள். ஆனால் அந்த அம்மா தன்னிடம் என்ன இருந்ததோ அதை அப்படியே போட்டார்.

தன்னுடைய பிழைப்புக்காக வைத்திருந்த அவ்வளவையும் இழப்பதற்குத் தயாராயிட்டார். அவ்வளவு தாராளமான மனது அவர்களுக்கு இருந்தது. அதனாலே அவர் செலுத்திய காணிக்கைதான் அளவிலே அதிகம் என்றார். விலைமதிப்பில்லாத முத்துப் புதையல் ஒருவருக்குக் கிடைக்கப் போகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் மதிப்பை உணர்ந்தவன் என்ன செய்வான்? அதை அடைவதற்காகத் தன்னிடம் இருக்கிற எதையும் கொடுப்பதற்குத் தயாராக இருப்பான். அதுமாதிரிதான் இதுவும் என்றார்.

உலக மதிப்பீடுகளைத் துரும்பாக, தூசியாக மதித்து அவற்றை உதறிவிடுகிறவன் இறையருள் என்னும் இணையில்லாத செல்வத்தைப் பெறுகிறார். இறைவனுக்காக இழப்பது என்பது துன்பப்படுகின்றவர்களுக்காக ஏழைகளுக்காக ஏதுமற்றவர்களுக் காக இழப்பது என்று அர்த்தம். உங்கள் அயலாருக்கு நீங்கள் என்ன உதவி செய்தாலும் அதை எனக்கே செய்கிறீர்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 100 வருட பழைமை வாய்ந்த நெடுந்தீவு நெழுவினி விநாயகர்



**லக்ஸ்மன்**

நெடுந்தீவு பிரதான வீதிக்குச் சமீபமாக சுமார் நூறு வருடங்களுக்கு முன் நெழுவினி பிரதேசம் பற்றைக்காடுகள் நிறைந்த பகுதியாகக் காணப்பட்டது. இந்தப் பாதையூடாக தொழிலுக்குச் சென்று இரவில் திரும்பி வரும் மக்கள் பற்றையுள் இருந்து வெளிச்சம் ஒன்று தெரிவதைப் பல நாள்களாக அவதானித்து வந்துள்ளனர். தாங்கள் கண்ட வெளிச்சம் குறித்து அந்தப்பகுதியில் செல்வாக்குள்ள இராமநாதனிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராமநாதன் தன்னுடன் வேறும் சிலரைஅழைத்துச் சென்று பற்றைகளைத் துப்புரவு செய்த போது செம்பினாலான விநாயகர் விக்கிரகம் ஒன்று கிடைக்கப் பெற்றது. உடனேயே ஒரு சிறிய குடிலை அமைத்து அதில் அந்த விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து வைத்தார்.

தனிநாயக முதலியின் பரம்பரையைச் சேர்ந்த பெருமையினர் நாகநாதர் என்பவர் கி.பி 1820 இல் நெடுந்தீவின் மணியகாரனாக இருந்ததார். நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் குடியிருந்த அவர் தனது தோட்டங்களையும், பண்ணைகளையும் தீவின் மேற்குப் பகுதிக்குச் சென்று இரவு திரும்ப வீடு செல்வார். இப்படியான சில சமயங்களில் நெழுவினிக்கு அண்மையில் காட்டில் வெளிச்சம் தெரிவதைக் கண்ணுற்றுள்ளார். குறிப்பிட்ட ஒளியை வேறு எவரும் காணவில்லை என்பதைத் தெரிந்து கொண்டு அந்தப் பகுதியைத் துப்புரவு செய்வித்தார். அப்போது விநாயகப் பெருமானின் விக்கிரகம் வெளிப்பட்டது. இந்துக்கள் அனைவரும் சேர்ந்து நாகநாதர் தலைமையில் புதிய ஆலயமொன்றை அமைக்கத் தீர்மானித்தனர். அரச அதிகாரியின் அனுமதி பெற்று இந்தியாவில் இருந்து ஸ்தபதி ஒருவரை அழைத்து வந்து விநாயகர் விக்கிரகம் காணப்பட்ட இடத்தில் கோயிலை அமைத்தார்.

இற்றைக்கு இருநூறு வருடங்களின் முன் எனது மூதாதையர் நெடுந்தீவு மேற்கு வேலாயுதர் ஐயம் பெருமாள் தனக்குரித்தான நெழுவினி என்னும் ஆதனத்தில் சித்தி விநாயகப் பிள்ளையார் ஒளிமூலம் காட்சி கொடுத்து எழுந்தருளியிருந்த தலத்தில் தனது சொந்தப் பொருளைக் கொண்டு ஒரு ஆலயம் அமைத்தார். அதில் சித்தி விநாயகப் பிள்ளையாரை பிரதிஷ்டை செய்வித்து ஸ்தாபித்து பரிபாலித்து வந்தார். அதன் விருத்திக்காகவுள்ள பல திருத்தங்களைச் செய்வித்தும் காணி வழங்கியும் வாகனம் செய்வித்தும் உற்சவம் நடத்தியும் நன்கு பரிபாலித்தார்.

அவரின்பின் அவரின் மகன் இராமநாதனும் ஆலயத்துக்குச் செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்தார். ஆலயத்துக்கு வரும் வருமானத்தையும் மற்றும் பக்தர்களால் கொடுக்கப்படும் கொடைப் பொருள்களையும் தன் பொருளையும் கொண்டு ஆலயத்தின் சபா மண்டபம் , பண்டகசாலை போன்றவற்றைக் கட்டி கொடுத்தார். காணி உறுதி இலக்கமாக 6297 இலுமாக அந்த ஆலயம் பற்றிய கதைகள் கூறப்படுகின்றது.

எல்லோருமே வெளிச்சம் தோன்றியது பற்றிக் குறப்பிடுகின்றனர். அதன் மூலம் ஒளியின் ஊடாகக் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் விக்கிரகமே இந்த ஆலயம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்துள்ளமை புலனாகின்றது.

விதேசிகளின் வருகையைத் தொடர்ந்து இந்துக் கோயில்கள் இடித்து அழிக்கப்பட்டதும் இந்துக்கள் தமது மதக் கோட்பாடுகளை மிகவும் இரகசியமான முறையில் தொடர்ந்து கொண்டிருந்தனர். இந்து ஆலயங்களில் காணப்பட்ட விக்கிரகங்களை பற்றைக்குள்ளும் ஓலைக் கூரைகளும் உள்ளும் மறைத்து வைத்தனர் என்றும் வரலாறுகள் கூறுகின்றன.

விதேசிகளின் வருகையைத் தொடர்ந்து இந்துக் கோயில்கள் இடித்து அழிக்கப்பட்டதும் இந்துக்கள் தமது மதக் கோட்பாடுகளை மிகவும் இரகசியமான முறையில் தொடர்ந்து கொண்டிருந்தனர். இந்து ஆலயங்களில் காணப்பட்ட விக்கிரகங்களை பற்றைக்குள்ளும் மறைத்து வைத்தனர் என்றும் வரலாறுகள் கூறுகின்றன.

அதே போன்று விநாயகர் விக்கிரகமும் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் நெடுந்தீவு பூமுனை பகுதியில் இருந்த பிள்ளையார் கோயிலும் அந்நியரின் தாக்குதல்களுக்கு உள்ளாகின. இதில் அந்த ஆலயத்தில் இருந்த விநாயகர் விக்கிரகத்தை எடுத்து வந்து நெடுவினியில் மறைத்து வைத்திருந்தனர். பின்னர் அங்கு புதிய ஆலயம் அமைக்கப்பட்டு விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் பல்வேறு ஊகங்கள் சொல்லப்படுகின்றது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காத்தான்குடி நகரசபையால் தோணாக்கால்வாய் துப்புரவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய காத்தான்குடி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நீரை வடிந்தோட வைப்பதற்காகவே இந்தத் துப்புரவுப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறையில் தானிய உற்பத்திக்கு ஊக்கமளிக்க அரசு நடவடிக்கை

## உதவிகள் வழங்கப்படும் என்கிறார் அமைச்சர்



அம்பாறை,ஜன.7

அம்பாறை மாவட்டத்தில் நெல் மற்றும் ஏனைய தானியப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான உதவிகளை அரசு வழங்கும்.

இவ்வாறு விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் அதிகளவு நெல் உற்பத்தியில் ஈடுபடும் மாவட்டங்களில் அம்பாறை மாவட்டம் முக்கியமானது என்று அவர் கூறினார்.

அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள உதவி விவசாயக் அலுவலகத்தை விரிவுபடுத்தி, வளப்பற்றாக்குறைகள் தீர்த்து வைக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

இந்தக் கூட்டத்தை அடுத்து, விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை விவசாயக் காணிகள் அமைந்துள்ள இடத்துக்கு அழைத்துச் சென்ற கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெப்பை அட்டாளைச்சேனைப் பிரதேச விவசாயிகள் எதிர்கொள்ளும் நீர்ப்பாசனப் பிரச்சினைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

இந்தக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன, கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமா லெப்பை, விவசாய அமைச்சின் செயலாளர் டப்ளியு. சக்கலசூரிய உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## திருமலையில் பொலிஸ் மா அதிபர்



திருகோணமலை,ஜன.7

திருகோணமலைக்கு பொலிஸ் மா அதிபர் என்.இலங்ககோன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விஜயம் செய்தார்.

திருகோணமலைக்குச் சென்ற அவர், இந்த வருடத்துக்கான சுதந்திர தின கொண்டாட்டத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

பொலிஸ் மா அதிபரின் திருகோணமலை வருகையை முன்னிட்டு போக்குவரத்துப் பொலிஸார் விசேட கடமைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மலையகத்தில் தொடர்ந்து கடும் காற்று

### பல்வேறு பகுதிகளிலும் பாதிப்புக்கள்

நுவரெலியா,ஜன.7

மலையகப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை முதல் வீசுகின்ற காற்றால் பல்வேறு பகுதிகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை, றம்பொடை போன்ற பகுதிகளில் வீசிய காற்றால் மரங்கள் முறிந்து வீடுகளின் மீது விழுந்துள்ளன.

மஸ்கெலியா, நோர்வூட் போன்ற பகுதிகளிலும் பலத்த காற்று வீசத்தொடங்கியுள்ளது. அதனால் மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியே வருவதற்கு அச்சமடைந்துள்ளனர். (ச)

# அக்கரைப்பற்று உள் வீதிகளை புனரமைப்புச் செய்து தாருங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

அக்கரைப்பற்று,ஜன.7

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட உள் வீதிகள் அனைத்தும் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு சேதமடைந்துள்ளன. அந்த வீதிகளை உடனடியாகப் புனரமைத்துத்தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட உள் வீதிகள் அனைத்தும் போக்குவரத்து செய்ய முடியாதவாறு மோசமாகச் சேதடைந்துள்ளன.

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியால் மாத்திரமே போக்குவரத்துச் செய்ய முடியுமே தவிர, உள் வீதிகளில் போக்குவரத்துச் செய்ய முடியாது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் கடும் மழை பெய்து வருவதனால், தாழ் நிலப்பகுதிகளில் நீர் நிரம்பியுள்ளது. ஏற்கனவே வீதிகள் குன்றும் குழியுமாக இருந்தமையால் அவை அனைத்திலும் நீர் நிரம்பியுள்ளது.

உள்வீதிகள் யாவும் வடிகான் அமைக்கும் நோக்கில் தோண்டப்பட்டுள்ளன. ஒரு வீதிகூட முற்றாக வடிகான் அமைத்து இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. மழை காலம் என்பதால் புனமைப்புப் பணிகளும் நடைபெறவில்லை என்று கூறப்படுகிறது.

வருடத்தின் நவம்பர், டிசெம்பர் மாதங்கள் மழை காலம் என்பதை அதிகாரிகள் ஏன் கவனத்தில் கொள்ளவில்லை என்று பொதுமக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

# மட்டக்களப்பில் மீண்டும் வெள்ள அபாய நிலை



மட்டக்களப்பு,ஜன.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் கடும் மழையால் பல்வேறு பகுதிகளிலும் மீண்டும் வெள்ள அபாய நிலை தோன்றியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவிலிருந்து கடும் மழை பெய்துவருவதுடன் பல பகுதிகளில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

படுவான்கரைப் பிரதேசம், காத்தான்குடி, மட்டக்களப்பு, செங்கலடி, கிரான், ஓட்டமாவடி ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகள் மீண்டும் வெள்ளத்தால் பாதிப்பை எதிர்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தொடந்து மழைபெய்ய ஆரம்பித்துள்ளதால், பாதிக்கப்பட்ட பகுதிகள் மீண்டும் பாதிக்கப்படும் அபாய நிலை உருவாகி வருகிறது.

கிழக்கில் மீண்டும் வெள்ள இடர் ஏற்பட்டால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பலம்பொருந்திய நிர்வாக அமைப்பாக தமிழ்த் தேசியம் வலுப்பெற வேண்டும்

## துரைரெட்ணம் வேண்டுகோள்

திருகோணமலை,ஜன.7

தமிழ்த் தேசியம் பலம் பொருந்திய நிர்வாக அமைப்பாக வலுப்பெறுவதன் மூலம் மட்டுமே தமிழர்கள் எதிர்நோக்கும் அரசியல் விடயங்களுக் குத் தீர்வைக் காண முடியும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் தேசியத்தின் உரிமைகள் தொடர்பாக எம்மீது பொறுப்புக்கள் திணிக்கப் பட்டுள்ளன.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வெகுஜன அரசியல் போராட்டத்தை வலிமை உடையதாக்கி வெற்றி கொள்வதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அமைப்பு ரீதியாகவும் நிர்வாக ரீதி யாகவும் வலுப்பெற வேண் டும்.

தமிழ்த் தேசியத்தின் குரலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல வருடங்களாக பல சாதனைகளைப் புரிந்துள்ளதை மறுப்பதற்கில்லை.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாகச் செயற்பட்டால் மாத்திரமே எமது தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க முடியும். இல்லையேல் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்த பொறுப்பும், பழியும் தமிழ்த் தலைமையையே சாரும்.

கிழக்கு மாகாண நிர்வாகத்தை ஒரு சமூகம் சார்ந்ததாக மாற்றுவதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றனவா? என்னும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

> தமிழ் தேசியத்தின் உரிமைகள் தொடர்பாக எம்மீது பொறுப்புக்கள் திணிக்கப் பட்டுள்ளன.



இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. பல உள்ளூராட்சி சபைகளில் ஆளும் தரப்பினராகவும், கிழக்கு மாகாண சபை, நாடாளுமன்றம் ஆகியவற்றில் எதிர்த்தரப்பினராகவும் செயற்படுவதற்கு திட்டங்களை முன்வைத்து செயல்படவேண்டும்.

எந்தளவுக்கு உரிமைகள் தொடர்பாகக் குரல் கொடுக்கின்றோமோ, அந்த அளவுக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்பான விடயங்களிலும் சிறப்பாகச் செயல்பட வேண்டும். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்டம் மாறாது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான உறுதியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.- என்றார். (ச)

# தேசிய எல்லை நிர்ணயம் தொடர்பான மாற்றுக் கருத்தைத் தெரியப்படுத்தவும்

## மு.கா.பிரதித் தலைவர் கோருகிறார்

திருகோணமலை,ஜன.7

தேசிய எல்லை நிர்ணயம் தொடர்பிலான மாற்றுக் கருத்துக்களை முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ஹாபிஸ் நஸீர் அஹமட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய எல்லை நிர்ணயக் குழுவானது எல்லை நிர்ணயம் தொடர்பிலான தனது அறிக்கையினை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் எல்லை நிர்ணயம் குறித்து அவதானத்தோடு நாம் இருந்து வருகின்றோம்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலானது புதிய முறைமையின் பிரகாரம், 70 வீதம் வட்டார அடிப்படையிலும், 30 வீதம் விகிதாசார அடிப்படையிலும் இடம் பெறவுள்ளது. எனவே, இதற்கென புதிதாக எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, இந்த விடயத்தில் முஸ்லிம் மக்கள் மிகவும் கரிசனையுடன் செயற்படுமாறு வேண்டுகின்றேன்.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மன உளைச்சல் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. நட்பு வட்டம் விரியும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். முற்கோபம் விலகும்.

**இடபம்:** வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். தாயின் உடல் நிலை சீராகும். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**மிதுனம்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பணம் தேவையான அளவு இருக்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிட்டும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**கடகம்:** நீண்டநாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பெற்றோரின் ஆதரவு உண்டு.

**சிங்கம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. தந்தையின் உடல் நிலை சீராகும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**நாளை**

மார்கழி -24 செவ்வாய்க்கிழமை 08.01.2013
திதி: ஏகாதசி மு.ப 11.01 வரை
நட்சத்திரம்: விசாகம் கா.06.36
அனுசம் பி.இ.04.59
சுபநேரம்: 11.02- 12.32 வரை
ராகுகாலம்: 03.32- 05.02 வரை

**துலாம்:** வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள். சிறுசிறு ஏமாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பொறாமை பிரச்சினை வந்து நீங்கும்.

**விருச்சிகம்:** அடுக்கடுக்கான வேலைகளால் அவதிபடுவீர்கள். உறவினர், நண்பர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். அரச காரியங்கள் இழுபறியாகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிர்க்கவும்.

**தனுசு:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

**மகரம்:** கடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. வீடு, வாகனச் செலவுகள் குறையும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கும்பம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும்.

**மீனம்:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 8 | | | | | 9 | |
| | 9 | | 3 | | 8 | | | |
| | | 7 | | | 5 | | 8 | 4 |
| 4 | | | | 3 | | 8 | 5 | |
| | 2 | 3 | | | | 4 | 7 | |
| | 5 | 1 | | 8 | | | | 6 |
| 3 | 8 | | 4 | | | 2 | | |
| | | | 6 | | 9 | | 4 | |
| | 4 | | | | 3 | 5 | 1 | 7 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 7 | 5 | 6 | 1 | 8 | 9 | 4 |
| 6 | 9 | 8 | 7 | 4 | 3 | 1 | 2 | 5 |
| 4 | 1 | 5 | 2 | 9 | 8 | 3 | 7 | 6 |
| 5 | 8 | 6 | 1 | 7 | 4 | 9 | 3 | 2 |
| 9 | 3 | 1 | 6 | 2 | 5 | 7 | 4 | 8 |
| 2 | 7 | 4 | 3 | 8 | 9 | 6 | 5 | 1 |
| 1 | 6 | 3 | 9 | 5 | 2 | 4 | 8 | 7 |
| 8 | 5 | 9 | 4 | 1 | 7 | 2 | 6 | 3 |
| 7 | 4 | 2 | 8 | 3 | 6 | 5 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வீதியைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.7

பலாலி வீதிக்கும் பருத்தித்துறை வீதிக்கும் இடைப்பட்ட நீர்வேலி கரந்தன் வீதி நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதியூடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், விவசாய உற்பத்திப் பொருள்களை சந்தைக்குக் கொண்டு செல்லும் விவசாயிகள், உத்தியோகத்தர்கள் நாளாந்தம் எனப்பலரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை குறித்த வீதியுடன் இணைந்த சுன்னாகம் சந்தியில் இருந்து மின் நிலையத்துக்குச் செல்லும் வீதியும் மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. இதனைப் பயன்படுத்தும் பொதுமக்களின் போக்குவரத்தை இலகுபடுத்த விரைவில் வீதிகளைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் தெரிவிக்கின்றனர். (3-135)

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

பிரபல தனியார் தொலைத் தொடர்பாடல் கம்பனிக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையாற்றுவதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. தங்கள் சுயவிவரக் கோவையுடன் நாளை (08.01.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

கீர்த்திகா கொம்பிளக்ஸ்
இல.07, கனகபுரம் வீதி, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.
(28016)(6.711) தொ.பேசி- 0785000 580, 0776703284

**வைத்தியர்களுக்கும் /பாவனையாளர்களுக்கும் கவனத்துக்கு**

★ நீங்கள் இளநரை, முடி உதிர்வு, வாதம், கை, கால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்பு வலி என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
✱ இந்த நோய்களுக்குப் பல வழி முறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
✱ இந்த நோய்களுக்கான தீர்வாக ஆயுள் வேதமுறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் எம்மிடம் உண்டு.
★ ஆயுள் வேத வைத்தியர்களின் கவனத்துக்கு!
✱ எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்டு இருமல் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஸ்ட ஆசவங்கள் குவாதங்கள், சூரணங்கள், சிரப்வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுகொள்ளலாம்.

நீங்கள் நாட வேண்டிய இடம்
"சிவா நறுமணப் பூங்கா"
இல- 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி- 021 222 2567

**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



அமரர்
சீனிக்குட்டி அருளம்பலம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
தோற்றம் 26.03.1936
மறைவு 09.12.2012

அன்னாரின் இறுதிச் சடங்கு நிகழ்வில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (08.01.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.
இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கலாநிதி வீதி.
ஏழாலை வடக்கு.
ஏழாலை.
(28052)(6.7.45)

தகவல்:
லீலாவதி (மனைவி),
மகள், மருமகன்.

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு-**
advt@uthayan.com
0215671111

**தேவை**
**Quick Book Operator**

போதிய அனுபவம் உள்ளவர்கள் மட்டும் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு :0214925102
(28057)(6.711)

**பணிநிலை வெற்றிடம்**

* நிர்வாக உத்தியோகத்தர் (Administration Officer)
(கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது)
* வரவேற்பாளர் (Receptionist)
(சரளமாக உரையாடக் கூடியவர்கள்)
* கணினி வடிவமைப்பாளர்
(Adobe Photoshop / Corel DRAW )
* கணினி ரைப்பிங் (பெண்கள்)

நேர்முகத்தேர்வு 09.01.2013 (புதன்கிழமை)
நேரம் :மு.ப 09.00 மணி - பி.ப. 02.00 மணிவரை

(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிரக்கோவையுடன் சமுகமளிக்கவும்)

ANDRA Digital Image
379/167, Kasthuriyar Road, Jaffna.
021222 8929 , 0776622981

**காணி விற்பனைக்கு**

உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 1133375,
(27566) (6.7.4) 0041 772910427.

**வேலையாள்கள் தேவை**

இயக்கச்சியில் உள்ள பிரபல தோட்டம் ஒன்றிற்கு சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை.தகுந்த சம்பளம் மற்றும் தங்குமிட வசதியும் உண்டு.
தொடர்புகளுக்கு 077 3361750

**விற்பனைக்கு**

NP PT-9xxx தொடரிலக்க வெள்ளை நிற நியூமொடல் மகேந்திரா A/C power streeing லீசிங்குடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 071 6182182, 0777730303

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் றோட், உடுவில் ஆலடி என்னும் இடத்தில் உள்ள 12½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 1083024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களனி பிரதேசசபை உறுப்பினர் கொலை:
# விசாரணைகள் நடத்த விசேட பொலிஸ் குழு

கொழும்பு,ஜன.7

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து, மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அந்த பொலிஸ் குழு இரண்டுபேரிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து களனிப்பகுதில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவலவின் நெஞ்சுப்பகுதியிலேயே துப்பாக்கி சன்னங்கள் பாய்ந்துள்ளன என்று கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் அனில் ஜெயசிங்க கூறினார்.

**இந்தச் சம்பவத்தையடுத்து களனிப் பகுதில் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.**

களனி - வராகொட பகுதியில் தனது வாகனத்திலிருந்து இறங்கி வீட்டுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு செல்ல முற்பட்ட வேளையில், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவர்மீது சரமாரியாக துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை யில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# ஆளுங்கட்சி எம்.பிக்கள் வெளிநாடு செல்லத் தடை
## திவிநெகும திட்டத்தை நிறைவேற்றுவதற்காக

கொழும்பு, ஜன.7

திவிநெகும (வாழ்வின் எழுச்சி) சட்டமூலத்தை நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொண்டு, அதனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இந்த நிலையில் ஆளுந்தரப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரின் வெளிநாட்டுப் பயணங்கள் இவ்வாரம் தடை செய்யப்பட்டுள்ளது என அரச தரப்பு வட்டாரங்களினூடாக அறிய முடிகிறது.

இதற்கமைவாக, ஆளுந்தரப்பு அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த வாரத்தில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக்கூடாது என அவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்குமாறு ஆளுந்தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளார் என்று அறியமுடிகிறது.

அத்துடன், தற்போது வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ள ஆளுந்தரப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் உடனடியாக நாட்டுக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி, அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடம் கோரியுள்ளார்.

திவிநெகும (வாழ்வின் எழுச்சி) சட்டமூலம் நாளை 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன்போது சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எடுத்துரைத்துள்ளார்.

**திவிநெகும (வாழ்வின் எழுச்சி) சட்டமூலம் நாளை 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள் ளப்படவுள்ளது**

இதனடிப்படையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு மேற்படி பணிப்புரையை வழங்கியுள்ளாரெனத் தெரியவருகிறது.

அதேவேளை, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையையும் இவ்வாரம் 10ஆம் திகதி, 11ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஆளுந்தரப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இவ்வாரம் முழுவதும் நாடாளுமன்றத்திற்கு வருகை தர வேண்டும் என அரசு எதிர்பார்க்கின்றது.

## கஜ முத்துக்களை வைத்திருந்தோர் சிக்கினர்

**வாகன சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், ஓட்டோ ஒன்றை மறித்த போது அதில் நால்வர் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்டுள்ளனர்.**

கொழும்பு,ஜன.7

பெறுமதிமிக்க இரண்டு யானைத்தந்த கஜ முத்துக்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்குபேர் வத்துகாமம் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்களில் படையினர் ஒருவரும் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வத்துகாமம் நகரில் வாகன சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார்,ஓட்டோ ஒன்றை மறித்த போது அதில் நால்வர் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போதே கஜ முத்துக்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதனையடுத்தே பொலிஸார் நான்கு பேரையும் கைதுசெய்துள்ளனர்.

அவர்கள் பயணித்த ஓட்டோ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



பிரதமர் டி. எம். ஜயரத்ன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அருகில் பிரதமரின் பாரியார் மற்றும் புதல்வரும் காணப்படுகின்றனர்.

# நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலையும் அபாயம்
## டியூ.குணசேகர சொல்கிறார்



கொழும்பு,ஜன.7

நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலையக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறுசிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்தார்.

நீதிமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமை பல்வேறு சட்ட சிக்கல்களை ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயக இலங்கையில் இவ்வாறான ஒரு நிலைமை இதற்கு முன்னர் எப்போதும் ஏற்பட்டதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை மற்றும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் சபாநாயகரின் அறிக்கையைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு வெளியிடப்ப டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வீரவன்சவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்
## செய்வேன் என்கிறார் மைத்திரி குணரத்ன எம்.பி.

காலி,ஜன.7

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

இவ்வாறு தென் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் மைத்திரி குணரத்ன தெரிவித்தார்.

காலியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தனியார் ஊடகம் ஒன்றின் ஊடாக நீதிமன்றத்தை பகிரங்கமாக விமர்சித்து நீதிமன்றத்தை அவமதித்தமைக்கு எதிராகவே அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன்.

விமல் வீரவன்சவின் உரையாடல் நீதிமன்றம் தொடர்பில் மக்களை நம்பிக்கை இழக்கச் செய்யும்.

நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற தீர்ப்பின் மீது மக்கள் நம்பிக்கை கொள்ள முடியாத நிலைமை ஏற்படும்.

நாடும் பாதுகாப்பற்ற நிலைக்குச் சென்று விடும்- என்றார். (ச)

# அரசின் நடவடிக்கைகள் அபகீர்த்தியை ஏற்படுத்தும்
## லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



கொழும்பு,ஜன.7

அரசின் தற்போதைய நடவடிக்கைகள் நாட்டுக்கு மேலும் அப கீர்த்தியை ஏற்படுத்தும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை அரசு எதேச்சதிகாரப் போக்கில் முன்னெடுத்துச் செல்கின்றது.

உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசின் தூரநோக்கற்ற செயற்பாடுகளினால் சர்வதேச அரங்கில் இலங்கை மேலும் தனிமைப்படுத்தப்படக் கூடும்.

குற்றப் பிரேரணை தொடர்பிலான நடவடிக்கைகள் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும். தேவைஏற்பட்டால் புதிய சட்டங்கள் வகுக் கப்பட வேண்டும்.- என்றார். (ச)

# ஜப்பானின் போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில்

கொழும்பு, ஜன.7

ஜப்பான் கடற்படையினருக்கு சொந்தமான இரண்டு போர்க் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த கப்பல்கள் நல்லெண்ண அடிப்படையில் இலங்கைக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வந்தடைந்துள்ளன என்று கடற்படையினர் குறிப்பிட்டனர்.

சுசுனாமி மற்றும் கிரிசேமி ஆகிய இரண்டு கப்பல்களுமே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. இந்த இரண்டு கப்பல்களும் ஜப்பான் கடற்படையினரிடம் உள்ள அதி நவீன கப்பல்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

151 மீற்றர் நீளமான இரண்டு போர்க் கப்பல்களில் சுசுனாமி என்ற கப்பல் 4,650 தொன் நிறைகொண்டது. கிரிசேமி 4,550 தொன் நிறைகொண்டது என்று கூறப்படுகிறது. (ச)

# மத்திய கிழக்குக்கு பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை குறைப்பு
## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

மத்திய கிழக்குக்கு பணிகளுக்காக செல்லும் பெண்களின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கைவெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.மத்திய கிழக்கில் பணியாற்றும்போது உயிரிழக்கும் இலங்கையர்களின் அவயவங்கள் அகற்றப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதுதொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. அதனையடுத்தே மத்திய கிழக்குக்கு பணிகளுக்காகச் செல்லும் பெண்களின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக வட்டாரங்கள் கூறின.

இதேவேளை சவூதி அரேபியாவில் பணிபுரிந்த இலங்கைப் பெண் அங்கு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதனால் அவர் நாடு திரும்பி காலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட விவசாயிகளின் முயற்சி போற்றத்தக்கது
## கமநலசேவைகள் அமைச்சர் புகழாரம்

மிகச்சிரமத்தின் மத்தியிலும் யாழ். மாவட்ட விவசாயிகள் சுயமுயற்சியின் கீழ் நீரைப் பெற்றுச் சிறந்த விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு புகழாரம் சூட்டியுள்ளார் கமநல சேவைகள் வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன.

அனுராதபுரம் மாவட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் சகிதம் நேற்று சாவகச்சேரிக்கு வந்த அமைச்சர் அங்குள்ள விவசாயிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது மீசாலை புத்தூர் சந்தியிலுள்ள கமலநல சேவைகள் நிலையத்தில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அனுராதபுரம் மாவட்ட விவசாயிகள் ஆற்று நீரைப் பயன்படுத்தியே விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இங்கு அதுபோன்ற வசதிகள் அற்ற நிலையிலேயே சுயமுயற்சியின் கீழ் கிணறுகளை அமைத்தே யாழ். மாவட்ட விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 30 வருடகால போரின் காரணமாக இந்தப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தப் பகுதிக்கு உரிய அபிவிருத்திகளை மேற்கொள்ள எண்ணியுள்ளோம். இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டு வருகிறார் - என்றார். புத்தூர் சந்தியிலுள்ள கமநல சேவைகள் நிலையத்துக்குச் சென்ற அமைச்சர் விவசாய சம்மேளனங்களூடாக விவசாயிகளுக்குச் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் அவற்றை கட்டாக்காலி மாடுகளிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டும் முட்கம்பிச் சுருள்களைக் கையளித்தார். இந்த நிகழ்வில் கமநலப் பிரதி ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன், கமநலத் திணைக்கள ஆணையாளர் எம்.எ.எஸ்.வீரசிங்கம், கமநலத் திணைக்கள உயரதிகாரிகள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (16-131)

## கிணறுகளை புனரமைப்பதற்கு நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பொதுக் கிணறுகளை புனரமைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பாக அரியாலையில் உள்ள பொதுக் கிணறுகளைப் புனரமைத்து மக்கள் பாவனைக்கு விட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

இந்தக் கிணறுகள் தற்போது நன்நீராகக் காணப்படுவதால் அக்கிணறுகளை விரைவாகப் புனரமைத்து அதன் ஊடாக மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது அரியாலை கிழக்கு பிரதேச மக்களுக்கு சபையின் பவுசர் வாகனம் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## குறிகாட்டுவானுக்கு சூரிய மின்கலங்கள்

குறிகாட்டுவான் பிரதேசத்தில் சூரிய மின்கலங்களைப் பொருத்த வேலணைப் பிரதேச சபைத் தலைவர் எஸ். சிவராசா நடவடிக்கை எடுத்துள்ளார். புங்குடுதீவுப் பகுதியில் மின் விநியோகம்வழங்கப்பட்டபோதும்குறிகாட்டுவான் துறைமுகப் பகுதிகளுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் தற்போது பிரதேசசபைகளுக்கு வழங்கப்பட்ட நூறு கோடி ரூபா நிதி உதவியின்கீழ்இடம் பெறவுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாக குறிகாட்டுவான் பகுதிக்கு சூரிய மின்கலங்கள் பொருத்தப்படவுள்ளன. வேலணை பிரதேச சபைத் தலைவர் இதற்கான ஏற்பாடுகளைமுன்னெடுத்துள்ளார்.(3-7)


### வகுப்புக்கள்

தரம்: 3,4,5 மாணவர்களுக்கான
புலமைப்பரிசில் வகுப்புக்கள்.
பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்
பெறக்கூடியவகையில் வீட்டுக்கு வந்து
கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 465 2832, 077 358 9892


### ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 18.05.1947

விண்ணில் 13.01.2007

**அமரர் அப்பாத்துரை சண்முகநாதன்**
திதி: தசமி


எம் உயர்வுக்காக உதிரம் கொடுத்து வளர்த்தீர்
நாம் உயர்ந்த வேளை நீங்களோ மறைந்தீர்கள்
ஆண்டுகள் பல சென்றாலும் உங்களை நாம் மறவோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர். (27977)(45.6.7)

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 27 * 03 * 1977 — இறப்பு 19 * 01 * 2009



**அமரர் சற்குணநாதன் குலதாசன்**
(முன்னாள் உப அஞ்சலதிபர், விடத்தற்பளை)

ஆண்டுகள் நான்கு ஆறாகப் பாய்ந்தது - ஆனால் எம்
இதயங்களில் இதமாக வாழும் - உன் பிரிவை
ஈடுசெய்ய இணையாக எதுவும் இல்லை - எங்களிடம்
எத்தனை ஆண்டுகள் எம்மைக் கடந்தாலும் - நாம்
ஏக்கத்துடனே வாழ்கின்றோம் - என்றும்
உன் பிரிவைத் தாங்காது உருகித்துடிக்கும் - எங்களது
இதயம் ஊனம் ஆகின்றது
நீ ஆண்டவனாய் இருந்து - எங்களை ஆசீர்வதி.

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
விடத்தற்பளை, மிருசுவில். (2787)(2.7.6)

### மரண அறிவித்தல்

**யக்கரசு தொம்மைக்குட்டி**
(கலைஞானரத்தினம், கலைஞானச்சுடர்- முன்னாள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி - ஆசிரியர்)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட யக்கரசு தொம்மைக்குட்டி 03.01.2013 அன்று காலமானார்.

அன்னார் றெஜினா ஜெயராணி அவர்களின் அன்புக்கணவரும், ஜலின், நிக்கொலின், அன்ரன், கெலன், பிராங்கிளின் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் நாளை (08.01.2013) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி றெஜினா இருதயநாதன் (சகோதரி)
நவாலி தெற்கு,
மானிப்பாய். (28023) (45.6.7)

### துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்
க.றதீஸ்வரன் அவர்களின்
தந்தையார்
**சுந்தரம் கந்தையா**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு,
அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆசிரியர் நலன்புரி கழகம்
மு/ கற்சிலை மடு அ.த.க. பாடசாலை,
ஒட்டுசுட்டான். (27941)(6.7.11)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27.04.1931

மறைவு 09.12.2012



**அமரர் சிற்றம்பலம் தங்கம்மா**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் பாசத்தின் இருப்பிடமாய்
நேசமுடன் எம்மை ஆளாக்கி கண்ணை இமைகாப்பது போல் காத்திட்ட அன்னையே
இன்று எம்மை யெல்லாம் தவிக்க விட்டு விண்ணுலகு சென்றதுதான் ஏனோ
எங்கள் உயிர் உள்ளவரை அன்னையே உங்கள் நினைவுகள் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (08.01.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தவசிகுளம், கொடிகாமம். (27986)(6.7.11)

### 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
("அம்பிகா டிஸ்பென்சறி")



தோற்றம்:- 22.08.1937
சிவபதம்:- 06.01.1994

எங்கள் குடும்பத்தலைவரே
நீங்கள் காட்டிய வழியில் நாங்கள் என்றும் வாழ்ந்து
உங்கள் எண்ணங்களை நிறைவு செய்வோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய நுணாவில் சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.*

*அம்பிகா டிஸ்பென்சறி,*
*சாவகச்சேரி.*

குடும்பத்தினர்.
சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (28115)(2.6.7)




## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

தைப்பொங்கலை முன்னிட்டு — 15 வருட கால அசைக்கமுடியாத நம்பிக்கையுடன்

11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 720 /= Germany 740 /= France 815 /= Denmark 775 /=

மருந்துப் பொருள்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பி வைக்க முடியும். Netherland 825 /=

மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
International Courier & Cargo Service


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

பிரதம நீதியரசர் ஷிராணிக்கு எதிரான

# குற்றப்பிரேரணை சர்வதேசத்துக்கு பிழையான தகவலையே வழங்கும்

## மீண்டும் எச்சரிக்கிறது ஐ.நா.

கொழும்பு,ஜன.7

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை, மனித உரிமை கடப்பாடுகள் தொடர்பில் சர்வதேசத்துக்குப் பிழையான செய்தி ஒன்றைக் கொண்டு செல்லும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான விசேட நிபுணர் கெப்ரில்லா நோல் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது இலங்கையின் உள் விவகாரம் என்பதால் எமது கருத்தை இலங்கை அரசுடன் பகிர்ந்து கொள்ளவில்லை என்று இலங்கையில் உள்ள ஆங்கில செய்தித்தாள் ஒன்றுக்கு அவர் கூறினார்.

எனினும் இது சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு முரணான செயலாகும். எனவே இலங்கை அரசு, நீதித்துறையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிழை செய்ததாகக் கருதப்படும் நீதிபதி ஒருவரை விசாரணை செய் யும் போது அடிப்படை நடை முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே கெப்ரில்லா தனது கருத்தை தெரிவித்திருந்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை அரசு, அதற்கான பதிலையும் அனுப்பி வைத்திருந்தது. அந்த நிலையில் அவர் மீண்டும் எச்சரிக்கை விடுத் துள்ளார்.

இதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை நடை முறைகள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## சாவகச்சேரி பிரதேச சபையில் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஜன.7

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களின் முன்மொழிவுகளின் பேரில் தலா நான்கு லட்சம் ரூபாவுக்குட்பட்ட வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேச சபையின் துணைத் தலைவர் க.யோகராசா முன்மொழிந்த தாவளை- இயற்றாலை இந்து மயானவீதி, வரணி இந்து மயானப் புனரமைப்பு, மாசேரி கப்பத்தூர் மயான வீதி ஆகியவையும் பிரதேச சபை உறுப்பினர் கி.தெய்வேந்திரம் பிள்ளையினால் முன் மொழியப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு செம்பாட்டு மயான புனரமைப்பு, எழுது மட்டுவாழ் தெற்கு ஒட்டுவெளி ஆகிய இடங்களில் உள்ள கிணறுகள் புனரமைப்பு ஆகியவையும் உறுப்பினர் ச.நாகலிங்கத்தினால் முன்மொழியப்பட்ட மறவன் புலோ இந்து மயானப் புனரமைப்பு சரசாலை தெற்கு காளி கோயில் வீதி புனரமைப்பு வேலை ஆகியவையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்த வருடம் பணிகள் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-9)

## காரைநகரில் இலவச கலை வகுப்புக்கள்

காரைநகர், ஜன.7

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினால் நடத்தப்படும் இலவச கலை வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அறநெறி, பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், சித்திரம், நாடகமும் அரங்கியலும், யோகாசனமும் தியானமும் மற்றும் கோலம் போடுதல், மாலை கட்டுதல் போன்ற கலை வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

பயன்பெற விரும்பும் மாணவர்கள் தங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மன்றத் தலைவர் ந.சோதிநாதன் அறிவித்துள்ளார். (3-250)

## பிரதேச சபையின் உறுப்பினருக்கு அஞ்சலி

பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினராக இருந்து நோயால் பீடிக்கப்பட்டு அண்மையில் காலமான பொ. திருச்செல்வத்துக்கு சபையின் மாதாந்தக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபைத் தலைவர் பூ. சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினார்கள். அமரர் பொ. திருச்செல்வம் ஆளும்கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவராவார். (3-8)

## மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.7

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மின் சாரம் தடைப்பட்டிருக் கும்.

இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 6 மணிவரை மாவடி, மூளாய் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும்-

நாளை செவ்வாய்க்கிழமை குஞ்சர் கடையின் ஒரு பகுதி நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டை மானாறு உடுப்பிட்டி, உரும்பிராய், ஊரெழு பிரதேசத்திலும்,

புதன்கிழமை துலாக் கட்டு, வதிரிப் பிரதேசம், சக்கலாவத்தைப் பிரதேசம், உடுப்பிட்டி வீதியில் பிரதேச சபை தொடக்கம் நவிண்டில் வரையான பிரதேசங்களிலும்-

வியாழக்கிழமை உரும்பிராய், ஊரெழு பிரதேசங்களிலும் வெள்ளிக்கிழமை மாவடி, மூளாய் பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (3)

## சுயதொழில் முயற்சிக்கு சுழற்சி முறைக் கடன்

வடமராட்சி, ஜன.7

பருத்தித்துறை சமுர்த்தி அதிகார சபைப் பிரிவினால் சுய தொழில் முயற்சிக்கென சுழற்சி முறைக் கடன் மூலம் மூன்று பேருக்கு 40 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட் டுள்ளது.

இந்தக் கடனுக்கான பயனாளிகள் பருத்தித்துறை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (3-8)

## பட்டம் விட்ட சிறுவன் காயம்

பட்டம் விட்டு விளையாடிக்கொண்டிருந்தபோது, பட்டம் மரத்தில் சிக்கியதால் மரத்தில் ஏறிய சிறுவன் தவறி விழுந்து காயமடைந்துள்ளான்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் பங்களாலேன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த மனோகரன் பகீரதன் (வயது-16 )என்ற சிறுவனே காலில் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது பட்டம் விடும் காலம் என்பதால் இவ்வாறான காயங்களுடன்சிறுவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் செல்வதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (3-36)

## கடை உடைத்து பொருள்கள் திருட்டு

கொழும்புத்துறை, ஜன.7

சுண்டுக்குளி பாண்டியன் தாழ்வுப் பகுதியில் ஒரே இரவில் இரண்டு பலசரக்குக் கடைகள் உடைக்கப்பட்டு பொருள் கள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது. வழமைபோன்று கடைகளை பூட்டிவிட்டுச் சென்றதாகவும் காலையில் வந்து பார்க்கும் போது கடைகளின் முன்பக்கக் கதவுகள் உடைக்கப்பட்டிருந்ததாகவும் பலசரக்குக் கடை உரிமை யாளர்கள் தெரிவித்தனர். இரண்டு கடைகளி லும் பால்மா வகைகள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், நூடில்ஸ் பைக்கற்றுகள் போன்ற பொருள் களே திருடப்பட்டுள்ளன.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்கு முறையிடப்பட்டதையடுத்து அந்தப் பகுதிக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டனர். (3-135)

## கணினிப் பயிற்சி நிலையம் உரும்பிராயில் திறப்பு

உரும்பிராய் சென்.மிக்கேல் ஆலயப் பகுதியில் மாணவர்களின் கணினி அறிவை வளர்க்கும் நோக்கில் வைகறை கணினிப் பயிற்சி நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் நாட்டில் இயங்கும் அமலமரித் தியாகிகள் சபையின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கணினிப் பயிற்சி நிலையத்தை அமலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளார் திறந்து வைத்தார். உரும்பிராய் சென். மிக்கேல் ஆலயம் பங்கு நிர்வாகத்துக்கு உட்பட்ட கோண்டாவில் புனித செபஸ்தியார் ஆலயம், நீர்வேலி பரலோக மாதா ஆலயம், அச்செழு யூலனூர் புனித ஹென்றியரசர் ஆலயம், குப்பிளான் புனித இராயப்பர் ஆலயம் என்பவற் றைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி நிலையத் தில் கணினிக் கல்வி புகட்டவுள்ளதாக உரும்பிராய் பங்குத் தந்தை அருட்திரு யூட் நிக்சன் அடிகள் தெரிவித்தார். (3-135)

50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



அச்சுவேலி, நெல்லியோடை அம்மன் வீதியைச் சேர்ந்த
இராஜரட்ணம் சுபோதினி
இன்று (07.01.2013) திங்கட்கிழமை பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.
இவர்,
அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் முதலிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம்மை அரவணைத்த
தெய்வத்தாயை முத்துமாரியம்மன்
அருள் பெற்று சிறப்புடன் வாழ
மனதார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அன்புக் கணவர், பாசப்பிணைப்பின் பிள்ளைகள். T.P.0214913328

வீட்டுப் பணிப்பெண் தேவை
வீட்டுப் பணிப்பெண் உடனடியாகத் தேவை.
தொடர்புக்கு : 0778650458 (C/5298)(6.711)

வாழும் கலைப் பயிற்சி



மூச்சுப் பயிற்சி, பிராணாயாம,
சுதர்ஷன கிரியா, தியானம், யோகா
07.01.2013 அறிமுகஉரை
பிற்பகல் 5 மணி
இடம்:- மகேஸ்வரன் மணி மண்டபம்
நல்லூர்
தொடர்பு:- 0770474757

வெற்றித்தேர்வு வெளியீட்டகம்
2013ஆம் ஆண்டிற்கான நாடளாவிய வெளியீடுகள் வெளிவருகின்றன.
கடந்த பல வருடங்களாக புலமைப்பரிசில் துறையில் தமிழ்மொழிமூல மாணவர்களின் தேசியமட்ட சாதனைகளுக்கும் மாவட்ட மட்ட சாதனைகளுக்கும் வழிகாட்டி, வருடாந்தம் நாடளாவிய ரீதியில் 5000இற்கும் அதிகமான மாணவர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வுகளை நடாத்தி, கடந்த ஆண்டில் மகத்தான சாதனை படைத்த வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின் 2013ஆம் ஆண்டிற்கான வெளியீடுகள் வெளிவருகின்றன.
இவ்வாண்டிற்கான எமது வெளியீடுகள்
- தரம் 5 - 20 வெற்றித்தேர்வு வினாப்பத்திரங்கள்.
- தரம் 4 - 15 வெற்றித்தேர்வு வினாப்பத்திரங்கள்.
- தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு. வினாவிடைத்தொகுப்பு புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்.
- தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள் வழிகாட்டி நூல்.
- தரம் 1 முதல் தரம் 3 வரை பாடரீதியான வினாப் பத்திரங்களைக் கொண்ட 10 வெளியீடுகள்.
தேவையான பாடசாலைகள் உடன் தொடர்புகொள்ளவும்.
வினாப்பத்திரங்கள் நேரடியாக பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.
பாடசாலைகள் விசேட விலைக்கழிவுகளுடன் வெற்றித்தேர்வு வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
பாடசாலைமூலம் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் இவ்வாண்டு தபால் மூலமாக வெற்றித்தேர்வினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: 021 222 9016, 0775388471, 0773126807




திருமுருகன் கொம் நெற்



- DHL உடன் இணைந்து வடமாகாணத்தில் முதல் முறையாக ஒரு தசாப்தகாலமாக சேவையினை வழங்கி வருகின்றனர்.
- DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள் 3-5 நாள்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- உலக நாடுகளுக்கான கடிதங்கள் அன்பளிப்பு பொருள்கள் உடுபுடைவைகள், CD, Vedio கள், கடல் உணவு மற்றும் மருந்துப்பொருள்கள் என்பன குறைந்த கட்டணத்தில் ஒப்படைக்கப்படும்.
- கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கூடுதலான கட்டணத்தினை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- நீங்கள் அனுப்பும் 11 kg க்கு கூடுதலான பொதிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.
- DHL மூலம் அனுப்பும் பொதிகளுக்கு 01.01.2013-31.04.2013 வரை அனுப்பும் பொதிகளுக்கு முதல் 25 அதிர்ஸ்டசாலிகளுக்கு விசேட கட்டண சலுகைகள் உண்டு.
- மேலே குறிப்பிடப்பட்ட சலுகை திருமுருகன் கொம்நெற் இல் மட்டுமே.

DHL



தொடர்புகளுக்கு: 021 222 7835

- வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்தை மிக விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

WESTERN UNION MONEY TRANSFER

எமது நிறுவனங்களாக:
இல.208A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(எமது யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனம் தற்போது பழைய கடைக்கு முன்பாக ஆல்சிலோனிற்கு அருகில் இயங்குகிறது)
கிளை
2B நெல்சன் பிளேஸ், கொழும்பு-06. | இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. | இல.18, பிரதான வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத் திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் (French) பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(ருக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)


# வட்டுவனை வீதியை திருத்துவதற்கு நிதி

புலோலி தென்மேற்கு வட்டுவனை வீதியைத் திருத்தி புனரமைக்க பருத்தித்துறை நகர சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் வைப்பு நிதியில் இருந்து மீளப்பெறப்பட்ட 50 இலட்சம் ரூபாவில் இருந்து இந்த வீதித் திருத்தத்துக்கான நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக பிரதேச சபை தெரிவித்துள்ளது.

சுமார் 250 மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி த் திருத்தப்பணியை கூவில் தீபஜோதி சனசமூக நிலையம் பொறுப்பேற்று நிறைவேற்றும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111



## வாகன இருக்கைகளுக்கான சுத்திகரிப்பு



உங்கள் வாகனங்களின் இருக்கைகளை (Original Seats) ஒரு மணித்தியாலத்தில் வாகனத்தைவிட்டு அகற்றாது உயர் தொழில்நுட்பம் மூலம் Dry clean செய்து தரப்படும்.

* கார் ஒன்றிற்கு ரூ. 3500/= உம்
* வான் ஒன்றிற்கு ரூ. 7000/= உம் அறவிடப்படும்.

அத்துடன் வாகனத்தின் அடிப்பாகத்தை துருப்பிடிக்காது பாதுகாக்க Under Coating எங்களால் செய்து தரப்படும்.



**SNT Service Station**
யாழ் வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்)
(ß/5288)(5.6.7)



## விற்பனைக்கு

4 மாதம் நிரம்பிய நல்ல இன நாய்ப்பு, பிறவுண் பொமறேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 6062 747
(27996) (45.6.7)



## இணையத்தில் சுயமாக வேலை செய்வதற்கு

Part Time | Full Time

மாதம் ஒரு லட்சம் (RS 100,000/-) வரை
Data Entry, Web Designing, Face Book, Copy Typing, Photoshop, C++, Java, Accounting......
உட்பட 300 க்கும் மேற்பட்ட வேலைகள்
ON LINE JOBS
International Master Card வேலை விளக்கம்
ACS
Tel : 077 3967334/077 0071835
கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100m தொலைவில்
(27987)(5.6.7)


# மரண அறிவித்தல்கள்

## வைத்தி கணபதிப்பிள்ளை (கணபதி மேசன்)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி கணபதிப்பிள்ளை 05.01.2013 சனிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க. அமிர்தமணி
(குண்டு மணி)
மனைவி மற்றும் பிள்ளைகள்.

இல. 16, மடத்தடி,
யாழ்ப்பாணம்.
(27990)(5-6-7)

## சிவசுந்தரம் கணேசமூர்த்தி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான முன்னாள் கொக்கக்கோலா ஏஜென்சி (கிளிநொச்சி) உரிமையாளரும், பிரபல பணப்பரிமாற்று சேவையாளரும் (கனடா), சிறந்த சமூக சேவையாளருமான சிவசுந்தரம் கணேசமூர்த்தி 02.01.2013 அன்று காலமானார்.

அன்னார் கலாவின் அன்புக்கணவரும், கோபி, சஞ்செய் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரேஸ்வரன் (முரசுமோட்டை), நந்தகுமார் (கனடா), மகேந்திரன் (முரசுமோட்டை), சிவகுமார் (கனடா), முரளி (கனடா), காலஞ்சென்ற சாந்தகுமாரி மற்றும் உசாராணி (ஆசிரியை), ராணி (மலேசியா), சியாமளா (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட் கிழமை கனடாவில் நடைபெற்று, பூதவுடல் கனடா பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. மகேந்திரன்
(சகோதரன்).

முரசுமோட்டை,
02 ஆம் கட்டை,
(27601) (45.6.7)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபனத்தின்
ஊழியர்
**சிவஞானம் மகேந்திரநாத்**

அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்.
ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் -யாழ்ப்பாணம்


## English Classes

தரம் 03 முதல் O/L வரையான வகுப்புக்களுக்கு ஆங்கில வகுப்புக்கள் தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும் வளர்ந்தோருக்கான Spoken English வகுப்புக்களுக்கும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 0750739635.
(28007) (6.7.4)



## காணியும் வீடும் விற்பனைக்குண்டு

அச்சுவேலி புனித திரேசா பாடசாலைக்கு அருகில் நல்ல நிலையில் உள்ள 6 ¾ பரப்பு காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 66 91216, 021 321 6675
(27989)(5.6.7)



# பட்டப்படிப்பிற்கான

## வெற்றிகரமான ஆரம்பம்

HND in Computing & System Development
in Business Management
edexcel INTERNATIONAL



Free
ஜனவரி 15 ம் திகதிக்கு முன் பதிவு செய்யும் அனைத்து மாணவர்களும் இலவசமாக i3 Dell Laptop ஐ பெறலாம்.
★ Condition apply.

# After A/Level's

Only IT Diploma with an International Recognition!



Join IT Diploma @ ESOFT
The Leader in Professional ICT Education

DiTEC INTERNATIONAL Diploma in Information Technology
Duration : 4 months
15% DISCOUNT
பெறுபேறுகளுக்கு முன்னர் இரு டிப்ளோமாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்
Free T - Shirt
Payable in Installments

**Other Diplomas**

| | | |
|---|---|---|
| DiWE Diploma in Web Engineering காலம் 6 மாதங்கள் | DiBM Diploma in Business Management காலம் 4 மாதங்கள் | DiE Diploma in English காலம் 4 மாதங்கள் |
| DiSE Diploma in Software Engineering காலம் 6 மாதங்கள் | DiHN Diploma in Hardware & Networking காலம் 4 மாதங்கள் | DiGD Diploma in Graphic Designing காலம் 4 மாதங்கள் |

புதிய பிரிவுகள்

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | [illegible] |
|---|---|---|---|
| 09 Jan 2013 at 9.00 am | 09 Jan 2013 at 9.00 am | 09 Jan 2013 at 9.00 am | 09 Jan 2013 at 9.00 am |
| 077 309 9308 | 077 390 5611 | 077 154 7677 | 021 320 1303 |

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT Metro Campus
No 137 , K K S Road, Jaffna. Tel :021 222 4142


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார மமதை ....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

குற்றவியல் பிரேரணையொன்றின் மூலம் நீதியரசரொருவரைப் பதவியிலிருந்து அகற்றுவது அத்தனை இலேசானதொன்றல்ல என்பதை உறுதிப்படுத்துவதே அவரது இன்றைய போராட்டத்தின் குறிக்கோள். தமக்குப் பின்னர் பிரதம நீதியரசராகப் பதவி வகிக்கவிருப்பவர் குற்றவியல் பிரேரணை எதுவுக்கும் அஞ்சாது, நெஞ்சை நிமிர்த்தித் தீர்ப்பு வழங்கத்தக்க நீதித்துறையை உருவாக்குவதே அவரது தற்போதைய போராட்டத்தின் நோக்கம். தமது பிரதம நீதியரசர் பதவியிலிருந்து அவர் நாளைக்கு நீக்கப்பட நேர்ந்தாலும் கூட, அவரது திறமைக்கும், அனுபவத்துக்கும் மிகப்பெரிய ஊதியத்துடன் உலகின் முதல்தரப் பல்கலைக்கழகமொன்றில் பேராசிரியராகப் பதவியொன்றில் அமரவும் இயலும்.

ஆனால் மஹிந்தவின் நிலை அத்தகையதல்ல. பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து விலக்கிய நாள் முதல், எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐ.நா.சபையின் மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் ஆரம்பமாகும் நாள்வரை மஹிந்தவுக்கு நித்திரையற்ற இரவுகளாகவே அமையும்.

தற்போது எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத் தொடரில், கடந்த வருடக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கை மனித உரிமைகளை மேம்படுத்த எடுத்த நடவடிக்கைகள் குறித்த ஆய்வின்போது, 2002 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசரைப் பதவி விலக்கிய வேளை இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதியை மீறியமை குறித்து இலங்கை அரசு பதிலளிக்க வேண்டி ஏற்படும்.

உண்மையில் இலங்கைக்கு எதிரான அந்த நாடுகள், மஹிந்த மூலம் பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்விக்க வைத்து, அதனைத் தூதுவாய்ப்பாக ஆக்கி எதிர்வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை முன்னால் இலங்கையைக் குற்றவாளியாக நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுப்பதையே நோக்கமாகக் கொண்டு காய் நகர்த்தி வருகின்றன.

நாட்டை நேசிப்போர் தரப்பு, நாட்டுப்பற்றாளர் தரப்பு என வேடமிட்டுச் செயற்படும் சதிகாரர்களே இந்த விடயத்தில் மஹிந்தவுக்கு தூபம் போட்டு அவரை உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய சதியாளர்கள் குறித்து எழுதும்போது, மஹிந்த 1993ஆம் ஆண்டில் எதிர்க்கட்சி உறுப்பினராக நாடாளுமன்றத்தில் செயற்பட்ட அந்நாளொன்றில் கூறிய மற்றொரு கதை நினைவுக்கு வருகிறது.

"இந்த வேளையில் துணி நெய்யும் தொழிலாளியொருவரின் கதை நினைவுக்கு வருகிறது. அணிபவர் கண்களுக்குத் தெரியாததாம். மற்றவர் கண்களுக்கு மட்டுமே புலப்படத்தக்கதுமான நூதனமான உடுப்பொன்றை அரசருக்கு அணிவிப்பதாக அரசரை ஏமாற்றினான் அந்த துணி நெய்யும் தொழிலாளி. அவனது வார்த்தையை நம்பிய அரசர் கடைசியில் உடலில் ஆடையெதுவுமின்றி வெளியில் சென்று பொது மக்களின் கேலி, கிண்டலுக்கு ஆளாக நேர்ந்தது. ஆதலால் அரசொன்றின் தலைவர் உண்மைநிலை, நாட்டின் யதார்த்தநிலை, பொதுமக்களது வாழ்க்கை நிலை, தமது ஆதரவாளர்களின் உண்மைச் சொரூபம் என்பவை குறித்த தெளிவான நிலைப்பாட்டைத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் உள்ளது" என மஹிந்த அந்த வேளையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

மஹிந்தவும் இந்த நாள்களில் மிக்க அழகாக இருக்கிறதே என எண்ணி குற்றவியல் பிரேரணை என்ற விசித்திரமான ஆடையை அணிந்து கொண்டிருக்கிறார். இந்த ஆடை மிக அழகாக இருக்கிறதெனக் கூறி அதனை யார் மஹிந்தவுக்கு அணிவித்து விட்டுள்ளனரோ தெரியவில்லை. ஆனால் மஹிந்த அந்த ஆடையை அணிந்துகொண்டு செல்லும்போது தெரியும் அழகைக் காண அவர் முன்னால் முகம்பார்க்கும் கண்ணாடியொன்று எடுத்துச் செல்லப்பட வேண்டிய தேவை இனையாது. ஏனெனில் மஹிந்த அன்று கூறிய துணி நெய்பவன் குறித்தகதை, இன்று மஹிந்தவுக்கே தனது உருவத்தைப் பார்க்கத் தக்க கண்ணாடியாகியுள்ளமையே அதற்கான காரணமாகும்.

## எமது கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
07.10.1949

விண்ணில்
03.01.2013

56/04, நாவலர் றோட்,
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்
கொண்ட

### சோமசுந்தரம் சண்முகராசா

மண்ணில் சிரித்தாகி
மலர்ந்த உங்கள் முகம்
விண்ணில் மறைந்த முகம்
நாம் காண - வருந்துகின்றோம்

அன்னாரது பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்கின்றோம்.

சி.கணேஸ்வரன் -சுகந்தி குடும்பம்
சதீஸ் -பத்மினி குடும்பம்
துஷிலன் -றஞ்சினி குடும்பம்
(அவுஸ்திரேலியா)
சிவா குடும்பம்

மணியகாரன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

## கணிதம்

கணிதத்தில் A சித்தி பெறும் வகையில் வீட்டிற்கு வந்து சிறந்த முறையில் கற்பித்துத் தரப்படும்.
தொடர்பு -0775088026

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
30 * 08 * 1947

மறைவு
07 * 12 * 2012

### அமரர் இன்னாசி செபமணி

கடந்த 07.12.2012 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இன்னாசி செபமணி அவர்களின் 31 ஆம் நினைவு நாளில் அன்னாரது ஆத்மா சாந்திக்காக இன்று (07.01.2013) திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு புங்குடுதீவு 1ஆம் வட்டாரம் சவேரியார் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

55A, பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். T.P-0778093278

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு தில்லையம்மா



கைதடி நாவற்குழி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு தில்லையம்மா நேற்று (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், மூகாம்பிகையின் பாசமிகு தாயும், மதியழகனின் மாமியும், வீரசிங்கம், பிள்ளையம்மா, பாலசிங்கம், கண்ணம்மா, கௌரியம்மா, சிறி, லோகராசா, காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், தர்மலிங்கம் (ராசா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாவற்குழி பிண முருங்கை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.மதியழகன் (மருமகன்
மதி தச்சுத் தொழில் நிலையம்)

நாவற்குழி, தெற்கு, கைதடி.

## மரண அறிவித்தல்

### திருமதி சொர்ணபுஷ்பம் பஞ்சலிங்கம்



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணபுஷ்பம் பஞ்சலிங்கம் நேற்று (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (வாத்தியார்) - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு ஏக புத்திரியும், பஞ்சலிங்கத்தின் (ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் - மன்னார்), பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மாணிக்கவாசகர், அருளம்பலம், நவரத்தினம் மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காண்டீபன் (சுவிஸ்), துஷ்யந்தன் (சுவிஸ்), பார்த்தீபன் (சுவிஸ்), தமயந்தி, கவிதா (கனடா), சந்திரிகா (கனடா) ஆகியோரின் அருமைத் தாயும், Dr. அற்புதராஜா (யாழ்/போதனா வைத்தியசாலை), சிவராஜா (கனடா), ஐங்கரன் (கனடா), சுவர்ணானந்தி (லலித்தா- சுவிஸ்), மாலா (சுவிஸ்), ரேணுகா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், முகேஷ்ராம் (ST.John's College), விகாஷினி (சுவிஸ்), பார்கவி (சுவிஸ்), ரிஷிகேஷன் (சுவிஸ்), துளசிகன் (கனடா), மிதுஷன் (கனடா), லக்ஷ்மன் (கனடா), சுவாதி (கனடா), சரிகா (கனடா), அவந்ரிக்கா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.01.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் தாவடி இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
திருமதி தமயந்தி அற்புதராஜா
(மகள்)
0212226294

'லிங்கமகாஸ்'
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(28066)(3)

## மரண அறிவித்தல்

### தம்பிராசா தேவராசா



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா தேவராசா (03.01.2013) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - மாணிக்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், நன்னியர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (லண்டன்), கஜறூபி (லண்டன்), பியாமளா (தேசிய கல்வியற் கல்லூரி, மாணவி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மேந்திராவின் (லண்டன்) பாசமிகு மாமனும், காலஞ்சென்ற ஆனந்ததேவி மற்றும் தவனேஸ்வரி, நாகராசா (யாழ்ப்பாண பல்கலைக்கழகம் நூலக ஊழியர்), காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் சந்திரபவானி (இத்தாலி), மகேந்திரராசா (இத்தாலி), ரேவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இரத்தினம், தம்பிராசா, செல்வராசா காலஞ்சென்ற தேவசந்திரன் மற்றும் குணசேகரம், ஞானசேகரம், சங்கரதாசா, மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (இத்தாலி), தர்சினி (இத்தாலி), மதியழகன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகராணி (மனைவி),
பிள்ளைகள்

கோண்டாவில் வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.7

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 2013 ஆம் ஆண்டுக்கான பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எனவே பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை தவறாது சமூகம் தருமாறு பிரதேச செயலாளர் ஆ.ஸ்ரீ கேட்டுக் கொண்டுள்ளார். (-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.7

வேலணை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 2013 ஆம் ஆண்டுக்கான பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் வேலணை பிரதேச செயலக மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எனவே பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை தவறாது சமூகம் தருமாறு பதில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தரான க.மயூரன் கேட்டுக் கொண்டுள்ளார். (-23)

## பாடசாலை மட்ட உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.7

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (-23)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் -

பி.ப.3.30 மணி- கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் ஆதிசக்தி 'ஏ' அணி

பி.ப.4.30 மணி - கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஆதிசக்தி 'பி' அணி. (ங-23)

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட் கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் வி. க. மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 6 மணி

கோல்டன் பிறதர் விளையாட்டுக் கழகம் எதிர் அல்-இக்பால் வி.க. (-23)



வடமாகாணத்துக்குட்பட்ட பொலிஸ் அணிகளுக்கிடையே அண்மையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அதில் பங்குபற்றிய யாழ். பிரதேச பொலிஸ் அணி கயிறு இழுத்தல் போட்டியில் இரண்டாமிடம் பெற்றது. அதில் பங்குகொண்ட வீரர்களையும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் பிரதேசங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த, யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா, உப பரிசோதகர் குணசேகர ஆகியோரைக் காணலாம். (4)

### இலந்தைத்திடல் இளைஞர் கழக கிரிக்கெட்: சுப்பர் 8 போட்டி

# அம்பாள் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.7

சரசாலை இலந்தைத்திடல் இளைஞர் கழகம் தென்மராட்சி ரீதியில் 7 பேர் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி தொடர் ஒன்றினை நடத்தி வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற லீக் முறையிலான 'சுப்பர் 8' சுற்றில் 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் நுணாவில் அம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் நுணாவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாவகச்சேரி பவர் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சாவகச்சேரி பவர் விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால் முதலில் துடுப்பெடுத்தாடியது நுணாவில் அம்பாள் விளையாட்டுக் கழகம். அம்பாள் அணி வீரர்கள் நிதானமாக ஆடி இலக்கு இழப்பை தவிர்த்தனர். கைவசம் போதுமான இலக்குகள் இருந்ததால் ஓட்டங்களையும் கடைசி தருணத்தில் குவிக்க முடிந்தது. ஆயினும் பவர் விளையாட்டுக்கழகத்தின் சர்மிலன் சிக்கனமாகப் பந்து வீசியதுடன் அம்பாள் அணியின் இலக்குகளையும் சரித்தார். 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அம்பாள் விளையாட்டுக்கழகம் 4 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் டிலக்சன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், ஜெசி 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சாவகச்சேரி பவர் விளையாட்டுக் கழக அணி சார்பில் சர்மிலன் 8 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார்.

65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சாவகச்சேரி பவர் விளையாட்டுக்கழக அணி 3.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 40 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

இதில் கஜீபன் அதிகபட்சமாக 32 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் நுணாவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணியின் சார்பில் நளிர் 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார். (ங-23)

## யங்ஸ்ரார் வெற்றி



வவுனியா, ஜன.7

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட் கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இரு அணிகளும் ஆரம்பத்தில் சம பலத்தோடு மோதிக் கொண்டன. ஆயினும் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியதும் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கைகள் ஓங்கத் தொடங்கின. அந்த அணி வீரர்கள் அடுத்தடுத்து கோல்களை அடித்து அசத்தினர். இதனால் எதிரணியால் வெற்றியை நெருங்க முடியாத நிலை ஏற்பட்டது. இறுதியில் யங்ஸ்ரார் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## அறிவுறுத்தல் கூட்டம்

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களுக்கான 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் வடமராட்சி கல்வி வலய மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் இதில் தவறாது நேர காலத்துடன் சமூகம் தருமாறு வேண்டப்பட்டுள்ளனர். (-23)



காரைநகர் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச முதியோர் தின விழாவை முன்னிட்டு முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன. ஆர்வத்தோடு பலூன் உடைக்கும் போட்டியில் முதியோர்கள். (ங-250)

## பொலிகண்டி பாரதி வி.கவின் மாபெரும் விளையாட்டு விழா

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் 60 ஆவது வருடாந்த மாபெரும் விளையாட்டு விழா கழக மைதானத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தைப் பொங்கல் தினத்தன்று பி.ப1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பாரதி விளையாட்டுக்கழகம் , சனசமூக நிலையம் , பாலர் பாடசாலை ஆகியவற்றின் சுவிஸ், பிரான்ஸ், ஹொலண்ட் , ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ள கிளைகளின் அனுசரணையுடன் இந்த விளையாட்டு விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த விழாவில் கழக வீரர்களுக்கும் வெளிக்கழகங்களுக்கும் என தனித்தனியான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் 200m ஆண்கள் ஓட்டம், 200m பெண்கள் ஓட்டம், 4X400m ஆண்கள் அஞ்சல் ஓட்டம், 4X100m பெண்கள் அஞ்சல் ஓட்டம், கயிறு இழுத்தல், விநோதவுடை போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதே வேளை வெளிக்கழகங்களுக்கான 10 [illegible] எதிர்வரும் 13 ஆம் திகதி [illegible] மணிக்கு நடைபெற உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (-8)

## இமையாணன் மத்தி, வல்வை 'ஏ' உதைபந்தாட்டத்தில் வெற்றியீட்டின

யாழ்ப்பாணம், ஜன.7

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக 'ஏ' அணி , வல்வை விளையாட்டுக்கழக 'ஏ' அணி ஆகியன வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

ஆரம்பத்திலிருந்தே களத்தில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தின் ஆதிக்கமே நிலவியது. கோல் மழை பொழிந்த இமையாணன் மத்தி வீரர்களின் அபார ஆட்டத்துக்கு முன்னால் ஒற்றுமை அணி வீரர்கள் நிலை குலைந்து போயினர். இதனால் ஆட்ட நேர நிறைவில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக 'ஏ 'அணி 5 :0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வல்வை விளையாட்டுக்கழக 'ஏ' அணி, கருணாகரன் அணியின் கடுமையான சவாலை எதிர்கொண்டது. எனினும் பின்னர் சுதாகரித்துக் கொண்டு ஆடிய வல்வை 'ஏ' அணியினர் ஆட்ட நேர நிறைவில் 4:1 என்ற கோல் கணக்கில் கருணாகரன் அணியை வீழ்த்தி வெற்றியைத் தமதாக்கினர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர் ஆஸி வசம்

இலங்கை ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே சிட்னியில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.

கடந்த மூன்றாம் திகதி ஆரம்பமான மேற்படி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 294 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆஸ்திரேலிய அணி 9 இலக்குகளை இழந்து 432 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்திருந்தது. 138 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடத் தொடங்கிய இலங்கை அணி 278 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 278 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் கருணாரட்ண 85 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 60 ஓட்டங்களையும் சண்டிமால் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பில் ஜக்சன் பேர்ட், மிற்சல் ஜோன்சன் தலா 3 இலக்குகளையும் மிற்சல் ஸ்ராக், பீற்றர் சிடில், நதன் லயன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

141 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணியினருக்கு ஆரம்பமே அதிர்ச்சியாகவிருந்தது. ஆஸ்திரேலிய அணி ஓர் ஓட்டத்தையும் பெறாத நிலையிலேயே ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்ணர் லக்மலின் பந்து வீச்சில் ஜெயவர்த்தனவிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார்.

பின்னர் ஹோவனுடன் ஜோடி சேர்ந்த பிலிப் ஹியூஸ் 34 ஓட்டங்களுடன் ஹேரத்தின் பந்து வீச்சில் எல்.பி.பிள்யூ முறையில் ஆட்டம் இழந்தார். அதன்பின் களம் இறங்கிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் ஹோவன் ஜோடி தங்களுக்கிடையே 59 ஓட்டங்களை பகிர்ந்த நிலையில் மைக்கல் கிளார்க் 29 ஓட்டங்களுடன் டில்சானின் பந்து வீச்சில் திரிமன்னேயிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்து ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான ஹோவனும் 36 ஓட்டங்களுடன் ஹேரத்தின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டம் இழந்தார். தொடர்ந்து வந்த மைக்கல் ஹசியுடன் மத்தியூஸ் வேட் ஜோடி சேர்ந்த போதிலும் வேட் 8 ஓட்டங்களுடன் ஹேரத்தின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

தனது கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடிய மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் பெற்ற 27 ஓட்டங்களுடன் ஆஸ்திரேலிய அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்ததுடன் தனது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியையும் வெற்றியுடன் முடித்துக் கொண்டார்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ஹேரத் 3 இலக்குகளையும் டில்சான் மற்றும் லக்மல் ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இலங்கை அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3:0 என்ற கணக்கில் தோற்கடித்து வோர்ண் முரளிதரன் வெற்றிக் கிண்ணத்தை வென்று இலங்கை அணியை White wash செய்து கொண்டது ஆஸ்திரேலிய அணி. ஆஸ்திரேலியாவில் ஒரு டெஸ்ட் போட்டியிலாவது வெல்ல வேண்டும் என்ற இலங்கை அணியின் கனவு இம்முறையும் தகர்ந்து போனது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஜக்சன் பேர்ட்டும் தொடர்நாயகனாக ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இந்தியா ஆறுதல் வெற்றி



இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையே டெல்லி பெரோசா ஹோட்லா மைதானத்தில் நேற்று நடைபெற்ற பரபரப்பான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஆறுதல் வெற்றி பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 இருபதுக்கிருபது போட்டிகளிலும் 3 சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கு பற்றி வருகின்றது. இதில் இருபதுக்கிருபது போட்டித் தொடர் சமநிலையில் முடிந்து போக ஒரு நாள் போட்டித் தொடரின் முதல் இரண்டு போட்டிகளையும் பாகிஸ்தான் அணி ஏற்கனவே வென்று தொடரைக் கைப்பற்றியிருந்தது.

அதனால் இன்றைய போட்டியிலாவது இந்தியா ஆறுதல் வெற்றி பெறுமா என இந்திய ரசிகர்கள்ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற நேற்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இந்திய அணியில் சேவாக் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக ரஹானே ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக கம்பீருடன் களமிறங்கினார். ஆரம்பம் முதலே இந்திய அணியின் இலக்குகள் சீரான இடைவெளியில் விழுந்து கொண்டே இருந்தன. ரஹானே 4 ஓட்டங்களுடனும் விராட் கோலி 7 ஓட்டங்களுடனும் கம்பீர் 15 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்து பவிலியன் திரும்பினர்.

பின்னர் யுவராஜ்சிங்குடன் களமிறங்கிய சுரேஸ் ரெய்னா நிதானமாக ஆடினார். இந்நிலையில் யுவராஜ்சிங் முஹமட் ஹபீஸின் பந்து வீச்சில் 23 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த டோனி ரெய்னாவுடன் சேர்ந்து அணியை மீட்டெடுக்க முயன்ற போதிலும் 31 ஓட்டங்களைப்பெற்றிருந்த ரெய்னா சயீட் அஜ்மலின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அஸ்வினையும் அஜ்மல் ஓட்டம் எடுக்காமலேயே திருப்பி அனுப்பினார்.

டோனி 3 சிக்ஸர்கள் அடங்கலாக 36 ஓட்டங்களுடன் உமர்குல்லின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த ஜடேஜா போராடிய பொழுதும் அஜ்மல் அவரையும் விட்டு வைக்கவில்லை. 27 ஓட்டங்களுடன் அவரும் வெளியேறினார். இறுதியில் அஜ்மலின் சுழலை சந்திக்க முடியாத இந்திய அணி 43.4 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 167 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணியின் அஜ்மல் 9.4 பந்து பரிமாற்றங்களில் ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றம் அடங்கலாக 24 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளை வீழ்த்தினார். முஹமட் இர்பான் 2 இலக்குகளையும் உமர்குல், ஹபீஸ் மற்றும் ஜுனைட்கான் ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான நஸீர் ஜம்ஷெட்டுடன் இம்முறை கம்ரன் அக்மல் ஜோடி சேர்ந்தார். ஆனாலும் ஓர் ஓட்டத்துடனேயே புவனேஸ்வர் குமாரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த யுனிஸ்கானையும் நிலைத்து நின்று ஆடவிடாமல் புவனேஸ்வர் குமார் 6 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழக்கச்செய்தார்.

14 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 2 இலக்குகளை இழந்து தடுமாறிய பாகிஸ்தான் அணியினருக்கு நஸீர் ஜம்ஷெட் மிஸ்பா உல்ஹக் ஜோடி நிதானமாக ஆடி அணியின் எண்ணிக்கையை உயர்த்தத் தொடங்கினர். இந்நிலையில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த நஸீர் ஜம்ஷெட்டையும் 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த மிஸ்பா உல்ஹக்கையும் அஸ்வின் தனது பந்து வீச்சில் ஆட்டமிழக்கச் செய்தார். அடுத்து வந்த சொகைப் மலிக்கை 5 ஓட்டங்களுடன் இஷாந் சர்மா வெளியேற்றினார். தொடர்ந்து வந்த உமர் அக்மல் 25 ஓட்டங்களில் ஜடேஜாவின் பந்து வீச்சில் டோனியால் ஸ்ரம்ப் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ஹபீஸ் ஒரு முனையில் போராடி வந்தாலும் மறுமுனையில் இலக்குகள் சரிந்த வண்ணம் இருந்தன இறுதியில் ஹபீசும் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் 157 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக இஷாந் சர்மா 3 இலக்குகளையும் புவனேஸ்வர் குமார், அஸ்வின் தலா 2 இலக்குகளையும், ஜடேஜா மற்றும் சமி அஹமட் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**German Language Acad-**

ஜேர்மன் டொச் மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு கற்பித்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு -0779707322

| No-23, Palaly Road, Jaffna. | 181, Ist Floor, Jaffna Road, Nelliady |
|---|---|

(Frencc மொழிகளும் கற்பிக்கப்படும்)

# சானியா சம்பியன்



பிரிஸ்பேன்,ஜன.7

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரில் இந்தியாவின் சானியா மிர்சா மற்றும் பெத்தானியே மேடக் இணை மகளிர் இரட்டையர் பிரிவில் சம்பியனானது.

அவுஸ்திரேலியாவின் பிறிஸ்பேன் நகரில் நடைபெற்ற இந்தத் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவின் இறுதியாட்டத்தில் சானியா மிர்சா இணை ஜெர்மனியின் அனலினா - கிவாட்டாபெசக் இணையை எதிர் கொண்டது. இதில் முதல் செற்றை 4:6 என்ற புள்ளிகளில் இழந்த சானியா இணை அடுத்த இரண்டு சுற்றுக்களிலும் 6:4, 10:7 என்ற ரீதியில் வெற்றி கொண்டு சம்பியனானது.

சானியா மிர்சா கைப்பற்றிய 15 ஆவது சர்வதேச ரென்னிஸ் வெற்றிக் கிண்ணம் இதுவாகும்.

**ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்**
555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கைலாய பிள்ளையார் கோவில் அருகில்)

**வேலையாட்கள் தேவை**

கணனி அனுபவம் உள்ளவர்கள் (இருபாலரும்)
Tamil, English Typing, Page Maker, Photo Shop, Corel Draw தெரிந்தவர்கள்.
Cord Mechine பழக விரும்புபவர்கள் (ஆண்கள்)
சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.

ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ் 555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P : 0777917680
சகலவிதமான அச்சக வேலைகளும் சிறந்த முறையில், குறைந்த விலையில் விரைவாக செய்து பெற்றுக் கொள்ள முடியும்

# மரண அறிவித்தல்



## *சின்னத்தம்பி சின்னத்துரை*

நாகலிங்கம் சுவாமிகள் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், 37/3 கலைமகள் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை நேற்று (06.1.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், யசோதரன் (ஆசிரியர் - கொ/ பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), கஜேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலசாமி, சிவக்கொழுந்து, சொர்ணம், நேசம்மா, நாகரத்தினம் ஆகியோரின் சகோதரனும், இராஜேஸ்வரன், மஞ்சுளாதேவி ஆகியோரின் மாமனும், துஷாந்த், டிலோஜன், கஜிந்த், ஹர்னி, சஜிந்த் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2013) திங்கட்கிழமை மு.ப 10.0 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/3 கலைமகள் வீதி, கல்வியங்காடு. தகவல்: குடும்பத்தினர்.

2012 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே !!

கணனி மற்றும் முகாமைத்துவக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 1 : **07.01.2013**
பிரிவு 11 : **12.01.2013**
காலை 10.00மணி

இப் பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளும் அதேவேளை Flash Memory ஒன்றினையும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

**Lake land Inter American School**
Montessori & day care centre (English medium)

In the-Montessori, education is imparted on an indiviual basis using educational activities and material according to the Association Montessori International (AMI) method of education incorporated with the Primary method by doing handwork & craft in the class.




**Our Vision:**
To become a model school which transforms personalities into academically sound,physically healthy,Multi-skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

Address: No 154, Brown Road, Jaffna
T.P. 021 - 2228700 / 021 - 2226242
Fax: 021-2225600
E-Mail: aerolankajaf@gmail.com

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
**2013 புதுவருடத்தை முன்னிட்டு**
BCHS
விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத் தரங் கொண்ட கற்கை நெறிகள்

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

**Spoken English With Grammar - Quick Learning Course** *(1 1/2 Months)*
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிறபகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** *(2 Months)*
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exm - Sponsor/Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள்
Batch I : 07-01-2013
Batch II : 12-01-2013
Batch III : 14-01-2013
Batch IV : 19-01-2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

**வெளிவருகின்றது வெற்றித்தேர்வு**
2013ஆம் ஆண்டிற்கான நாடளாவிய வெளியீடுகள் வெளிவருகின்றன.
மேலதிக விபரங்களுக்கு பக்கம் 19ஐப் பார்க்க

**நெல்லியடிச் சந்திக்கு அருகாமையில் கடை வாடகைக்கு**
சகல வசதிகளுடன் கொடிகாம வீதியில் இரு கடைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு- 0212263208

**CIMA**
**கல்வி**
@
CAPSTONE
0771 250 350
No. 154,A/1, Navalar Road, Jaffna.

**வீடு வாடகைக்குண்டு**
6 அறைகளுடன் சமையலறை வசதி கொண்ட, இணைந்த குளியலறை வசதிகளுடன் விசாலமான வீடும், வாகனத்தரிப்பிட வசதிகள் கொண்டதுமான ஏ - 9 வீதிக்கு அருகில் அரியாலை தபாற் கட்டைச் சந்தியில் வீடு வாடகைக்குண்டு.
அரச, தனியார் நிறுவனங்களும், தொழில்சார் நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
விபரங்களுக்கு:
0773126807

**வேலை வாய்ப்பு**
Computer Hardware Technician
இரவு நேரத்தில் பணிபுரியக்கூடியவர்கள் உடன் தேவை.
★ Computer Repair
★ Networking
ஆகியவற்றில் அனுபவம் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
சுயவிவரங்கள் கொண்ட விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:



பொதுமுகாமையாளர்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சி நெறி**

உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளும் 2-4 வயதுக்குள் தம் தாய் மொழியைப் பேசப் பழகுகின்றன. 2 வருடத்திற்குள் குழந்தைகள் ஒரு மொழியைப் பேசப் பழகுகையில், பெரியவர்களான உங்களால் இன்று வரை ஏன் ஆங்கிலத்தைப் பேசப் பழக முடியவில்லை? இலக்கண வழியில் ஆங்கிலத்தைப் படித்தமையே காரணமாகும்.

எமது பயிற்சி வகுப்புக்களில் தமிழ் தொடர்பற்ற ஒரு வழியில் (Method) மனதை ஆங்கிலத்தில் மட்டும் சிந்திக்க வைத்து அதை மற்றைய மாணவர்களுடன் பேச விடுவதன் மூலம் மிக எளிதாகவே எல்லோராலும் ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆங்கிலம் மனதிற்கு இயல்பாக்கப்படுகிறது.

அரச, தனியார் ஊழியர்கள், உயர்கல்வி மாணவர்கள் இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள் மற்றும் 12 வயதுக்கு மேற்பட்டோர் 12.01.2013 இல் தொடங்கும் புதிய பிரிவுகளில் இணைய முடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I : 08 - 10
பிரிவு II: 10 - 12
பிரிவு III : 01 - 03
பிரிவு IV: 03 - 05

பயிற்சிக் கட்டணம்:
3000.00

பயிற்சி நெறி முடிவில் Diploma Certificate வழங்கப்படும்.

SAAMSON ENGLISH
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்.
0776214367

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org